# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

பக்கங்கள் - 28

விலை - 30ரூபா

சுடர் 34 கதிர் 316 புரட்டாதி 24ஆம் நாள் வெள்ளிக்கிழமை 11 ஒக்ரோபர் 2019 வள்ளுவர் ஆண்டு 2050


# குடும்ப - இராணுவ - அடிமை ஆட்சிக்கு நான் ஒருபோதும் இடமளிக்க மாட்டேன்



## மக்கள் முன்னிலையில் சஜித் வாக்குறுதி

கொழும்பு, ஒக்டோபர், 11
எதிர்வரும் அரச தலைவர் தேர்தலில் நாட்டின் பாதுகாப்பா அல்லது ஒரு குடும்பத்தின் பாதுகாப்பா என்பதை யோசியுங்கள். குடும்ப - இராணுவ - அடிமை ஆட்சி அவசியம் இல்லை. இதற்கு ஒருபோதும் நான் இடமளிக்கமாட்டேன் இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான தேசிய ஜனநாயக முன்னணியின் அரச தலைவர் வேட்பாளர் 25

# கொலைகாரன் வேண்டுமெனின் கோத்தாவுக்கு வாக்களியுங்கள்!

## காலிமுகத்திடலில் மக்கள் வெள்ளத்தின் முன் போட்டுத் தாக்கினார் ஐ.தே.க தலைவர் ரணில்

கொழும்பு, ஒக். 11
நாட்டு மக்களைக் கொலைசெய்யும் தலைவன்தான் வேண்டுமென்றால் கோத்தபாய ராஜபக்சவுக்கு வாக்களியுங்கள் – இவ்வாறு தெரிவித்தார் தலைமை அமைச்சரும் ஐ.தே.க தலைவருமான ரணில் விக்கிரமசிங்க. 25



## வாக்குச் சீட்டுக்கள் அச்சிடப்படுகின்றன

கொழும்பு, ஒக்.11
அரச தலைவர் தேர்தலுக்கான வாக்குச் சீட்டுகள் அச்சிடும் பணி நேற்றுமுன்தினம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று அரச அச்சக பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். 25

## இராணுவத்தினர் 7,210 பேருக்கு பதவி உயர்வு

கொழும்பு, ஒக். 11
இலங்கை இராணுவத்தின் 70ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு இராணுவ அதிகாரிகள் மற்றும் ஏனைய உறுப்பினர்கள் உள்ளடங்களாக 7 ஆயிரத்து 210 பேருக்கு பதவி உயர்வுகள் வழங்கப்பட்டுள்ளன.
இதில், 210 இராணுவ அதிகாரிகளும், 7 ஆயிரம் ஏனைய 25

## புலிகளை மீளுருவாக்க முயன்ற குற்றச்சாட்டில் மலேசியாவில் ஏழு பேர் கைது

கொழும்பு, ஒக். 11
விடுதலை புலிகள் அமைப்பை மீளுருவாக்கம் செய்ய முற்பட்ட குற்றச்சாட்டில் மலேசியாவில் இரு அரசியல்வாதிகள் உட்பட 7 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.
கடந்த வருடம் நவம்பர் மாதம் முதல் அவர்களை கண்காணித்து மேற்கொண்டுவந்த விசாரணைகளின் அடிப்படையில் அவர்கள் கைது செய்யப்பட்டனர் என்று மலேசிய பயங்கரவாத தடுப்பு பிரிவின் தலைவர் அயோப் கான் தெரிவித்துள்ளார்.
இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் விடுதலைப் புலிகளுக்கு நிதி சேகரிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர் என்றும் பயங்கரவாத தடுப்பு பிரிவின் தலைவர் கூறியுள்ளார். (ம)

## நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவேன்!

### சஜித் முன் பொன்சேகா சபதம்

கொழும்பு, ஒக். 11
'நாட்டின் தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்த எனக்குத் தந்த பொறுப்பை நான் மதிக்கின்றேன். அந்த எதிர்பார்ப்பை நான் நிறைவேற்றுவேன். உங்களின் - நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் நான் செயற்படுவேன். இராணு 25

## பாதுகாப்பைப் பலப்படுத்தும் பொறுப்பு பொன்சேகாவுக்கே

### அவர் முன்னிலையில் சஜித் உறுதி

கொழும்பு, ஒக். 11
'நான் அரச தலைவர் தேர்தலில் வெற்றிபெற்றதும் தேசிய பாதுகாப்பை பலப்படுத்தும் உறுதிப்படுத்தும் பொறுப்பு 25

## வவுனியா மருத்துவமனையில் சிறுவனின் மறைவையடுத்து உறவுகளால் நேற்றுப் பதற்றம்

வவுனியா, ஒக். 11
சுகவீனம் காரணமாக வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட ஜெயச்சந்திரன் டிலக்சன் என்ற சிறுவன் 25

## வவுனியாவில் எரியூட்டப்பட்ட நிலையில் இளைஞனின் சடலம் மீட்பு

### கடத்திச் செல்லப்பட்டு அடித்துக் கொன்றபின் பெற்றோல் ஊற்றிக் கொலை எனச் சந்தேகம்

வவுனியா, ஒக். 11
வவுனியாவில் இளம் குடும்பத் தலைவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். எரியூட்டப்பட்ட நிலையில் சடலம் மீட்கப்பட் 25



## சுற்றாடலை பாதுகாக்கும் உறுதிமொழியை தேர்தல் மேடைகளுடன் கைவிடுதல்கூடாது

கொழும்பு, ஒக். 11
சுற்றாடலைப் பாதுகாக்கும் உறுதிமொழி தேர்தல் மேடைகளுடன் மட்டுப்படுத்தப்படாது. அவற்றை உரிய முறையில் நடைமுறைப்படுத்துவதற்கு அதிகாரத்துக்கு வருகின்ற தலைவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன 25




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## ஜயோதா

உத்தியோகபூர்வ முடிவுகள்

| சீட்டிழுப்பு வாரம் | சீட்டிழுப்பு திகதி |
|---|---|
| 1611 | 10.10.2019 |

வெற்றி இலக்கங்கள்: 01 04 38 58 G

அடுத்தசெவ்வாய் கிழமைக்கான ஜக்பொட் ரூ.39, 025, 008 /=

தொ.பே: 011 4052002 / 0114052062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>JY என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

## ராசி அதிர்ஷ்டம்

| திகதி | வெற்றி வாரம் | வர்ணம் |
|---|---|---|
| 10.10.2019 | 2643 | கபிலம் |

சிம்மம்

வெற்றி இலக்கங்கள்: 02 14 19 20

வெள்ளிக் கிழமை வெற்றிப் பொதி ரூ. 2,882,812/=

11.10.2019 ம் திகதி வெள்ளிக் கிழமை கடும்நீல நிற டிக்கட்டுக்களாகும்

வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்

தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

## அத கோடிபதி

ADA KOTIPATHI

சீட்டிழுப்பு இல: 757
வர்ணம் : நீலம்
சீட்டிழுப்பு திகதி: 2019.10.10

இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 53,070,825/-

வெற்றி இலக்கங்கள்: 02 21 34 74 C

SEASON

விசேட வெற்றி இல. 9197

தொலைபேசி: 0112 333 546-47 துரித அழைப்புக்கு: 0114 824 824, 0112 333 778 or 1919


## ஞாபகார்த்த அஞ்சலிக் கூட்டம்

முன்னாள் காங்கேசன் சீமெந்து பொதுத் தொழிலாளர்
யூனியனின் நீண்டநாள் தலைவர்

### அமரர் ச.கணபதிப்பிள்ளை

அவர்கள் 12.09.2019 அன்று அமரத்துவமானதை முன்னிட்டு 13.10.2019 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் சீமெந்து தொழிற்சாலை மாவைக் கந்தன் அன்னதான சபை மண்டபம் (மாவிட்டபுரம் கந்தசாமி கோயில் வடக்கு வீதி) இல் அஞ்சலிக் கூட்டம் இடம்பெறும்.

இந்த நிகழ்வுக்கு யூனியன் அங்கத்தவர்கள், தொழிற்சங்க பிரமுகர்கள், நலன்விரும்பிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(CS 28615)

முன்னைநாள் யூனியன் அங்கத்தவர்கள்,
காங்கேசன் சீமெந்து தொழிற்சாலை, சீமெந்து பொது தொழிலாளர்
காங்கேசன்துறை யூனியன் சார்பாக ந.பழனிவேல்

## 15 தமிழ் வார்த்தைகள் ஒளிந்துள்ளன கண்டுபிடியுங்கள்

| | | |
|---|---|---|
| டி | த | ம் |
| க | ய் | ல் |
| ஒ | ட | வு |


## MAJESTIC CINEPLEX




| Jaffna Bronze | Jaffna Platinum |
|---|---|
| 1.15PM \| 7.15PM | 10.30AM \| 1.30PM \| 4.30PM 7.30PM \| 10.30PM (Fri/Sat) |
| Jaffna Silver | Jaffna Silver |
| 1.45PM \| 7.45PM \| 10.30PM | 10.45AM \| 4.45PM |
| Jaffna Bronze | Jaffna Bronze |
| 10.15AM \| 10.15PM (Fri/Sat) | 4.15PM |

மேலதிக விபரங்கள் தொடர்பாக அழையுங்கள் 011 5 999 999

CEYLON THEATRES Since 1928
www.ceylontheatres.lk
MajesticCineplexSL

## MASSIVE VEHICLES AUCTION SALE



**15th of October**

LOLC VEHICLE FACILITY CENTRE
NO.363, MANNAR ROAD, VEPPANKULAM

**VAVUNIYA**

Thimothi - 0766 58 23 29
Nelum - 0245 11 81 81

**On View – 11th, 12th & 14th October**

(Please refer the Udayan On 10th of October 2019
For the Full List Of Vehicles)

LOLC FINANCE

SCHOKMAN & SAMERAWICKREME
*One Country. One Auctioneer. Celebrating 127 Years of Service Excellence.*

Head Office & Showroom: 24, Torrington Road, Kandy. Tel: 081 2227593. Fax: 081 2224371 Email: schokmankandy@sltnet.lk

City Office & Showroom: No.6A, Fairfield Gardens, Colombo 8. Tel: 011 2502680, 2585408, Tel / Fax: 011 2588176 Email: schokman@samera1892.com

Web: www.sandslanka.com





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சஜித்தின் தலைமைத்துவத்தில் தகுதியானவருக்கு தகுதியான இடம்

சஜித் பிரேமதாச எப்பொழுதும் நாட்டின் முன்னேற்றத்திற்காக பாடுபடுகின்றார் என்பதனை அவரது அரசியல் வாழ்க்கை முழுவதும் சிறப்பாக எடுத்துக்காட்டி உறுதி செய்த திறமைமிக்க தலைவர் ஆவார்.

வெறும் வெற்று வாக்குறுதிகளை வழங்காமல் நேர்மையான, தகுதிமிக்க ஒருவருக்கு தகுதியான இடத்தை வழங்க நடவடிக்கை எடுத்திருக்கும் துணிச்சல்மிகு தலைவர்.

நாட்டின் பாதுகாப்பை பேணிக்காப்பது தொடர்பில் அதிக திறமை மற்றும் அதீத அனுபவத்தை கொண்டிருக்கும் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா அவர்களுக்கு நேற்றைய தினம் காலிமுகத்திடலில் இடம்பெற்ற மக்கள் பேரணியில் சஜித் பிரேமதாச அவர்கள் தேசிய பாதுகாப்பிற்கான பொறுப்பினை வழங்கி, தகுதியானவருக்கு தகுதியான இடத்தை கொடுக்கும் திறனாற்றல் மிக்க தலைவர் என்பதை தொடர்ந்தும் நிரூபித்துக் காட்டி உள்ளார்.

சஜித்தின் இளமையும் அனுபவமும் மிக்க தலைமைத்துவத்தின் கீழ் உரியவருக்கு உரிய இடம் அளிக்கப்பட்டுள்ளதுடன் அவர் மனித வளத்தை நாட்டிற்கு மிகவும் பயனளிக்கக்கூடிய வகையில் முகாமைத்துவம் செய்துள்ளார் என்பது அவரின் இத்தீர்மானத்திலிருந்து புலப்படுகின்றது.

## உண்மையான போர் வீரர் தேசிய பாதுகாப்பிற்கு உறுதியளித்தார்

30 வருட கொடூர யுத்தத்தின் மிக சிக்கலான காலத்தில் இராணுவத்திற்கு தலைமைத்துவம் வகித்த அஞ்சா நெஞ்சம் கொண்ட இராணுவத் தளபதி.

தீவிரவாதிகளின் இலக்காகவே மாறிய இவர், தனது வாழ்வை இழக்க நேரிட்ட போதிலும் அச்சமின்றி, துணிச்சலாக திறமையாக நாட்டின் பாதுகாப்பை முதன்மைப்படுத்தி இராணுவத்தை சிறப்பாக இயக்கிய தலைவர் ஆவார்.

நாட்டின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு எப்பொழுதும் திறமையுடன் செயற்பட்டு, 30 வருட கால கொடூர யுத்தத்தில் இருந்து முழு இலங்கைக்கும் சுதந்திரத்தை பெற்றுக் கொடுத்த தனித்துவமிக்க இராணுவ படைத்தளபதி **பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா அவர்கள்** சஜித் பிரேமதாச அவர்களின் வருங்கால ஜனாதிபதி பதவியின் கீழ் நாட்டின் பாதுகாப்பை உறுதி செய்வதாக உத்தரவாதம் அளிக்கிறேன்.

என்று நேற்றைய தினம் இடம்பெற்ற ஒன்றாய் முன்னோக்கிய மாபெரும் மக்கள் பேரணியின் போது தெரிவித்தார்.




## ஒன்றாய் முன்னோக்கி நாட்டை வெல்லப் போகும் தேசியப் படையின் அபார வெற்றி முரசொலி

புதிய ஜனநாயக முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாச தலைமையில் நேற்று காலிமுகத்திடலில் இடம்பெற்ற ஒன்றாய் முன்னோக்கி செல்லும் வெற்றிகரமான மக்கள் பேரணியில் 5 இலட்சத்திற்கும் மேற்பட்ட பாரிய மக்கள் கூட்டத்தின் பங்கேற்புடன் உணர்ச்சி மிக்கதாக அபார வெற்றி முரசொலியுடன் நிறைவேறியது.

இப்பேரணியில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அவர்கள் உட்பட ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவர்கள் சஜித்தின் வெற்றிக்காகவும் மக்களுக்காகவும் உரையாற்றினர்.

சஜித் பிரேமதாசவின் எதிர்கால இலட்சியம் தொடர்பான மிக முக்கிய விடயங்கள் பல இப்பேரணியில் மக்களுக்கு தெளிவுபடுத்தியமை மற்றொரு சிறப்பான விடயம் ஆகும்.

## போதைப் பொருள் அச்சுறுத்தலை ஒழிக்கும் பொறுப்பு பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா அவர்களுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீடு வாடகைக்கு உண்டு

பெரியவிளான் பிரதான வீதியில் நிறுவனங்கள் இயக்கக்கூடிய பெரிய வீடு வாகனத் தரிப்பிட வசதிகளுடன் வாடகைக்கு உண்டு. சிறிய குடும்பங்களும் தொடர்பு கொள்ளலாம். (CS 28613)

**076 032 0633/077 716 1842**

---

யா/ மகாஜனக்கல்லூரி, தெல்லிப்பழை
தரம் - 06 அனுமதி - 2020
(தமிழ் / ஆங்கில மொழி மூலம்)

**2020ஆம் ஆண்டு தரம் 6 இல்** அனுமதிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. அலுவலக நேரத்தில் விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

முடிவுத் திகதி:- 31.10.2019

(IN/11434)(11,17) - அதிபர் -

---

## வேலையாள் தேவை

உடுவிலில் இயங்கும் **Photo Copy, Phone Shop** ஒன்றுக்குப் பெண்வேலையாள் தேவை.

**077 831 85 55** (CS 28624)(11,17)

---

## வீடு வாடகைக்கு

வவுனியா தோணிக்கல் பகுதியில் அமைதியான சூழலில் நவீன வசதிகளுடன் இணைந்த குளியல் அறையுடனான வீடு வாடகைக்கு உண்டு.

**024 222 2289, 076 322 3687**

---

## வீட்டுக்கிருத்திய அழைப்பு

அமரர்
**சின்னராசா அழகம்மா**



கடந்த 11.09.2019 புதன்கிழமை சிவபதமடைந்த **அமரர் சின்னராசா அழகம்மா** அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் 11.10.2019 வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள் ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.**

தோற்றம் 06.07.1933 — மறைவு 11.09.2019

செ. குணபாலசிங்கம் (குணம்)
வன்னியசிங்கம் வீதி.
கைதடி வடக்கு. கைதடி.

குடும்பத்தினர்
0772321912

---

1st Death Anniversary of Late

## *S. Sanmugam Navaratnam*

(27.03. 1951-11.10.2018)



**Vice President, English Association of Vavuniya**
Officer, People's Bank, International Division, Colombo.
**Visiting Lecturer,**
Technical College, Vavuniya,
Vavuniya Campus, University of Jaffna

With respectful floral Tribute from
**English Association of Vavuniya**

---

## கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாண பல்கலைக்கழக புவியியற்றுறையில் ஆய்வுகூட உதவியாளராகக் கடமையாற்றும் **திருமதி தர்சிகா** அவர்களின் அன்புத் தாயார்

திருமதி **மாணிக்கம் சிவலோன்மணி**

அவர்கள் 09.10.2019 அன்று இறைபதம் அடைந்துள்ளார் அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**புவியியற்றுறை சமூகம்,**
**யாழ். பல்கலைக்கழகம்.** (cs 28618) (13)

---

# நானாட்டான் பிரதேச சபை
# கேள்வி அறிவித்தல் - 2020

நானாட்டான் பிரதேச சபையின் நிர்வாக எல்லைக்குட்பட்ட மாட்டிறைச்சிக்கடை, கோழி இறைச்சிக்கடை, மீன் கடை, வாராந்தச் சந்தை போன்றவற்றை 2020 ஆம் ஆண்டிற்கு குத்தகைக்கு வழங்குவதற்கான (01.01.2020 – 31.12.2020) கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப் பத்திரம் வழங்கப்படும் திகதி :- 11.10.2019 - 04.11.2019 பி.ப. 2.00 மணி வரை
கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதி :- 04.11.2019 பி.ப. 2.30 மணி வரை
கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும் திகதி :- 04.11.2019 பி.ப. 2.30 மணி

கேள்விப் பிணைப்பணம், கேள்விப் பத்திரக்கட்டணம் ஆகியவைகளை பிரதான அலுவலகத்தில் செலுத்தி கேள்விப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்வி விண்ணப்பங்கள் பூர்த்தி செய்யப்பட்டு "தலைவர் / செயலாளர், நானாட்டான் பிரதேச சபை, நானாட்டான்" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ கையளிக்கலாம். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "……………… கேள்வி 2020" எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதியாகிய 04.11.2019 பி.ப. 2.30 மணிக்குப் பின்னர் கிடைக்கும் கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

விண்ணப்பப்பத்திரங்கள் 04.11.2019 ஆம் திகதி பிற்பகல் 2.30 மணிவரை ஏற்றுக்கொள்ளப்பட்டு கேள்விகள் உடனே நானாட்டான் பிரதேச சபை பிரதான அலுவலகத்தில் வைத்து திறக்கப்படும். இச் சந்தர்ப்பத்தில் கேள்வியாளர்கள் அல்லது அவரது அனுமதிக்கப்பட்ட கடிதத்துடன் பிரதிநிதிகள் உடன் இருக்க அனுமதிக்கப்படுவார்கள்.

சித்திகரமான கேள்விக்காரர் 2020ம் ஆண்டிற்கு நானாட்டான் பிரதேச சபை இறைச்சிக்கடைகளில் இறைச்சி விற்பனை செய்வதற்கு கேள்விச் சபையால்/ அரச விலைக் கட்டுப்பாட்டு திணைக்களத்தினால் தீர்மானிக்கின்ற விலைகளில் இறைச்சி விற்பனை செய்யப்படல் வேண்டும்.

நானாட்டான் பிரதேச சபையினால் கேள்விகளை ஏற்கும் அல்லது நிராகரிக்கும் உரிமை தலைவருக்கும், கேள்விச் சபைக்கும் உரியது. குத்தகை நிலுவைகளை கொண்டிருப்போர் கேள்வி கோர அனுமதிக்கப்படமாட்டார்கள். கேள்விகள் தொடர்பான மேலதிக விபரங்களை நானாட்டான் பிரதேச சபையின் பிரதான அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

| இல | குத்தகை விபரம் | கேள்விப் பத்திரக் கட்டணம் | கேள்வி வைப்பு | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை | மாதாந்த கடை வாடகை |
|---|---|---|---|---|---|
| நானாட்டான் உப அலுவலகம் | | | | | |
| 1 | மாட்டிறைச்சிக்கடை, நானாட்டான் | 1,000.00 | 7,500.00 | 377,300.00 | 500.00 |
| 2 | மாட்டிறைச்சிக்கடை, அளவக்கை | 1,000.00 | 5,300.00 | 267,300.00 | 500.00 |
| 3 | மாட்டிறைச்சிக்கடை, இலந்தமோட்டை | 1,000.00 | 1,900.00 | 96,800.00 | 500.00 |
| 4 | கோழி இறைச்சிக்கடை, நானாட்டான் | 1,000.00 | 8,000.00 | 402,600.00 | 500.00 |
| 5 | மீன் கடை, நானாட்டான் | 1,000.00 | 200.00 | 11,000.00 | |
| முருங்கன் உப அலுவலகம் | | | | | |
| 1 | மாட்டிறைச்சிக்கடை, பரிகாரிகண்டல் | 1,000.00 | 6,500.00 | 325,600.00 | 500.00 |
| 2 | மாட்டிறைச்சிக்கடை, சிறுக்கண்டல் | 1,000.00 | 8,200.00 | 411,400.00 | 500.00 |
| 3 | வாராந்த பொதுச்சந்தை ( பேருந்து நிலையத்திற்கு முன்) | 1,000.00 | 1,000.00 | 48,000.00 | |
| 4 | வாராந்த பொதுச்சந்தை வைத்தியசாலைக்கு முன்) | 1,000.00 | 1,000.00 | 48,000.00 | |
| வங்காலை உப அலுவலகம் | | | | | |
| 1 | மாட்டிறைச்சிக் கடை இல - 01 வங்காலை | 1,000.00 | 8,100.00 | 407,000.00 | 500.00 |
| 2 | மாட்டிறைச்சிக் கடை இல - 02 வங்காலை | 1,000.00 | 7,400.00 | 369,600.00 | 500.00 |
| 3 | கோழி இறைச்சிக் கடை, வங்காலை | 1,000.00 | 3,800.00 | 192,500.00 | 500.00 |
| 4 | வங்காலை மீன் கடை | 1,000.00 | 1,000.00 | 52,800.00 | |

நானாட்டான் பிரதேச சபை
நானாட்டான்
11.10.2019 (13)

திரு. தி.பரஞ்சோதி,
தலைவர்,
நானாட்டான் பிரதேச சபை

---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் **வாரித்தம்பி ஞானகலாவல்லி**
(ஓய்வுபெற்ற ஆங்கில ஆசிரியை, யா/ வீரசிங்கம் மத்திய கல்லூரி)



திதி:- 11.10.2019
பூர்வபக்க திரியோதசி

ஆண்டுகள் ஒன்று சென்றாலும்
உங்கள் நினைவுகள்
எமது மனதை என்றும்
விட்டகலாது
அன்புக்கும் பாசத்துக்கும்
வரைவிலக்கணமாய்
அறிவின் சிகரமாய்
உயர்ந்து நின்ற அன்புத்
தெய்வத்தின் ஆத்மா
சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

தோற்றம் 16.09.1933 — மறைவு 22.10.2018

"பரணி" மீசாலை வடக்கு,
கொடிகாமம். (ACH/690)(11,17)

குடும்பத்தினர்.

---

## அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு



கடந்த 13.09.2019ஆம் திகதி சிவபதமடைந்த எனது அன்பு மகள்

செல்வி
**இராசதுரை மீரா**
(பட்டதாரி பயிலுனர், பிரதேச செயலகம், நல்லூர்)

தோற்றம் 01.11.1979 — மறைவு 13.09.2019

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 11.09.2019 ஆம் திகதி கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நடைபெற்றதன் பின்னர் 13.10.2019ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணியளவில் சபிண்டீகரணக் கிரியையும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் பருத்தித்துறை வீதி புத்தூரில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெறவிருக்கிறது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து ஆத்ம சாந்தி பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் பங்குபற்றுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(CS/28556)

க.இராசதுரை
ஓய்வுபெற்ற யாழ்.கச்சேரி நிர்வாக உத்தியோகத்தர், முன்னாள் வடமாகாணசபை முதலமைச்சரின் பிரத்தியேக செயலாளரும் குடும்பத்தினரும்

பருத்தித்துறை வீதி.
புத்தூர் கிழக்கு, புத்தூர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யா/ஏழாலை மேற்கு சைவசன்மார்க்க வித்தியாசாலை

## நூற்றாண்டு விழா - 2019

**காலம் :- 11.10.2019**
**இடம்:- கந்தசாமி அரங்கு நேரம் :- பி.ப. 1.00 மணி**

**தலைமை:-**
திரு.க.கெங்காதரகீர்த்தி
அதிபர், ஏழாலை மேற்கு சைவசன்மார்க்க வித்தியாசாலை

**ஆசியுரை:-**
சிவஸ்ரீ சுந்தர செந்தில்ராஜக்குருக்கள்

**பிரதம விருந்தினர்:-**
பேராசிரியர் க.கந்தசாமி
பௌதீகவியல்/ தகுதி வாய்ந்த அதிகாரி
யாழ்ப்பாணப் பல்லைக்கழகம்

**சிறப்பு விருந்தினர்**
எந்திரி மு.குமாரநாயகம்
சன்மார்க்கன், பொறியியலாளர்.
அதிபர் – ஹறோ நுண்கலை தமிழ் பாடசாலை – லண்டன்

**கௌரவ விருந்தினர்கள்**
திரு.இ. பேரின்பநாயகம்
சன்மார்க்கன்,
முன்னாள் பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவரின் செயலாளர்

திரு.க.சிறியானந்தன்
சமூக ஆர்வலர்

**நிகழ்ச்சி நிரல்**
- ஆலய வழிபாடு
- விருந்தினர்களை வரவேற்றல்
- கொடியேற்றல்
- தேசியகீதம், பாடசாலை கீதம் இசைத்தல்
- மங்கள விளக்கேற்றல்
- தேவாரம்
- வரவேற்புரை
- வரவேற்பு நடனம்
- ஆசியுரை
- தலைமையுரை
- பரிசில் வழங்கல் :- முதன்மை நிலை 01
- சிறப்பு விருந்தினர் உரை
- கலைநிகழ்வு
- பரிசில் வழங்கல் :- முதன்மை நிலை 02
- கலைநிகழ்வு
- சிறப்பு விருந்தினர் உரை
- பரிசில் வழங்கல் :- முதன்மை நிலை 01
- பிரதம விருந்தினர் உரை
- விசேட பரிசில் வழங்கல் :- புலமைப்பரிசில் மாணவர்களைக் கௌரவித்தல்.
- கலைநிகழ்வு
- நன்றியுரை.

## இரண்டாம் நாள் நிகழ்வு

**காலம் :- 12.10.2019**
**இடம்:- கந்தசாமி அரங்கு நேரம் :- பி.ப. 4.00**

**தலைமை:-**
திரு.க.கெங்காதரகீர்த்தி
அதிபர், ஏழாலை மேற்கு சைவசன்மார்க்க வித்தியாசாலை

**ஆசியுரை:-**
பண்டிதர் வ.பேரின்பநாயகம் சன்மார்க்கன்

**பிரதம விருந்தினர்:-**
பேராசிரியர் என்.சண்முகலிங்கன்
முன்னாள் துணைவேந்தர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

**சிறப்பு விருந்தினர்**
திரு.அ.அருட்சோதி
சன்மார்க்கன், ஓய்வுபெற்ற விமானப் பரிபாலன பொறியியலாளர்

திரு.பா.கஜதீபன் (முன்னாள் மாகாணசபை உறுப்பினர்)

திருமதி பிரணவசொரூபி சிவகரன்
உதவி ஆணையாளர் ஆட்பதிவுத் திணைக்களம், வவுனியா

**கௌரவ விருந்தினர்கள்**
திரு.சிவஞானசுந்தரம் (ஓய்வுபெற்ற புகையிரதநிலைய அதிபர்)
திரு.நா.இலட்சுமிகாந்தன் (முன்னாள் பிரதேசசபை உறுப்பினர்)

**நிகழ்ச்சி நிரல்**
- ஆலய வழிபாடு
- விருந்தினர்களை அழைத்துவரல்
- மங்கல விளக்கேற்றல்
- தேவாரம்
- வரவேற்புரை
- வரவேற்பு நடனம்
- தலைமையுரை
- கலைநிகழ்வு
- சிறப்பு விருந்தினர் உரை
- கலைநிகழ்வு
- சிறப்பு விருந்தினர் உரை
- கலைநிகழ்வு
- பிரதம விருந்தினர் உரை
- கலைநிகழ்வு
- கௌரவ விருந்தினர் உரை
- கலைநிகழ்வு
- நன்றியுரை.

## மூன்றாம் நாள் நிகழ்வு

**காலம் :- 13.10.2019**
**இடம்:- கந்தசாமி அரங்கு நேரம் :- பி.ப. 3.00 மணி**

**தலைமை:-**
திரு.க.கெங்காதரகீர்த்தி
அதிபர், ஏழாலை மேற்கு சைவசன்மார்க்க வித்தியாசாலை

**ஆசியுரை:-**
கலாநிதி ஆறு.திருமுருகன்
தலைவர் துர்க்காதேவி தேவஸ்தானம்

**பிரதம விருந்தினர்:-**
திரு.இ.இளங்கோவன்
செயலாளர் கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு

**சிறப்பு விருந்தினர்**
திரு.வே.கனகசபாபதி
சன்மார்க்கன், பட்டயக்கணக்காளர். ஓய்வுநிலை திறைசேரி பொது முயற்சிகள் பணிப்பாளர் நாயகம், நிதி ஆணைக்குழு உறுப்பினர், யாழ்.பல்கலைக்கழக பேரவை உறுப்பினர்.

**கௌரவ விருந்தினர்கள்**
திரு.சி.மதியழகன்
பிரதிக்கல்விப் பணிப்பாளர் – கல்வி நிர்வாகம், வலிகாமம் கல்வி வலயம்
எந்திரி.அ.ஜெசிந்தன்
(சன்மார்க்கன், மாவட்ட பொறியியலாளர் யாழ்.மாவட்டச் செயலகம்)
திரு.பா.சிவஸ்கந்தசர்மா
(சன்மார்க்கன், பிரதி ஆணையாளர் உள்நாட்டு இறைவரித் திணைக்களம்)
திரு.சு.சுகிர்தாஸ்
(சன்மார்க்கன், புலனாய்வு உத்தியோகத்தர், உள்ளக உள்நாட்டு அலுவல்கள் மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு)
திரு.த.மாதவன்
(கோட்டக்கல்விப் பணிப்பாளர், உடுவில்)

**நிகழ்ச்சி நிரல்**
- ஆலய வழிபாடு
- விருந்தினர்களை அழைத்துவரல்
- மங்கல விளக்கேற்றல்
- வரவேற்புரை
- வரவேற்பு நடனம்
- ஆசியுரை
- தலைமையுரை
- கலைநிகழ்வு
- நூல் வெளியீடு
  வெளியீட்டுரை சைவப்புலவர் சு.செல்லத்துரை
- முதற்பிரதி வழங்கல்
- சிறப்புப் பிரதிகள் வழங்கல்
- ஆய்வுரை
  திரு.சு.கபிலன் (சிரேஸ்ட விரிவுரையாளர் திட்டமிடல் புவியல்துறை, யாழ்.பல்கலைக்கழகம்)
- இறுவெட்டு வெளியீடு
  "நிற்க அதற்குத் தக"
- சிறப்பு விருந்தினர் உரை
- கலைநிகழ்வு
- கௌரவிப்பு நிகழ்வு
- பிரதம விருந்தினர் உரை
- கலைநிகழ்வு
- சிறப்பு விருந்தினர் உரைகள்
- கலைநிகழ்வு
- நன்றியுரை

---

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



**கந்தசாமி விஜயகரன்**
(M.A, M.Ed) (வெளியக விரிவுரையாளர் NIE)
ஆசிரியர் அவர்கள்
உலக ஆசிரியர் தினத்திற்கு இணைவாக கல்வி அமைச்சு நடத்தும்
**"குரு பிரதீபா பிரபா"**
கௌரவிப்பு விழா 04.10.2019 ஆம் திகதி கல்வி அமைச்சில் நடைபெற்றது.
அதில் கலந்து நல்லாசிரியர் விருது பெற்றதையிட்டு நாம் வாழ்த்துகின்றோம். அவர் மேலும் பல பட்டங்களையும், விருதுகளையும் பெற பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்: **பாடசாலைச் சமூகம்**
**கிளி/ பளை றோ.க.த.க. பாடசாலை**

---

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

செல்வன் **செல்வரஞ்சன் றக்ஷன்**
**(168 புள்ளிகள்)**




யா/ கரணவாய் தாமோதரா வித்தியாலய மாணவனாகிய செல்வன் **செல்வரஞ்சன் றக்ஷன்** தரம் : 5 புலமைப்பரிசில் பரீட்சையில் -2019 **168 புள்ளிகளைப்** பெற்று சித்தியடைந்தமையைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.
பொலிகண்டி வீரபத்திரரின் ஆசியுடன் மென்மேலும் கல்வியில் சிறந்து சிகரங்களைத்தொட்டு வளமாய் வாழ மனதார வாழ்த்துக்கின்றோம்.

வாழ்த்துவோர்:
**அப்பா, அம்மா, பேரன் செல்வமாணிக்கம், பேர்த்தி, மாமாமார், அத்தைமார், சித்தப்பா, சித்தி, மச்சான்மார், மைத்துனிமார், சகோதரன்மார், சகோதரிமார்.**
**பழவத்தை, பொலிகண்டி தெற்கு.**

---

## கண்ணீர் அஞ்சலி

கடந்த 07.10.2019 திங்கட்கிழமை அன்று இறைபதமடைந்த வலிகாமம் வடக்கு பிரதேச சபையில் கடமையாற்றும் **ச. சிவநாதன்** அவர்களின் அன்புத் தந்தை

### விசுவநாதர் சண்முகநாதன்

அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன் அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**ஊழியர் நலன்புரிசங்கம்,**
**வலிகாமம் வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை.**
(In 11436)(11.17)

---

## மரண அறிவித்தல்



### நாகலிங்கம் மங்கயற்கரசி

மறவன்புலவைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் மங்கயற்கரசி நேற்று (10.10.2019) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கத்தின் அன்பு மனைவியும், குணசேகரம், ஞானசேகரன், சந்திரசேகரம், சாந்தினி, கலாயினி, மாலினி, காலஞ்சென்ற கௌதமி ஆகியோரின் அன்புத் தாயாரும், சுமேதா, சிவகலா, சுகந்தினி, முருகேசு, சரவணபவானந்தன், ஞானசோதி, காலஞ்சென்ற இரத்தினசோதி ஆகியோரின் பாசமிகு மாமியாரும், துஷாந், ஜனனி, கஜனன், சங்கீதா, சுவஸ்திகா, அனோஜன், அபிராமி, யசிந்தன், கயந்தன், பவித்திரா, வானதி, சஞ்சிவன், கீர்த்தனா, சாமினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் .இன்று (11.10.2019) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காந்தாளம்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**மறவன்புலவு,**
**சாவகச்சேரி.**
(CS/28614)(11,17)
**தகவல்:-**
**குடும்பத்தினர்.**

077 213 0165

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மலர்வு 12 . 01 . 1950



உதிர்வு 16 . 09 . 2019

அமரர்

## கனகசிங்கம் பாலரோகினி (தேவி)

கடந்த 16.09.2019 அன்று இறைபதமடைந்த எமது தாயாரின் இறுதிக் கிரியை நிகழ்வில் கலந்துகொண்டவர்களுக்கும் அனுதாபங்கள் தெரிவித்த வர்களுக்கும் எங்களது இதயபூர்வமான நன்றியினைத் தெரிவித்துக்கொள் கின்றோம். அமரர் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 14.10.2019 அன்று திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும், 16.10.2019 புதன்கிழமை 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் கலந்துகொள்வதோடு இந்த அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இல.52, D10,
உருத்திரபுரம், கிளிநொச்சி.

குடும்பத்தினர்.
க. குகன் - மகன்

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



திருமதி
**தவஈஸ்வரி தயாபரன்**
BA(Hons) PGDE
MED (1st class)

யா/சென் மேரீஸ் வித்தியா லயத்தில் ஆசிரியர்களாகக் கடமையாற்றிய **திருமதி தவஈஸ்வரி தயாபரன், செல்வி ருஷானா அருட்பிரகாசம்** ஆகிய இருவரும் அதிபர் தரம் SLPS 3 இற்கு நியமனம் பெற்றமையையிட்டு அவர்களை மனமாரப் பாரட்டுகின்றோம்.

அதிபர். ஆசிரியர்கள். மாணவர்கள். கல்விசாரா ஊழியர்கள். யா/ சென் மேரீஸ் வித்தியாலயம



**செல்வி ருஷானா அருட்பிரகாசம்**
Maths (Trd), BA, PGDE

# வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம்
## ஆதனப் பெயர்மாற்றம்
## 08, மெய்கண்டான் பாடசாலை வீதி, வட்டாரம் - 08

வலிகாமம் மேற்கு பிரதேசசபை. சுழிபுரம் உப அலுவலகம் எல்லைக்குட்பட்ட வட்டாரம் 08 மெய்கண்டான் பாடசாலை வீதியிலுள்ள இல.08. ஆகிய ஆதனம் எமது ஆதனவரிப் பதிவேட்டின் பிரகாரம் சொந்தக்காரர் என்றே காணப்படுகின்றது.

பெயர்மாற்றத்துக்குட்படும் ஆதனத்தினை வல்லிபுரம் எதிர்வீரசிங்கம் ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு ஆ.குமாரசுவாமி முகதாவில் நிறைவேற்றப்பட்ட 2966/09.01.1983 ஆம் இலக்க உறுதியால் குறித்த ஆதனம் பொன்னம்பலம் வல்லிபுரம் கைம்பெண் பொன்னம்மா ஆகியவருக்கு அவரது தாயாருக்கு சீதனமாகக் கொடுக்கப்பட்டு சொந்தமும், ஆட்சியுமானதென்றும், அவர் உயிரோடு இருக்கும்போது வாய்மொழி சீதனமாக வழங்கப்பட்டது எனவும் பின்னர் அவர் காலஞ்செல்ல முதுசமாக வந்தது என வெளிப்படுத்தப்பட்டு குறித்த பொன்னம்பலம் வல்லிபுரம் கைம்பெண் பொன்னம்மா ஆகியவர்களிடமி ருந்து நன்கொடையாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

குறித்த வல்லிபுரம் எதிர்வீரசிங்கம் இறக்க குறித்த ஆதனம் அவரின் பிள்ளைகளாகிய எதிர்வீரசிங்கம் குகதாஸ். எதிர்வீரசிங்கம் மகள் சுதர்சினி. எதிர்வீரசிங்கம் மகள் கிருத்திகா. எதிர்வீரசிங்கம் மயூரதாஸ். தயானந்தன் பெண் சிவாஜினி ஆகியோரை பிதாவழி முதுசமாகச் சென்றடைந்தது.

தயானந்தன் பெண் சிவாஜினி ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு ப.இராசகுரு முகதாவில் நிறைவேற்றப் பட்ட 8497/11.12.2011 ஆம் இலக்க உறுதியால் குறித்த எதிர்வீரசிங்கம் குகதாஸ் உம். எதிர்வீரசிங்கம் மகள் சுதர்சினியும். எதிர்வீரசிங்கம் மகள் கிருத்திகாவும் ஆகியவர்களுடன் எதிர்வீரசிங்கம் கைம்பெண் புனிதவதியும் ஆகியவர்களிடம் சீதனமாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

தயானந்தன் பெண் சிவாஜினி ஆகியவர் ஆதனப்பெயர்மாற்றத்துக்கு விண்ணப்பித்துள்ளார்.

இவ் ஆதனப்பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் 30 நாள்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும் அவ்வாறு உரிமை கோராதவி டத்து குறித்த ஆதனமானது தயானந்தன் பெண் சிவாஜினி ஆகியவருக்குப் பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர்மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்புக்கும் வலிகாமம் மேற்கு பிரதேசசபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

தவிசாளர்
வலிகாமம் மேற்கு பிரதேசசபை.

(CS/ 28623)(11,17)

# மரண அறிவித்தல்

## செல்வி கந்தையா புவனேஸ்வரி
(புங்குடுதீவு – 6)



புங்குடுதீவு 6 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும். இல.14 யாழ்பாடி வீதி. பெருமாள் கோயிலடி யாழ்ப்பா ணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி கந்தையா புவனேஸ்வரி 09.10.2019 புதன்கிழமை காலமா னார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா (வர்த்தகர் - ஸ்ரீ முருகன் ஸ்ரோர்ஸ் - தெரணியகல) பரமனாட்சி தம்பதி களின் அருமை மகளும், காலஞ் சென்ற பொன்னையா - மரகத்தின் பெறாமகளும், மகேஸ்வரி, பரமேஸ் வரன், விக்கினேஸ்வரன் (விக்கி னேஸ்வரா ஹாட்வெயார், கொழும்பு-12, நியூ குவாலிற்றி பக்டறி. பேலிய கொட) ஆகியோரின் அன்புச் சகோதரியும், மகாதேவனின் உடன் பிறவாச் சகோத ரியும், பத்மராஜா (சிவா- கனடா), பத்மரூபன் (காண்டீபன் - கனடா), தமிழ்விழி (சுபாதா - கனடா) ஆகியோ ரின் சிறிய தாயாரும், காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை (ஓய்வுநிலை அரசாங்க அச்சக உத்தியோகத்தர்), ராஜசுலோசனா, விஜயராணி (ஓய்வுநிலை கணக் காளர், தேசிய வீடமைப்பு அதிகாரசபை) ஆகியோரின் மைத்துனியும், அரச பாலினி (கவிதா - கனடா), நகுலேந்திரன் (நகுலன் - கனடா), துஷ்யந்தி (துளசி - கனடா), நர்மதா (கனடா) ரஜிதா, மாதங்கி ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.10.2019) வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று திருவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித் தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி த.மகேஸ்வரி
ஐ.பரமேஸ்வரன்
க.விக்னேஸ்வரன்
சகோதரர்கள்.

இல.14, யாழ்பாடி வீதி,
பெருமாள் கோயிலடி,
யாழ்ப்பாணம்.

(CS/28625)(11,17)

077 653 1909, 021 222 9546, 077 476 5992

# மரண அறிவித்தல்

திருமதி
## தில்லையம்பலம் நாகரெத்தினம்



நயினாதீவு 5 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கந்தர்மடத்தை வசிப் பிடமாகவும் கொண்ட திருமதி தில்லையம்பலம் நாகரெத்தினம் நேற்று (10.10.2019) வியாழக் கிழமை இறைபதம் அடைந்துள்ளார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றியவிபரம் பின்னர் அறிவிக் கப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

56/4, பழம்றோட்
கந்தர்மடம், யாழ்ப்பாணம்

தகவல்: மா.வேதநாதன்
(மருகர்)
0774319753

# மரண அறிவித்தல்கள்



**செல்வி சித்திரவடிவேலு நாகரட்ணேஸ்வரி**

தொண்டமானாறைச் சேர்ந்த சித்திரவடிவேலு நாகரட்ணேஸ்வரி கடந்த (09.10.2019) புதன்கிழமை காலமானார்

அன்னார் காலஞ்சென்றவர்களான சித்திரவடிவேலு கற்பகம் தம்பதியின் அன்பு மகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (13.10.2019) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.00 மணியளவில் யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை இன்பம் மலர்ச் சாலையில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.



**இராமச்சந்திரன் அம்பிகாதேவி**

தொண்டமானாறு கொத்தியகாடுவை வசிப்பிடமாகக் கொண்ட இராமச்சந்திரன் அம்பிகாதேவி நேற்று (10.10.2019) வியாழக்கிழமை அன்று காலமானார்

அன்னார் காலஞ்சென்றவர்களான சித்திரவடிவேலு கற்பகம் தம்பதியின் மகளும் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி சிவனடியார் தம்பதியரின் மருமகளும் தயா பரன். துஷ்யந்தி ஆகியோரின் தாயாரும் மகேஸ்வரன். ராதிகா ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.10.2019) வெள்ளிக்கிழமை பி.ப 5.00மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தொண்டமானாறு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: கபிலன், லோகஜன், பேரப்பிள்ளைகள்

CS28627(16/17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யார் இசைத்த புல்லாங்குழல்?



ஓரிரு செடிகள் அசைந்தாடின. பறக்கும் போது வண்ணத்துப்பூச்சி இறகை விரித்து மடித்துக்கொள்வதைப்போல் பச்சை இலைகள் திறந்து மூடிக்கொண்டன. சட்டென்று செடிகளுக்கு இடையிலிருந்து இளங்காற்று வெளியேறியது. சிறிது நேரம் சிறு வண்டுகளுடன் உரையாடிய காற்று, "கொஞ்ச நேரம் கடைத்தெருவைச் சுற்றிப் பார்த்துவிட்டுத் திரும்புகிறேன் என்றது. வண்டுகள் விடை கொடுத்து அனுப்பி வைத்தன.

கடலில் மிகப் பெரிய அலை மேலே எழுவதைப்போல் உயர எழுந்தது. இளங்காற்று. கடைத்தெரு வில் புகுந்து சுற்றியது. மரங்களோ பறவைகளோ இல்லாத கடைத் தெருவைப் பார்த்து, தவறான பகுதிக்கு வந்துவிட்டோமோ என்று கவலை அடைந்தது. கடைசியில் அந்தக் காற்று, கதவுகள் திறக்கப்பட்டிருந்த ஒரு ஜன்னலைக் கண்டது. அதில் நுழைந்து தப்பித்து விடலாம் என்ற எண்ணத்தில் உள்ளே புகுந்து சென்றது. அது, ஒரு பொம்மை விற்பனைக் கடைக்குள் நுழைந்திருந்தது. கடைக்குள் நிறைய சிறுவர்கள் இருந்தார்கள்.

கண்ணாடி பொம்மைகள், ரப்பர் பொம்மைகள், பீங்கான் பொம்மைகள், விதவிதமான சீன பொம்மைகள் என்று பிரித்து வைக்கப்பட்டிருந்த எல்லா இடங்களிலும் கூட்டம். கடைசியில் ஓர் ஓரமாக ஒதுங்கியது இளங்காற்று. திடீரென்று தனக்கு அருகில் யாரோ முணுமுணுக்கும் சத்தம் கேட்டுத் திரும்பிப் பார்த்தது. அருகில் ஒரு புல்லாங்குழல் தொங்கிக்கொண்டிருந்தது.

"வணக்கம் இளங்காற்றே. புல்லாங்குழல் பேசுகிறேன். நீண்ட நாள்களாகக் கடைக்காரர் என்னை இந்த மூலையில் தொங்க விட்டிருக்கிறார் என்றது வருத்தத்துடன். "உன்னை ஏன் இப்படி மூலையில் வைத்திருக்கிறார்? இசையை விரும்பும் குழந்தைகள் ஏராளமாக இருக்கிறார்கள். உன்னைப் பார்த்தால் உடனே வாங்கிவிடுவார்களே? என்றது இளங்காற்று.

குழந்தைகள் வாங்குவதற்கு விருப்பமாகத்தான் இருக்கிறார்கள். ஆனால், என்னை வாசித்துப் பார்த்து வாங்க நினைக்கிறார்கள். கடைக்காரர் அதற்குச் சம்மதிப்பதில்லை. என்னைத் தொடக்கூட அவர் விடுவதில்லை. அதனால் பயனில்லாமல் மூலையில் தொங்கிக்கொண்டிருக்கிறேன் என்று தொண்டை அடைக்கச் சொன்னது புல்லாங்குழல்.


உன் பிரச்சினையை உடனே தீர்த்து வைக்கிறேன் என்று சொன்ன இளங்காற்று, புல்லாங்கு ழலின் ஒரு முனையில் நுழைந்து, ஏழு துளைகள் வழியாக மாறி மாறி வெளியே வந்தது. பாம்பு நடனம் ஆடுவதைப்போல நெளிந்து நெளிந்து சுற்றி வந்தது. வேகத்தைக் கூட்டியும் குறைத்தும் புல்லாங்குழலுக்குள் விளையாடியது.

இனிமையான இசை எல்லோரின் காதுகளையும் இன்பமாகத் தீண்டியது. கடையில் இருந்த அனைவரும் இசையைக் கேட்டு மயங்கினர்.

"ஓ இது மோகனராகத்தில் அமைந்த இசை என்று விளக்கினான், தங்கைக்காக பொம்மை வாங்க வந்த ஒரு சிறுவன். குழந்தைகள் இசையை ரசித்தபடி நடனம் ஆடினார்கள். கடைக்காரர் என்ன நடக்கிறது என்று புரியாமல் தலையை உயர்த்திப் பார்த்தார். அவர் தொங்கவிட்ட அதே இடத்தில்தான் புல்லாங்குழல் இருந்தது. ஆனால், அதிலிருந்து எப்படி இசை வருகிறது என்று தெரியாமல் திகைத்துப் போனார். எல்லோருடைய கவனமும் புல்லாங்குழல் பக்கம் திரும்பியது. சட்டென்று இசை நின்றது. அனைவரும் புல்லாங்குழல் வேண்டும் என்று கடைகாரரிடம் கேட்டார்கள்.

புல்லாங்குழல் மிகவும் மகிழ்ச்சி அடைந்தது. இளங்காற்றுக்கு நன்றி சொன்னது. "கடையில் இருப்பது ஒரே ஒரு புல்லாங்குழல்தான். இரண்டு நாள்களில் உங்கள் தேவையைச் சரிசெய்துவிடுகிறேன். இந்தப் புல்லாங்குழலைத் தன் தங்கைக்காக பொம்மை வாங்க வந்த அன்புச் சிறுவனுக்குக் கொடுக்கிறேன் என்றார் கடைக்காரர். எல்லோரும் சிறுவனிடம் இருந்த அந்தப் புல்லாங்குழலை ஏக்கத்துடன் பார்த்துக்கொண்டிருந்தார்கள். இளங்காற்று நிம்மதியாகக் கடையைவிட்டுக் கிளம்பிச் சென்றது.

# பைசா நகர் சாய்ந்த கோபுரம்



இத்தாலி நாட்டில் உள்ள பைசா நகரத்தில் உள்ள சாய்ந்த கோபுரம் உலக அதிசயங்களில் ஒன்றாகத் திகழ்கிறது.

இந்த கோபுரத்தின் கட்டுமான பணி கி.பி. 1173ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு 1372ஆம் ஆண்டு முடிக்கப்பட்டது. 186 அடி உய ரத்தில் 7 மாடிகளுடன் இதைக் கட்டி இருந்தனர். கட்டுமானப் பணிகள் முடிந்த தில் இருந்தே கோபுரம் சிறிது சிறிதாக சாயத் தொடங்கியது. ஆனாலும் அது கீழே விழவில்லை. இதனால் பெரும் அதிசயமாகக் கருதப்பட்டது.

அது விழுந்து விடாமல் தடுக்க பல்வேறு முயற்சிகளும் தொடர்ந்து எடுக்கப் பட்டு வந்தன. 1990ஆம் ஆண்டு வாக்கில் இது சாய்வது மேலும் அதிகரித்தது. இதனால் எந்த நேரத்திலும் கோபுரம் விழுந்து விடும் என்று பயம் ஏற்பட்டது.

அந்த நேரத்தில் சுமார் 15 அடி தூரத்துக்கு கட்டடம் சாய்ந்து இருந்தது. அதாவது 5.5 டிகிரி கோணத்தில் அதன் சாய்வு அமைந்து இருந்தது.

எனவே, 1990இல் இருந்து 11 ஆண்டுகளாக அதன் அருகே யாரையும் செல்ல அனுமதிக்கவில்லை. ஆனாலும் கட்டடத்தைப் பாதுகாக்க பல்வேறு முயற்சிகள் எடுக்கப்பட்டன.

நிபுணர்கள் குழு மூலம் ஆய்வுகளை மேற்கொண்டு சாய்வதைத் தடுக்கும் முயற்சிகளைச் செய்தனர். இதனால் கட்டடம் மேலும் சாய்வது நிறுத்தப்பட்டது. அத்துடன் கொஞ்சம் கொஞ்சமாக அதை நிமிர்த்தும் பணிகளும் நடந்தன.

இதற்காக தனி பாதுகாப்புக் குழு ஒன்று அமைக்கப்பட்டு இருந்தது. பொறியிலாளர் மைக்கேல் ஜமியோ கோவஸ்கி தலைமையிலான இந்தக் குழுவினர் தொடர்ந்து கோபுரத்தை நிமிர்த்தும் பணிகளைச் செய்து வந்தனர். அதன் மூலம் 14 சென்ரிமீற்றர் அளவுக்கு கோபுரம் நிமிர்த்தப்பட்டு இருந்தது.

இப்போது மேலும் 4 சென்ரி மீற்றர் அளவுக்கு கோபுரத்தை நிமிர்த்தி உள்ளனர். இதனால் கோபுரம் இன்னும் வலுவாகி இருக்கிறது.

எனவே, இனி கட்டிடத்துக்கு ஆபத்து எதுவும் ஏற்படாது என்று பொறியிலாளர் குழுவினர் கூறினார்கள்.

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியை
**திருமதி சி.ஞானசேகரன்** அவர்களின்
அன்பு மாமியார்
**திருமதி நாகலிங்கம் மங்கயற்கரசி**
அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும் அவரது
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களை தெரிவித்துக்கொள்கின்றோம்.
**பாடசாலை நலன்புரிக் கழகம்**
**யா/யாழ் இந்து ஆரம்ப பாடசாலை.**

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் ஆசிரியர்
**திரு.ச.வினோத்குமார்** அவர்களின் அன்புத்
தந்தையார் **தம்பையா சற்குணம்** அவர்கள்
10.10.2019 அன்று இறைபதம் அடைந்தார்.
அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா
சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
பாடசாலைச் சமூகம்
யா/நீர்வேலி தெற்கு இந்து தமிழ் கலவன் பாடசாலை, நீர்வேலி

## கொக்குவில் வளர்மதி முன்பள்ளி

### பதவி வெற்றிடங்கள்

1. முன்பள்ளி ஆசிரியர்
2. முன்பள்ளி ஆங்கில ஆசிரியர்
3. துப்பரவு பணியாளர்

1) அனுபவமும் ஆற்றலும் தராதரமும் கொண்ட முன்பள்ளி கற்கையில் டிப்ளோமா அல்லது அதற்கொத்த தராதரம் பெற்றவர்கள் (கலைத்துறை. விளையாட்டு. நாடகம் போன்ற முன்பள்ளி கற்றலுடன் தொடர்புடைய ஆற்றல்கள்) மேலதிக தகைமையாக கருதப்படும்.

2) ஆங்கில பாட டிப்ளோமா/ கல்வியியல் கல்லூரி ஆங்கில பாடம் நிறைவு செய்த/ வேறு ஏதாவது இதற்கு ஒத்த அல்லது மேலதிக தகைமை கொண்ட முன்பள்ளி ஆங்கில கற்பித்தலில் அனுபவம் உள்ளவர்கள்.

3) துப்பரவு பணியாளர் கடமை நேரம் காலை 7.00 - மதியம் 12.30. கடமை நேரத்தில் தன் கடமையை சிறந்த முறையில் ஆற்றக்கூடிய திறன்.

மேற்படி பதவிகளுக்கு அதற்குரிய தகைமைகளை கொண்டவர்கள் விண்ணப்பிக்கலாம். திறமைக்கேற்ப சம்பளம் நேரில் தீர்மானிக்கப்படும். **EPF, ETF** செலுத்தப்படும்.
மேற்படி பதவிகளுக்கு கடமையாற்ற விருப்பமுள்ளவர்கள் கீழ் குறிப்பிடப்பட்ட நிலையத்திற்கு 16.10.2019 புதன்கிழமை பி.ப 4.00 மணிக்கு நேரில் வருகை தரவும்.

**இணைப்பாளர்,**
**கொக்குவில் வளர்மதி முன்பள்ளி,**
**சம்பியன்லேன், கொக்குவில் கிழக்கு, கொக்குவில்**

## மரண அறிவித்தல்



### இராசையா மகேந்திரன்

கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும் இணுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா மகேந்திரன் நேற்று (10.10.2019) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசையா பூமணி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை செல்லம்மா தம்பதிகளின் பாசமிகு மருமகனும் ஜெகதீஸ்வரியின் அன்புக்கணவரும் உதய லட்சுமி. சீராளன், சற்குரு (கனடா). காலஞ்சென்ற யோகலட்சுமி ஆகியோரின் அன்புச்சகோதரனும் ராசேந்திரபதி. ராஜகௌரி கதிர்காமசுந்தரி. கலாநிதி (கனடா). தயாநிதி. சிவலிங்கம் (கனடா). காலஞ்சென்ற சிவனேசன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.10.2019) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப 11.30 மணியளவில் தாவடி இந்து மயானத்திற்குளடுத்துச்செல்லப்படும்

**அளவோடை வீதி,**
**இணுவில் தெற்கு, இணுவில்**

**தகவல்: ம. ஜெகதீஸ்வரி (மனைவி)**
**021 300 2640, 077 933 7478**

## மரண அறிவித்தல்



### கந்தசாமி இராமநாதன்

மூளாய் தெற்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி இராமநாதன் நேற்று 10.10.2019 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலம் சென்றவர்களான கந்தசாமி நல்லம்மா தம்பதியினரின் மகனும் காலஞ்சென்றவர்களான சிற்றம்பலம் சிவக்கொழுந்து தம்பதிகளின் மருமகனும் செல்வதேவியின் அன்புக் கணவரும் பார்த்தீபன் (மாவட்ட நீதிமன்றம். மன்னார்), கஜதீபன் (ஆசிரியர், கொழும்பு) ஆகியோரின் அன்புத் தந்தையும் பாமிலா, தனுசியா ஆகியோரின் மாமனாரும் ஆதுசனின் பேரனாரும் பாலச்சந்திரன் (மூளாய் சித்திவினாயகர் வர்த்தக நிலையம்) காலஞ்சென்றவர்களான சேனாதிராஜா, ஐயாத்துரை, கணேசமூர்த்தி. காங்கேசு. ஞானாம்பிகை. தேவகுலசிங்கம். ஆகியோரின் பாசமிகு சகோதரனுமாவார். அன்னாரின் இறுதிக கிரியைகள் 11.10.2019 வெள்ளிக்கிழமை மு.ப 11.30 மணிக்கு ஆரம்பித்து பூதவுடல் தகனக்கிரியைக்காக மூளாய் பித்தனை இந்துமயானத் திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல் :குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் காணிக்கை



எமது நிறுவனத்தின் ஆசிரியர்
திரு ச.வினோத்குமார் அவர்களின்
பாசமிகு தந்தையார்

**தம்பையா சற்குணம்**

(ஓய்வுநிலை கிளை முகாமையாளர், யாழ் பலநோக்கு கூட்டுறவுச்சங்கம்)

அவர்கள் இறைபதம் அடைந்த
செய்தி அறிந்து துயர்
கொள்கின்றோம்.
அன்னாரின் பிரிவால் துயருறும்
குடும்பத்தினரின் துயரில்
நாமும் பங்கு கொண்டு
ஆத்ம சாந்திக்காக இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

சயன்ஸ் அக்கடமி,
நல்லூர் - அரியாலை.

C11441(16/17)

இயக்குநர்,
ஆசிரியர்கள், மாணவர்கள்



## விண்ணக வாழ்வின் 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தாய் மடியில்
02.03.1930

இறை அடியில்
11.10.2018

**அமரர் பிரான்சிஸ் மரிய அருமைநாயகம்**

(இராசநாயகம்)

பாசமாய் நேசமாய்
கண்ணின் கருமணியாய் எம்மைக் காத்து
பக்திக்கு உறைவிடமாய்
நேர்மைக்கு விளக்காய்
பகிர்வதில் பொக்கிஷமாய்
பண்புக்கு வழிகாட்டியாய்
பசி தீர்க்கும் அட்ஷய பாத்திரமாய்

எல்லோரையும் சிரிக்க வைக்கும் பண்பானவர்
அல்லும் பகலும் எமக்காய் வாழ்ந்த தெய்வமாய்
ஒரு சிறு நொடியில் உம்மையே இழந்தோம் அப்பா
அப்பா அப்பா என்று அழைக்க எம்மனம் துடிக்கிறது
"ஆம்" என்று பதில் தர நீங்கள் இல்லையே அப்பா
ஓராண்டு கரைந்தாலும் கலையாத
உம் அன்பு எம்மை விட்டு மாறாதப்பா!

கைத்தொழிற்பேட்டை வீதி,
தென்மூலை, அச்சுவேலி.
021 205 8662, 077 704 1362

இவரின் பிரிவால் துயருறும்
அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்



## மறையாத நினைவுகளில் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
22 . 05 . 1945



உதிர்வு
23 . 09 . 2018

**அமரர் சின்னையா நடராஜலிங்கம்**

பூவுடல் நீத்து நீ புகழுடம்படைந்து வருடம் ஒன்று ஓடிச்சென்றதே
உன்னை மறவாத எம் மனம் காலமெல்லாம்
புண்படுவதை நீ அறியாயோ? மூன்றாம் தலைமுறைப் பேரர்களோடு
நீ கொஞ்சி மகிழ்வதை நீண்ட நெடுங்காலம் நாம் பார்க்கவில்லையே
இறைவன் சோதனை இதுதானோ ஐயா! உனது ஆங்கிலப் புலமையையும்
நகைச்சுவைப் பேச்சையும் இனி நாம் என்று காண்போம்?
என்றும் எமது தெய்வம் நீயே அன்றோ

குரும்பைகட்டி, புளோலி.

குடும்பத்தினர்.



# விடுகதைகள்

1. கண்ணில் தென்படுவான், கையில் பிடிபட மாட்டான். அவன் யார்?
2. வெயிலில் மலரும், காற்றில் உலரும். அது என்ன?
3. வேகாத வெயிலில் வெள்ளையப்பன் விளைகிறான். அது என்ன?
4. கழுத்து உண்டு, தலையில்லை; உடல் உண்டு, உயிர் இல்லை, கையுண்டு, விரல் இல்லை. அது என்ன?
5. ஆயிரம் பேர் அணிவகுத்தாலும் ஒரு தூசி கிளம்பாது. அவை யாவை?
6. ஆகாயத்தில் பறக்கும். அக்கம் பக்கம் போகாது. அது என்ன?
7. அடிமேல் அடி வாங்கி அனைவரையும் சொக்க வைக்கும். அது என்ன?
8. அச்சு இல்லாத சக்கரம், அழகு காட்டும் சக்கரம். அது என்ன?
9. இதயம் போல் துடிப்பிருக்கும், இரவு பகல் விழித்தி ருக்கும். அது என்ன?
10. முழு உலகமும் சுற்றி வரும், ஆனால் ஒரு மூலையி லேயே இருக்கும் அது என்ன?

## விடைகள்

1. புகை
2. வியர்வை
3. உப்பு
4. சட்டை
5. எறும்புகள்
6. கொடி
7. மிருதங்கம்
8. வளையல்
9. கடிகாரம்
10. முத்திரை




## மரண அறிவித்தல்

**தம்பையா சற்குணம்**

(ஓய்வுநிலை கிளை முகாமையாளர், யாழ்.பலநோக்கு கூட்டுறவுச்சங்கம்)



யாழ்ப்பாணம் மூளாய் லேன் சுண்டுக்குளியைப் பிறப்பிடமாகவும் A.V. றோட் மூன்றாம் ஒழுங்கை அரியாலையை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பையா சற்குணம் நேற்று (10.10.2019) வியாழக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான P.W.D ஓவசியர் தம்பையா முத்தம்மா தம்பதியரின் கனிஷ்ட புதல்வனும் காலஞ்சென்றவர்களான கனகரத்தினம் வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் மருமகனும் இராசாத்தியம்மாவின், (யாழ் பலநோக்கு கூட்டுறவுச்சங்க ஓய்வுநிலை உத்தியோகத்தர்) பாசமிகு கணவரும் காலஞ்சென்ற சத்தியப்பிரியன் மற்றும் கயல்விழி (யாழ்.பலநோக்குக்கூட்டுறவுச்சங்க எழுதுவினைஞர்), வினோத்குமார் (ஆசிரியர், நீர்வேலிதெற்கு இந்து தமிழ்கலவன் பாடசாலை) சத்தியநிர்மலன் காலஞ்சென்ற அமலினி ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் ஜெயசுதனின் (பிரான்ஸ்) அன்பு மாமனாரும் காலஞ்சென்ற Dr.அப்பாத்துரை மற்றும் பத்மநாதன் (ஓய்வுநிலை இராணுவ உத்தியோகத்தர்), செல்வரட்ணம் (கணக்காளர்-கனடா), சிவபாதசுந்தரம் (ஓய்வுநிலை நீர்விநியோகப்பகுதி உத்தியோகத்தர்), காலஞ்சென்றவர்களான அமிர்தவல்லி, புஸ்பராணி, ஆகியோரின் அன்புச்சகோதரனும் இராசதுரை, யோகேஸ்வரி விஜயகுமாரி காலஞ்சென்றவர்களான செல்வதி, இராஜேஸ்வரி மற்றும் சத்தியபாமா சரஸ்வதி, காலஞ்சென்றவர்களான இராஜசுந்தரம், செல்வராஜா ஆகியோரின் அன்பு மைத்துனரும் செல்வராணி, மதியாபரணம் ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.10.2019) வெள்ளிக்கிழமை பி.ப 2.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கொழும்புத்துறை துண்டி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளளவும்.


51/1, மூன்றாம் ஒழுங்கை,
A.V. றோட், அரியாலை

தகவல் : குடும்பத்தினர்
077 020 4134, 076 559 7728


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


**இந்தக் கட்டுரையானது உலக உளநல தினமான ஒக்ரோபர் 10ஆம் திகதியை முன்னிட்டு மேற்கொள்ளும் உளநல விழிப்புணர்வு செயற்றிட்டத்தின் ஓர் அங்கமாக எழுதப்பட்டுள்ளது.**

# மனநலம் பாதிக்கப்பட்டவனும் மனிதனே...!



எமது சிந்தனைத் திறனைக் கட்டுப்படுத்துவது உடலின் தலைமைச் செயலகமான மூளையில் உள்ள நரம்பு மண்டலமே. ஒருவரின் சிந்தனைத் திறன் என்பது வயதுக்கேற்ப காலசூழ்நிலைகளுக்கு ஏற்ப வேறுபடுகிறது. உளவியலின் அடிப்படை ஆய்வு என்பது உள்ளுணர்வு அறியும் ஆற்றல், கவனம், மனஉணர்வு அல்லது உணர்ச்சி வேகம், இயல்பு ஊக்கம், மூளை செயற்பாடுகள் ஆளுமை நடத்தை மற்றும் உள்ளார்ந்த தொடர்புகள் ஆகியவற்றைக்கொண்டதாகும்.

குழந்தைப்பருவத்தில் உள்ளவர்கள் விளையாட்டு, படிப்பு, நண்பர்கள், புதிய பொருள்களை வாங்குதல், புத்தாடை, அணிகலன்கள், என ஒவ்வொரு வயது நிலையிலும் அவர்களது சிந்தனை விரிந்து செல்கிறது. ஆனால் பெரியஅளவிலான எதிர்பார்ப்பு நிறைவேறாத போது, சிலர் பித்துப் பிடித்தது போலாகின்றனர். சிறுவர்களுக்குச்சற்று அதட்டலாகப் பேசினால் அவர்கள் முக பாவம் மாறிவிடுகிறது. மிகவும் நம்பிக்கை கொண்டிருந்த குறிப்பிட்ட ஒருபொருளோ, பதவியோ கிடைக்காமல்போனால்



சிலருக்கு ஒருவித மன அழுத்தம் உருவாகக் கூடும். நாம் மிகவும் நேசிக்கும் ஒருவர், தந்தை, தாய் இறந்தால் அத்துயர் காரணமாக மனஅழுத்தம் உருவாகக்கூடும். நரம்பு மண்டலத்தில் கட்டளைகளாகப் பதிவாகும் விடயங்கள் நிறைவேறாமல் போகும் போதே பெரும்பாலானோருக்கு மனப்பாதிப்பு ஏற்படுகிறது.

எனவே மனப்பாதிப்பு எந்த மாதிரி எந்த சூழ்நிலையிலும் ஏற்படுகிறது என்பதைவிட அந் நோய் ஏற்பட்டுவிட்டால் அதனைக் குணப்படுத்துவது எப்படி என்பதுபற்றித்தான் யோசிக்க வேண்டும். முதலில் மனப்பாதிப்பு என்று தெரிந்தவுடன் சம்பந்தப்பட்ட நோய்க்கு சிகிச்சையளிக்கக்கூடிய மனோதத்துவ நிபுணர்களை அணுக வேண்டும். அவர்களின் அறிவுரைப்படி மருந்துகளை எடுக்கவேண்டும். மனோதத்துவ நிபுணர்களைப் பொறுத்தவரை ஆலோசனை முக்கியமானது. எமது சமூகத்தில் மனப்பாதிப்பு உள்ளவர்கள் மேலான பார்வை வித்தியாசமாகவே இன்றும் உள்ளது.

எங்கள் பார்வை கூட அவர்களை இன்னும் வருத்தத்துக்குள்ளாக்குகிறது. ஆனால் அந்த நோக்கு மாற வேண்டும். அவர்களும் ஒரு குடிமகனாக மதிக்கப்பட வேண்டியது சமூகத்தின் கடமையாகும். எம்மால் அவர்களை எவ்வளவுக்குப் புரிந்து கொண்டு நடக்க முடியுமோ அந்த அளவுக்குப் புரிந்து நடத்தலே அவர்களுக்கு நாம் செய்யும் உதவியாகும்.

**எங்கள் பார்வை கூட அவர்களை இன்னும் வருத்தத் துக்குள்ளாக்குகிறது. ஆனால் அந்த நோக்கு மாற வேண்டும்.**





## உள்ளத்தில் உறுதி....

உள நல தினம் தனிலே
என் கவியை நான் வடிக்க
உலகமே அதைக் கேட்டு
மானிடப் பிறப்பின் மகத்தவத்தை
நான் மனித வாழ்வில் கண்டுகொள்ள
மறு ஜென்மம் எனக்களித்த
மருத்துவர்களை உளமாறப் போற்றுகின்றேன்
உளம் உடைந்து போய்
உணர்வுகள் அற்றுப்போய்
வேண்டாம் அந்த மனித வாழ்வு
என்று எண்ணி வாழ்ந்த
எந்தன் வாழ்வில்
உதடுகள் உச்சரித்தன
இறைவா என்னை வாழவிடு
இல்லையெனில்
இதயத்துடிப்பை நிறுத்திவிடு
உளநல சிகிச்சை பெற்றேன்
உள்ளம் உறுதி பெற்றேன்
உணர்வுகள் வந்தென்னை
தெம்பூட்டியது
இவ்வுலகில் நியும்
வாழ்ந்திட வேண்டுமென்று
புத்துயிர் பெற்றவனாய்
புதிய உலகை
காணுகின்றேன்
உலகமே வியந்து
பார்க்கும் ஒரு நாள்
என் உணர்வுகளை
எடுத்துரைப்பேன் அத்திருநாள்
அது வரைக்கும் நான்
காத்திருப்பேன்
அகிலம் போற்ற
வாழ்ந்திடுவேன்

■ ம.வசீகரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com



## கடும் போட்டிக்கு மத்தியில் தமிழர் கையிலேயே முடிவு

இலங்கை அரச தலைவர் தேர்தல் களம் கடும் சூடானதாகத்தான் இருக்கும் என்பதை அடுத்தடுத்து நடத்தப்பட்ட முதல் பரப்புரைக் கூட்டங்கள் எடுத்துக் காட்டியிருக்கின்றன.

பொது மக்கள் முன்னணியின் முதல் கூட்டம் நேற்று முன்தினம் அனுராதபுரத்தில் இடம்பெற்றது. பல ஆயிரக்கணக்கானவர்கள் அதில் கலந்துகொண்டிருந்தனர். தமது ஆதரவுத் தளத்தை வெளிக்காட்டும் வகையில் ராஜபக்சாக்கள் அந்தக் கூட்டத்தை ஒழுங்கு செய்திருந்தனர்.

பொதுவாகவே ராஜபக்ச குடும்பத்தினருக்குக் கிராமங்களில் ஆதரவுப் பலம் அதிகம். தொடக்கம் முதலே சிறிலங்கா சுதந்திரக் கட்சி தன்னை ஒரு இடதுசாரி ஆதரவுத் தரப்பாக வெளிக்காட்டி வந்ததும் இந்தத் தளத்திற்கான மற்றொரு காரணம்.

எல்லாவற்றுக்கும் மேலாக, போரை வென்று தமிழீழ விடுதலைப் புலிகளை ஒடுக்கியதன் மூலம் சிங்கள, பௌத்த குடிமக்கள் மத்தியில் ராஜபக்சாக்களின் செல்வாக்குப் பல மடங்கு பெருகியது என்பதையும் மறுத்தவிட முடியாது. நாட்டையும் சிங்கள இனத்தையும் பௌத்த மதத்தையும் காக்கும் காவலர்களாக அவர்கள் சிங்கள மக்களுக்குத் தோன்றுவதில் வியப்பில்லை.

அந்தச் செல்வாக்கைத் தக்க வைப்பதற்காகவே தமிழர்களுக்கு அதிகாரங்களைப் பகிரப்போவதில்லை என்பது உள்ளிட்ட பல கடும்போக்கு நிலைப்பாடுகளையும் ராஜபக்சாக்கள் வெளிப்படுத்தி வருகின்றார்கள் என்பதும் வெளிப்படையானது.

அனுராதபுரத்தில் ராஜபக்சாக்களுக்காகத் திரண்ட கூட்டம் இந்தப் பின்னணியில் இருந்து திரண்டு வந்ததே.

ஐக்கிய தேசியக்கட்சியோ நரகப்புற வாக்காளர்களினதும் மேல் தட்டு சிங்கள, பௌத்த வாக்காளர்களினதும் ஆதரவை ஆழமாகத் தக்கவைத்திருக்கக்கூடிய கட்சி. கொழும்பில் நேற்று அந்தக் கட்சி நடத்திய முதல் பரப்புரைக் கூட்டத்தில் திரண்ட மக்களின் எண்ணிக்கை கோத்தபாயவின் கூட்டத்தில் திரண்ட கூட்டத்தைவிட அதிகமானது என்று எதிர்வுகூறப்படுகின்றது.

ஐ.தே.கவுக்கு ஏற்கனவே இருக்கும் நகர்புற ஆதரவுத் தளத்துடன் பிரேமதாசவுக்கு இருக்கும் கிராமப்புற மக்களின் ஆதரவும் சேர்ந்து இந்தப் பெரிய எண்ணிக்கையைத் திரட்டியிருக்கக்கூடும்.

இந்த எண்ணிக்கையை முன்வைத்து தேர்தலின் வெற்றி, தோல்வியை எதிர்வுகூறுவது கடினமானது என்றபோதும் போட்டி மிகக்கடினமானதாக இருக்கும் என்பதை உறுதிபடக்கூறலாம்.

கோத்தபாய தனது முதல் கூட்டத்தில், சிறையில் உள்ள படையினருக்கு அடுத்த நாளே விடுதலை என்கிற வாக்குறுதியையும் விவசாயிகளின் கடன் தள்ளுபடி மற்றும் அவர்களுக்கு இலவச உர விநியோகம் என்கிற வாக்குறுதிகளையும் எடுத்த எடுப்பிலேயே அறிவித்திருக்கிறார்.

அனுராதபுரம் விவசாய மாவட்டம் என்கிற ரீதியிலும் தமது வாக்காளர்களில் பெரும்பாலானவர்கள் கிராமப்புற மக்களே என்கிற ரீதியிலும் ராஜபக்சக்களின் இந்த அறிவிப்பு கவர்ச்சிகரமானவை.

நேற்றைய ஐ.தே.க. கூட்டத்தில் இத்தகைய கவர்ச்சிகமான அறிவிப்புக்கள் எவற்றையும் காண முடியவில்லை. பொன்சேகாவைப் பாதுகாப்பு அமைச்சராக்குவது மற்றும் நேர்மையான ஆட்சி என்கிற முழக்கங்களே அங்கு முன்வைக்க ப்பட்டன. தமிழர்களுக்கான தீர்வு உள்ளிட்ட எந்தவொரு முக்கியமான விடயத்தின் மீதும் எந்தக் கருத்தும் தெரிவிக்கப்படவில்லை என்பதும் கூர்ந்து நோக்கத்தக்கது.

எனவே இன உணர்வு, அபிவிருத்தி, சலுகைகள் என்பவற்றின் மீது ராஜபக்சாக்கள் பயணிக்க, அனைத்து இனங்களுக்குமான சமத்துவம், அபிவிருத்தி, நேர்மையான ஆட்சி என்கிற கோசங்களுடன் ஐ.தே.க. பயணிக்க முயற்சிக்கிறது.

ஆக, இருதரப்புக்களும் தத்தமது வாக்குப் பலத்தின் மீதே தமது கோட்டையைக் கட்ட முயற்சிக்கின்றன என்பது தெளிவானது. இரு தரப்பினரதும் தொடகக் கூட்டங்கள் கடும் போட்டியை எதிர்வு கூறி நிற்கும் நிலையில் வடக்கு, கிழக்குத் தமிழ் வாக்குகள் வெற்றியை நிர்ணயிப்பதில் எதிர்பார்க்கப்பட்டதிலும் பார்க்க முக்கிய பங்கை வகிக்கப்போகின்றன. அதற்கேற்ற வகையில் இந்த சமூகங்கள் தமது பலத்தைப் பேரம்பேசலுக்குப் பயன்படுத்துமா அல்லது வழக்கம் போலவே கோட்டைவிட்டுவிட்டுப் புலம்பிக் கொண்டு நிற்குமா என்பது இன்னும் சில வாரங்களில் தெரிந்துவிடும்.

# மன்னிக்கக் கூடியதல்ல நீராவியடிச் சம்பவங்கள்

■ சேரலாதன்



இன முரண்பாடு ஏற்படுவதைத் தடுப்பதற்காகவே தாம் நீதிமன்றத் தீர்ப்பை மதிக்கவில்லையென முல்லைத்தீவு பொலிஸார் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் விசாரணைகளின் போது தெரிவித்துள்ளமை நகைப்புக்கிடமானது.

செம்மலை நீராவியடிப் பிள்ளையார் ஆலய வளாகத்தினுள் பௌத்த பிக்கு ஒருவரின் உடல் நீதிமன்றக் கட்டளையையும் மீறித் தகனம் செய்யப்பட்டமை தொடர்பான விசாரணைகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்பாக இடம்பெற்றபோதே நீதிமன்ற உத்தரவைத் தாம் மீறியதற்கான காரணத்தைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

### கடமை தவறிய பொலிஸார்

நீதிமன்ற உத்தரவை நடைமுறைப்படுத்துவதுதான் பொலிஸாரின் பணியே தவிர அதை உதாசீனம் செய்வதல்ல என்பதை முதலில் நாம் நினைவில் கொள்ள வேண்டும். நீராவியடியில் ஒரு இனத்துக்கும் அதைச் சார்ந்த மதப் பிரிவினருக்கும் எதிரான சம்பவங்களே இடம்பெற்றுள்ளன. இந்தச் சம்பவங்கள் இடம்பெறாமல் பொலிஸார் முன்கூட்டியே தடுத்திருக்க வேண்டும். அவ்வாறு நடந்திருந்தால் இன முரண்பாடு இடம்பெறுவதற்கான வாய்ப்பே ஏற்பட்டிருக்காது. நீராவியடியில் அடாவடிச் சம்பவங்கள் இடம்பெறும் போது வெறுமனே பார்த்துக் கொண்டிருந்தமை மன்னிக்க முடியாத குற்றமாகும். நீதிமன்றத் தீர்ப்பை மீறியவர்கள் எவராக இருந்தாலும் அவர்களுக்குரிய தண்டனை வழங்கப்படுதல் அவசியமானதாகும்.

நியாயப்படுத்தும் சிங்கள அரசியல்வாதிகள் ஆனால் நீராவியடியில் இடம்பெற்றதை இனவாதச் சிந்தனை கொண்ட சிங்கள அரசியல்வாதிகள் சிலர் நியாயப்படுத்துகின்றனர். தமிழர் தரப்புப் பேசாமல் இருந்திருந்தால் அங்கு குழப்பங்கள் ஏற்பட்டிருக்காதெனவும், குழப்பங்கள் ஏற்படுவதற்குத் தமிழர்களே காரணமெனவும் மகிந்த தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் கூறியுள்ளார். மேலும் இந்த நாடு சிங்கள பௌத்தர்களுக்கே உரியதெனப் பொருள்படும் வகையிலும் அவர் கூறியிருக்கிறார். இந்த நாட்டில் சிங்கள பௌத்தர்கள் பெரும்பான்மையினராக வாழ்ந்தாலும் ஏனைய இனத்தவர்களும் இந்த நாட்டுக் குடிமக்களே என்பதையும், சகல உரிமைகளும் அவர்களுக்கு உண்டென்பதையும் எவருமே மறுத்துரைக்க முடியாது. ஐ.நா. மனித உரிமைகள் சாசனமும் ஒரு நாட்டில் வாழுகின்ற குடி மக்களின் மனித உரிமைகளை உறுதி செய்கின்றது. ஆனால் இனவாதிகள் இவற்றையெல்லாம் கவனத்தில் கொள்ளாதிருப்பது கவலைக்குரியது.

### உண்மையை ஆராய வேண்டும்

உயர்மட்ட அரசியல்வாதிகள் நீராவியடியின் வரலாற்றைக் கவனமாக ஆய்வு செய்து அங்குள்ள உண்மைத் தன்மையை வெளிக்கொணர வேண்டும். பௌத்தர்களே வசிக்காத அந்த இடத்தில் விகாரையை அமைப்பதற்கான தேவை குறித்தும் ஆராய்ந்து பார்க்க வேண்டும். அதுவும் இந்து ஆலயமொன்றுக்கு அண்மித்ததாக பௌத்த விகாரை அமைக்கப்பட்டதன் பின்னணியையும் ஆய்வுக்கு உட்படுத்த வேண்டும். இதை விடுத்து இதுவொரு சிங்கள பௌத்த நாடு இங்கு எதை வேண்டுமென்றாலும் எம்மால் செய்ய முடியும் என்ற ஆணவம் நிறைந்த வார்த்தைகளைக் கூறுவதால் பொய் ஒருபோதுமே உண்மையாகி விடாது.

### வரலாற்றை மீட்ப்பாருங்கள்

கலிங்க தேசத்தின் மீது போர்தொடுத்து அதைச் சின்னா பின்னமாக்கியதுடன் பலரது அழிவுக்கும் காரணமாகவிருந்த அசோக மன்னன் மனம் வருந்தி பௌத்த மதத்தைத் தழுவியதாக வரலாறு கூறுகின்றது. அசோகனின் வாரிசுகளே இலங்கையில் பௌத்த மதத்தைத் தோற்றுவித்திருக்கிறார்கள். இன்று மதவாதமும், இனவாதமும் பேசுகின்றவர்கள் இந்த வரலாற்றையும் ஒரு கணம் புரட்டிப் பார்க்க வேண்டும். உண்மை நிலையை உணர்ந்து கொள்ள வேண்டும்.


இந்த நாட்டின் அடித்தளத்தை ஆட்டம் காணச் செய்த கொடிய போர் ஓய்ந்து 10 ஆண்டுகள் ஆகிவிட்டன. நாட்டில் ஓரளவு அமைதியும் நிலவுகின்றது. இதைச் சஜித்துக்கொள்ள முடியாத சிலர் குழப்பங்களை ஏற்படுத்தி வருகின்றனர். தமிழர்கள் மீது பழியைப் போட்டுவிட்டுத் தப்பிக்கவும் முயல்கின்றனர். இன்னுமொரு போரை எதிர்கொள்ளக் கூடிய நிலையில் தமிழர்களும் இல்லை. சிங்களவர்களும் இல்லை. அந்த அளவுக்குப் போர் அனைவரையும் பாதித்துவிட்டது. ஆகவே சமாதானமாக வாழ்வதே அனைவருக்கும் உகந்தது. கண்ட கண்ட இடங்களிலெல்லாம் விகாரைகளை அமைப்பதும் சிங்களக் குடியேற்றங்களை ஏற்படுத்தித் தமிழர்களை அவர்களது வாழ்விடங்களில் இருந்து துரத்துவதும் நாட்டில் சமாதானத்துக்கும் நல்லிணக்கத்துக்கும் உதவ மாட்டாதென்பதுடன் மோதல்களுக்கும் வழி வகுத்துவிடும்.

### குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும்

நீராவியடி விவகாரத்தில் நீதிமன்றமும் தொடர்புடையதாக இருப்பதால் உண்மையான குற்றவாளிகள் இனம் காணப்பட்டுத் தண்டிக்கப்பட வேண்டும் . இதில் பொலிஸார் ஏதாவது தவறிழைத்திருந்தால் அவர்களுக்கும் உரிய தண்டனை வழங்கப்படல் வேண்டும். நீதிமன்றத்தை அவமதித்தமை மிகப்பெரிய குற்றமென்பதால் அதைப் புரிந்தவர்கள் தயவு தாட்சண்யம் பார்க்காது தண்டனைக்குள்ளாக்கப்பட வேண்டும். இதில் தவறு ஏற்படுமானால் நாட்டில் அமைதியையும் நல்லிணக்கத்தையும் எதிர்பார்க்க முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிளாஸ்டிக் எனும் அணுகுண்டு



பிளாஸ்ரிக் பயன்பாட்டால் விளையும் விபரீதங்கள் குறித்து நமக்குத் தெரிந்திருந்தும் அதைத் தொடர்ந்து பயன்படுத்துவதற்குக் காரணம் அவை நமது அன்றாடங்களின் தவிர்க்க முடியாத அங்கமாகி விட்டமையே. பிளாஸ்டிக் பயன்பாட்டுக்குப் பழகிவிட்ட நம்மால் அதிலிருந்து மீண்டுவர முடியவில்லை. அதன் குறைகளைப் பேசிக்கொண்டிருக்கும் அதேவேளையில், அதன் பயன்பாட்டையும் நாம் ஏதோ ஒருவகையில் அங்கீகரிப்பதுதான் அதன் பிடியில்



சிக்கியிருப்பதற்குக் காரணம்.

பிளாஸ்ரிக் என்றால் பொலிமர் என்று பொருள். கரிமச் சேர்மங்களால் ஆன பொலிமர்களுக்கு மின்சாரத்தைக் கடத்தும் பண்பு இல்லை. ஆனால், மின்கடத்தி பொலிமர்கள் என்றழைக்கப்படும் மின்சாரத்தைக் கடத்தும் பொலிமர்கள் தற்போது உருவாக்கப்படுகின்றன. பொலி அசிட்டிலீன், பாலிதைரோல் இதன் உதாரணங்கள்.

**மின்கடத்தி பொலிமர்கள்**

மிகவும் குறைவான மின்சாரத்தைக் கடத்தும் இந்த வகை பொலிமர்கள் பயோ கெமிக்கல்களில் பயன்படுத்தப்படுகின்றன. பொட்டாசியம் குறைபாட்டால் ஏற்படும் நரம்பியல் பிரச்சினைகளைச் சரிசெய்ய மின்கடத்தி பொலிமர்கள் உதவுகின்றன. மின்கடத்திப் பொலிமர்கள் நம் செல்களோடு இயைந்து செயல்படுவதால் மருத்துவத் துறையில் இவை அதிக அளவில் பயன்படுத்தப்படுகின்றன. இந்த வகை பொலிமர்களை உருவாக்குவதற்கான செலவும் குறைவு. எம்ஆர்ஐ உபகரணங்கள் தயாரிக்கப்படுவதும் இவ்வகை பிளாஸ்ரிக்கால்தான்.

மின்கடத்தி பொலிமர்கள் பயோ சென்சார்களாகவும் செயல்படுகின்றன. இதன் முக்கியமான அடுத்தகட்டப் பயன்பாடு பயோ தன்னியங்கிகள். இவை சாக்கடை, கழிப்பறைகள், கழிவுநீர்க் குழாய்களில் வெளியாகும் துர்நாற்றத்தைத் தடுக்கவும், துர்நாற்றத்துக்குக் காரணமான பக்டீரியாக்களை உடனடியாக அழிக்கவும் செய்கின்றன.

**பிளாஸ்ரிக் மறுசுழற்சி**

பிளாஸ்ரிக்கின் பிரச்சினையைப் பட்டியலிடத் தொடங்கும்போது, அங்கே முதல் வரிசையில் நிற்பது அதன் மக்காத தன்மை. மக்கும் தன்மை அற்றவையாகவும், அப்புறப்படுத்த முடியாதவை யாகவும் உள்ள செயற்கை பிளாஸ்ரிக்குகளை மக்கச் செய்ய தீவிரமான ஆய்வுகள் நடைபெற்றுவருவது ஒரு நல்ல செய்தி. அதற்காக, இயற்கையான பிளாஸ்ரிக்கு களை செயற்கையானவற்றுடன் இணைத்து புதிய வகை 'செமி சிந்தடிக்' பிளாஸ்ரிக்கை உருவாக்கும் ஆராய்ச்சிகள் நடந்துகொண்டிருக்கி ன்றன.

குறிப்பிட்ட வெப்பநிலை மற்றும் அழுத்தத்தில் பிளாஸ்ரிக்குகளை மறுசுழற்சிக்கு உட்படுத்தலாம். ஆனால் முறையாக மறுசுழற்சி செய்யாத நிலையில் வெளியாகும் வாயுக்கள் மிகவும் ஆபத்தானவை. பிளாஸ்ரிக்கின் மக்காத தன்மையைக் கருத்தில் கொண்டு சிலர் பிளாஸ்ரிக்கை எரிக்கும் விபரீதத்தில் ஈடுபடுகிறார்கள். பிளாஸ்ரிக் மண்ணில் புதைவதைவிட இது மிகவும் மோசமானது. பிளாஸ்ரிக் எரியும்போது வெளியாகும் எத்திலின், எத்திலின் ஆக்ஸைடு போன்ற வாயுக்கள் மிகவும் கேடு விளைவிப்பவை; உயிரைக் குடிக்கும் அளவுக்கு ஆபத்தானவை.

**பயோ பிளாஸ்ரிக்**

மக்காத பிளாஸ்ரிக்குக்கு மாற்றாக மக்கும் தன்மை கொண்ட பயோ பிளாஸ்ரிக்குகள் உருவாக்கப்படுகின்றன. உலக வெப்பமயமாதல் அச்சுறுத்தல்களால் பயோ பிளாஸ்ரிக் துறை மெல்ல வளர்ந்துவருகிறது. இவ்வகை பிளாஸ்டிக்குகள் ஓராண்டுக்குள் முழுமையாக மக்கிவிடும். இவற்றை உரங்களாகக்கூடப் பயன்படுத்த முடியும். மக்கும் தன்மை கொண்ட பிளாஸ்ரிக்குகளிலும் பிளாஸ்டிக் மூலக்கூறுகள் முழுமையாக மக்குவதில்லை என்ற குற்றச்சாட்டு எழுப்பப்படுகிறது. மரபுரீதியாகவே பாக்டீரியாக்கள் மூலம் முழுமையாக மக்கும் பயோபோல் எனப்படும் பிளாஸ்ரிக்கை ஆராய்ச்சியாளர்கள் உருவாக்கியுள்ளனர். ஆனால், அவற்றின் விலை காரணமாகச் சந்தையில் பரவலாகவில்லை. 2015 கணக்கெடுப்பின்படி பெட்ரோலியப் பொருட்களிலிருந்து தயாரிக்கப்படும் பிளாஸ்டிக் 15 கோடி தொன். அதேநேரத்தில், பயோ பிளாஸ்டிக்குகள் 3 லட்சத்து 27 ஆயிரம் தொன் மட்டுமே உற்பத்தியாகின்றன.

**அச்சுறுத்தும் பிளாஸ்டிக்**

பிளாஸ்ரிக்கில் மாற்று வகைகளை உருவாக்க முயற்சிகள் எடுக்கப்படுகின்றபோதும், பிளாஸ்ரிக்கால் தீங்குகள் ஏற்படும் என்பதை மறுக்க முடியாது.



பிளாஸ்ரிக்கில் மாற்று வகை என்பது தீங்குகளைக் குறைக்கும் செயல் தவிர, தீங்கை இல்லாது செய்யும் முயற்சி அல்ல. பிளாஸ்ரிக் பொருள்களை தவிர்ப்பதே இதற்கு முழுமையான தீர்வாகக் கருதலாம். ஆனால் அது நடைமுறையில் பெரும் சிக்கலான காரியமே. ஒவ்வொரு தனிநபரின் மாற்றத்தில் இருந்தே இது சாத்தியமாகலாம்.

## ஆசிரியருக்கான கடிதம்

# ஊரெழுச்சித்திட்டத்தில்அபிவிருத்தியடையும்கிராமங்கள்

கம்பெரலிய என்ற ஊரெழுச்சிட்டத்தின் கீழ் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் நீண்ட காலங்கள் கவனிப்பாரற்று இருந்த வீதிகள் பல அபிவிருத்தி கண்டுள்ளன. யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் அதற்கான நிதி ஒதுக்கீடுகளை வழங்கி, சிறு வீதிகளையும் சீரமைத்து கிராமத்தை வளம் பெறச் செய்துள்ளனர். இந்தத் திட்டம் உண்மையில் பாராட்டக் கூடியது. பல வருடங்கள் கடந்தும் எவராலும் கவனிக்கப்படாத பல அபிவிருத்தித் திட்டங்கள் இந்தத் திட்டத்தின் ஊடாக முன்னெடுக்கப்பட்டுள்ளன. குறிப்பான ஒரு கிராமத்தின் முதன்மைப் போக்குவரத்து வசதிகள் சீர் செய்யப்பட்டுள்ளன. வீதிகளின் திருத்தங்களால் கிராமங்களும் அழகுற்றுள்ளன. திட்டத்தைச் சரியாகப் பயன்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் பாராட்டக் கூடியவர்களே.

–யாழ்.வாசி.

## வாசகர்களே!

ஆசிரியருக்கான கடிதம் பகுதிக்கு வந்துசேர்கின்ற பல கடிதங்கள் எழுதுபவரின் சுயவிவரங்கள் இலலாத காரணத்தால் [illegible] பிரசுரிக்க முடியாத நிலையில் இருக்கின்றன. ஆகையால் தாங்கள் ஆசிரியருக்கு எழுதுகின்ற கடிதத்தில் உங்களுடைய பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், மின்னஞ்சல் பயன்படுத்துபவராக இருந்தால் மின்னஞ்சல் முகவரி போன்றவற்றைத் தவறாது குறிப்பிட்டு அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். தங்களின் பெயர் விவரங்களை வெளிப்படுத்த வேண்டாம் என்றால் அது குறித்துக் குறிப்பிடுங்கள். மேற்குறித்த விடயங்கள் இணைக்கப்படாத கடிதம் பிரசுரிக்கப்ப டாது என்பதைக் கவனத்தில் கொள்க! எழுதுகின்ற விடயத்தை உறுதிப்படுத்தும் வகையிலான ஆவணங்கள் ஏதும் இருந்தால் அவற்றை இணைத்து அனுப்புவதும் சிறந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூற்றாண்டு விழாவும் பரிசளிப்பு நிகழ்வும்

ஏழாலை,ஒக்.11
யாழ்ப்பாணம், ஏழாலை மேற்குசைவசன்மார்க்க வித்தியாசாலையின் நூற்றாண்டு விழாவும் பரிசளிப்பு நிகழ்வும் இன்று நடைபெறவுள்ளன.

வித்தியாசாலை கந்தசாமி அரங்கில் பிற்பகல் ஒரு மணிக்கு அதிபர் க.கெங்காதரகீர்த்தி தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில்ஆசியுரையை சிவசிறி சுந்தரசெ ந்தில் ராஜக்குருக்கள் வழங்கவுள்ளார்.

முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகதகுதிவாய்ந்த அதிகாரியான பேராசிரியர் க.கந்தசாமி, சிறப்பு விருந்தினராக லண்டன் ஹறோ நுண்கலை தமிழ் பாடசாலையின் அதிபரும் பொறியியலாளருமான "சன்மார்க்கன்" மு.குமாரநாயகமும், மதிப்புறு விருந்தினர்களாகநாடாளுமன்ற முன்னாள் எதிர்க் கட்சித் தலைவரின் செயலர் இ.பேரின்பநாயகம், சமூக ஆர்வலர் க.சிறியானந்தன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

தொடர்ந்து நாளை மற்றும் நாளைமறுதினம் நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

இரண்டாம் நாள் நிகழ்வு நாளை சனிக்கிழமை பாடசாலை கந்தசாமி அரங்கில் மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ளது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர்பேராசிரியர்என்.சண்முகலிங்கன் கலந்து கொள்ளவுள்ளார்.

மூன்றாம் நாள் நிகழ்வு நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை பாடசாலை கந்தசாமி அரங்கில் பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாணகல்விபண்பாட்டலுவல்கள் விளை யாட்டுத்துறை மற்றும் இளைஞர்விவகாரஅமைச்சின் செயலர் இ.இளங்கோவன்கலந்துகொள்ளவுள்ளார். (ஐ-39)



யாழ்ப்பாணம், ஏழாலைமேற்குசைவசன்மார்க்க வித்தியாசாலையின்நூற்றாண்டுவிழாவைமுன்னிட்டு நடைபவனி ஒன்று நேற்றுமுன்தினம் புதன்கிழமை காலை ஆரம்பமாகி நடைபெற்றது. நடைபவனியில் அதிபர் ,ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் நலன் விரும்பிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ஐ)

# விவசாயிகளைப் பாதுகாப்பது நாகரிகத்தைப் பாதுகாப்பதாகும்

## வடக்கு ஆளுநர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 11
விவசாயிகளை நாம் பாதுகாப்பது எமது நாகரிகத்தைப் பாதுகாப்பதற்குச் சமன் என்று வடக்கு மாகாண ஆளுநர்கலாநிதி சுரேன் ராகவன் தெரிவித்தார்.



வடக்கு மாகாணத்தில் கமத்தொழிலுக்காகக் கிளிநொச்சியில் அமைந்துள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் விவசாய பீடத்தில் முதன்முறையாக விவசாயிகளுக்கு மூன்று மாதங்கள் இயந்திர பயிற்சிநெறியைஆரம்பித்துவைக்கும் நிகழ்வும் அண்மையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் டிஜிட்டல் தொடர்பாடல் மூலம் தொடர்புகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாணத்தில் வெறுமனே கமக்காரர்களுக்குமட்டுமன்றி, பல்கலைக்கழகத்துக்கு மட்டுமன்றி வடக்கு மாகாணத்தின் எதிர்காலம் தங்கியுள்ளது விவசாயத் துறையிலேயே. விவசாயிகளைப் பாதுகாப்பது எமது நாகரிகத்தைபாதுகாப்பது போன்றது.

21ஆம் நூற்றாண்டில் மனித முயற்சிகள்விண்ணைத்தொட்டுள்ளன. அதுபோன்ற எல்லா முயற்சிகளுக்கும் பின்னால் இருக்கின்ற பெரிய முக்கிய விடயம் உணவுப் பாதுகாப்பு.

இது இல்லாவிடின்மனிதநாகரிகம் அழிந்துவிடும். எனவே உணவு உற்பத்தி தொடர்பில் முக்கிய கவனம் செலுத்தவேண்டும்.

21ஆம்நூற்றாண்டின்சவால்களை இந்தஉணவுஉற்பத்திஎதிர்நோக்க தயாராகஇருக்கவேண்டும்.எனவே விஞ்ஞானமும்அறிவும்விவசாயத்தையும் பாமர மக்களையும் நோக்கிச் செல்லவேண்டும்- என்றார்.

இந்தப் பயிற்சிநெறி வடக்கு மாகாண ஆளுநரின் எண்ணக் கருவில் ஆளுநர் செயலகம் மற்றும் களனி கேபிள்ஸ் நிறுவனம் ஆகியவற்றின் அனுசரணையில் இது நடைபெற்றது.

நிகழ்வில்ஆரம்பசான்றிதழ்கற்கை நெறிக்காகமுதற்கட்டமாக30விவசாயிகள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

இந்தப் பாடநெறியில் இயந்திரங்கள்எவ்வாறுதொழிற்படுகின்றன, அவற்றின்பயன்பாடு, முகாமைத்துவ அறிவு தொடர்பாகவும் விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (து-7)

## ஆவணக் காப்பக நிகழ்வு நாளைமறுதினம் நடக்கும்

யாழ்ப்பாணம், ஒக். 11
சமகாலக் கலை, கட்டடக் கலைமற்றும்வடிவமைப்புக்கான இலங்கை ஆவணக்காப்பகம், யாழ்ப்பாணத்தில் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் நடத்தும் நிகழ்ச்சித் தொடர் சிலவாரங்களுக்குப் பின்னர் நாளைமறுதினம்ஞாயிற்றுக்கிழமை நடத்தப்படவுள்ளது.

ஆவணக் காப்பகத்தின் 68ஆவதான இந்த நிகழ்வுமுற்பகல்10மணி தொடக்கம் மதியம் 12 மணிவரை சமகாலக் கலை, கட்டடக்கலை மற்றும் வடிவமைப்புக்கான இலங்கைஆவணக்காப்பகம், 199, கோவில்வீதி, நல்லூர் எனும் முகவரியில் இடம்பெறவுள்ளது.

தற்பொழுது கொழும்பைத்தளமாகக்கொண்டு இயங்கும் காண்பியக் கலைஞரானதிசத்தொறடெனியவின்'2014க்குப் பிறகு' எனும் தலைப்பிலான உரை இடம்பெறவுள்ளது.

இவர் 1975ஆம் ஆண்டில் கண்டியில் பிறந்து விபவி நுண்கலை அக்கடமி மற்றும் கொழும்பு தேசிய வடிவமைப்பு மையத்தில் கல்வி கற்று இலங்கை மற்றும் இந்தியாவில் காட்சிப்படுத்தல்களைச் செய்துள்ளார்.

கலைஞர்களுக்கான பல பயிற்சிப்பட்டறைகளிலும் பங்குபற்றியுள்ளார். நிகழ்வில் கலை ஆர்வலர்கள் அனைவரும் கலந்து பயன்பெறுமாறுஇலங்கை ஆவணக் காப்பகத்தின் முகாமையாளர் ஸ்ரிபன் கனகலிங்கம் கேட்டுக் கொண்டுள்ளார். (து-21)

## நாட்டில் சமாதானம் வேண்டி நல்லூரிலிருந்து பாதயாத்திரை

கொடிகாமம்,ஒக்.11
நாட்டில் சமாதானம் வேண்டி நல்லூரில் இருந்து சிவலிங்கம் தாங்கிய ஊர்தியுடன் கூடிய பாதயாத்திரை இன்று வெள்ளிக்கிழமைகாலை7மணிக்கு ஆரம்பமாகி வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தை மறுநாள் சென்றடையும். இலங்கைமுதலுதவிச்சங்க இந்து சமயத் தொண்டர்சபை, யாழ்ப்பாணம் சின்மயா மிஷனின் ஆலோசனைக் கமைய வல்லிபுர ஆழ்வார்ஆலயத்தேர்த்திருவிழாவை முன்னிட்டு இந்தப் பாதயாத்திரையை ஏற்பாடு செய்துள்ளது.

நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் ஆரம்பிக்கும் பாதயாத்திரை, பருத்தித்துறை வீதியூ [illegible] டாகப் பிரபல ஆலங்களில் தரிசிப்பை மேற்கொண்டு வல்லிபுர ஆழ்வார் ஆலயத்துடன் நிறைவடையும்.

நாட்டில் அமைதி, சாந்தி, சமாதானம், நல்லிணக்கம், இனங்களுக்கிடையே பேதங்கள் நீங்கி ஒற்றுமை வளர இறையருள் வேண்டி இந்தப் புனித திருத்தலபாதயாத்திரை ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளது என்று இலங்கை முதலுதவிச் சங்கமும், இந்துசமயத்தொண்டர் சபையினரும்அறிவித்துள்ளனர். (கு-159)

## கடலாமை இறைச்சியுடன் பெண் ஒருவர் கைதானார்

யாழ்ப்பாணம்,ஒக்.11
கடலாமை இறைச்சி வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் பெண் ஒருவர் கடற்படையினரால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார் என்று கடற்படை ஊடகம் தெரிவித்துள்ளது.

கடற்படைமற்றும்பொலிஸார் இணைந்து யாழ்ப்பாணம், மாதகல் பகுதியில்நடத்திய சோதனை நடவடிக்கையின்போது கடலாமை இறைச்சி வைத்திருந்த குற்றச்சாட்டில் குறித்த பெண் கைது செய்யப்பட்டுள்ளார்.

மாதகல் பகுதியில் உள்ள அவரது வீட்டில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 38.8 கிலோ கிராம்கடலாமைஇறைச்சியும் மீட்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட பெண்49வயதுடையவர் எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணை களைப் பொலிஸார் முன்னெடுத்துவருகின்றனர். (கு-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சில அபிவிருத்திகளுக்கு சரா எம்.பி 4.6 மில். நிதி

## தென்மராட்சிக்கு வழங்கியுள்ளார்

சாவகச்சேரி, ஒக்.11

நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவண பவன் தென்மராட்சியில் 5 பாட சாலைகளில் திறன் வகுப்பறைகள் உருவாக் கத்துக்கும், மேலும் 4 அபிவிருத்தி வேலைத் திட்டங்களுக்குமென 4.6 மில்லியன் ரூபா வுக்கான முன்மொழிவை வழங்கியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.



இந்த முன்மொழிவுகள் தென்மராட்சிப் பிரதேச செயலகத்தால் அங்கீகாரத்துக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளதென்று தெரிவிக்கப்பட்டது.

எழுதுமட்டுவாழ் சிறி கணேசா வித்தியாலயம், மட்டுவில் தெற்கு அ.மி.த.க.வித்தியாலயம், மந்துவில் சிறி பாரதி வித்தியாலயம், கைதடி குருசாமி வித்தியாலயம், கொடிகாமம் நாவற்காடு கணபதிப்பிள்ளை வித்தியாலயம் ஆகிய 5 பாடசாலைகளில் திறன் வகுப்பறை உருவாக்குவதற்கும், சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்குக் கல்வி உபகரணம் கொள்வனவு செய்யவும், கரம்பகம் கந்தன்வெட்டி வீதி, பாலாவி விறுமர் கோவில் வீதி, பாலாவி பால் நிலா சனசமூக நிலையச் சீரமைப்பு ஆகிய வேலைத் திட்டங்களுக்கும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு முன்மொழிவு பிரதேச செயலகத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது.

அதற்கான அங்கீகாரத்தை வழங்குமாறு உரிய திணைக்களங்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதென்றும் தெரிவிக்கப்பட்டது. தென்மராட்சியில் நாடாளுமன்ற உறுப்பினர் முன்னரும் 5 பாடசாலைகளில் திறன் வகுப்பறைகள் உருவாக்கல் உட்பட 11 வேலைத்திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. (கு-9)

## வாசிப்பும், யோகாசன நிகழ்வும்

கொடிகாமம்,ஒக்.11

சாவகச்சேரிப் பிரதேச சபையின் கச்சாய் பொது நூலகத்தின் வாசிப்பும், யோகாசன நிகழ்வும் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தவிசாளர் க.வாமதேவன் தலைமையில்நடைபெறவுள்ளது. தென்மராட்சி கிழக்குஅபிமாக்கழகத்தின் அனுசரணையுடன் அபிவிருத்தி சபை இணைந்து நிகழ்வை நடத்தவுள்ளது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராகச் சாவகச்சேரி பிரதேச சபைச்செயலர்திருமதி வா.கிறிஜாகலந்துசிறப்பிக்கவுள்ளார்.

மனநலவளக்கலை யோகா துணைப் பேராசிரியர் திருமதி அ.சரோஜா வளவாளராகக் கலந்து கொள்ளவுள்ளார். (ஐ-159)

## ப.நோ.கூ. சங்கத்துக்கு புதியதலைவர் நியமனம்

யாழ்ப்பாணம்,ஒக்.11

வடமராட்சிக் கிழக்கு பலநோக்குக் கூட்டுறவு சங்கத்துக்கு நியமன அடிப்படையில் புதிய தலைவரும், இரண்டு மேலதிக இயக்குநர்களும் மாவட்ட கூட்டுறவு அபிவிருத்திஉதவி ஆணையாளரால்அண்மையில் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஏற்கனவே பொதுச்சபையால் தெரிவு செய்யப்பட்ட இயக்குநர்சபையினர் மற்றும் தலைவர் பதவியில் இருந்தனர்.

எனினும் குறித்த பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் பல்வேறு குறைபாடுகள் மற்றும் தொடர்ச்சியாக மூன்று முறைக்கு மேல் கோரம் இல்லாது இயக்குநர் சபையைக் கூட்டாமை, முறைகேடுகள் தொடர்ச்சியான இழப்பீடு போன்ற காரணங்களால் பொதுச்சபையால் தெரிவு செய்யப்பட்ட நிர்வாகம் கலைக்கப்பட்டுள்ளது.

புதிய நிர்வாகத்தில் வடமராட்சிக் கிழக்குப் பிரதேச செயலக கணக்காளர் க.சுதர்சன் தலைவராகவும், வடமராட்சி கிழக்குக் கடற்றொழிலாளர்கூட்டுறவுச்சங்கங்களின் சமாசப் பொது முகாமையாளர் தம்பி ஐயாபாலசிங்கம், கிழவித் தோட்டம், கரவெட்டியைச்சேர்ந்த வடமராட்சிக் கிழக்குப் பிரதேசசெயலகப்பணிப்பாளர் மாணிக்கவாசகம் சுபாஸ்கரன் ஆகியோர் மேலதிக இயக்குநர்களாகவும்நியமிக்கப்பட்டுள்ளனர். (க-160)

## கொலைக் குற்றச்சாட்டில் கைதானவர் பொலிஸ் நிலைய தடுப்பில் விசாரணை

யாழ்ப்பாணம், ஒக்.11

யாழ்ப்பாணம் , கோண்டாவில் உப்புமடச்சந்தி இரும்பக உரிமையாளரைத் தாக்கிக் கொலை செய்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இளைஞனை 48 மணி நேரம்பொலிஸ்தடுப்புக்காவலில் வைத்து விசாரிக்க யாழ்ப்பாண நீதிவான் மன்று அனுமதியளித்தது.

கோண்டாவில், உப்புமடச் சந்தியில்அமைந்துள்ளலக்சுமிஇரும்பகத்தின் உரிமையாளர் கந்தையாகேதீஸ்வரன் (வயது - 47) வன்முறைக் கும்பலின் தாக்குதலில் உயிரிழந்தார்.

கடந்த செம்ரெம்பர் 6ஆம் திகதி மாலை4மணியளவில்தாக்குதல் இடம்பெற்றது. இரண்டு உந்துருளிகளில் வந்த கும்பல் ஒன்று இரும்பகத்துக்குள்புகுந்துஅதன் உரிமையாளரைக்கண்மூடித்தனமாகத் தாக்கியதுடன், இரும்பகத்துக்குள் அட்டூழியத்தில் ஈடுபட்டு விட்டுத்தப்பித்தது.

இரும்பகத்தில் இருந்த மரக் கட்டை ஒன்றை எடுத்து உரிமையாளரின் தலையில் கும்பல் தாக்கியிருந்தது. அதனால்தலையில் படுகாயமடைந்த அவர், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார். சிகிச்சை பயனளிக்காது 24நாள்களின்பின்னர் கடந்த 30ஆம்திகதி இரவு உயிரிழந்தார்.

இந்தத் தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடையவர்களின் ஒளிப்படங்கள் மற்றும் மறைகாணிப் பதிவுகள் பொலிஸாரால்வெளியிடப்பட்டிருந்த நிலையில், தாக்குதல் மேற்கொண்ட இருவரும் தலைமறைவாகியிருந்தனர்.

தலைமறைவாகியிருந்த இருவரில் ஒருவர் பொலிஸாரின் தீவிர தேடுதலில் கிளிநொச்சியில் வைத்து நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டார். கொக்குவிலைச் சேர்ந்த இளைஞரே கோப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

ஆரம்ப விசாரணைகளின் பின்னர் யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான்ஏ.பீற்றர்போல்முன்னிலையில் நேற்றுமுன்தினம் முற்படுத்தப்பட்டார்.

"இந்தக்கொலைச்சம்பவத்துடன் தொடர்புடையமேலும்சிலர்கைது செய்யப்படவேண்டும். கொலையின்பின்னணிதொடர்பில்விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதால் சந்தேகநபர் பொலிஸ் தடுப்புக் காவலில் வைத்து விசாரிக்க அனுமதிக்கவேண்டும்" என்று பொலிஸார் விண்ணப்பம் செய்தனர். பொலிஸாரின் விண்ணப்பத்துக்குகடும்ஆட்சேபனைதெரிவித்தசந்தேகநபரின்சட்டத்தரணி வினோராஜ், பிணைவழங்க மன்றுரைத்தார்.

இருதரப்புவிண்ணப்பங்களையும் ஆராய்ந்த நீதிவான் ஏ.பீற்றர் போல்,கொலைச்சம்பவம்தொடர்பில் விசாரணைகளைத் துரிதப்படுத்தபொலிஸாரைஅறிவுறுத்தியதுடன்,சந்தேகநபரை48மணித்தியாலங்கள் தடுப்புக் காவலில் வைத்து விசாரிக்க அனுமதியளித்தார். வழக்கு இன்றுவரை ஒத்திவைக்கப்பட்டது. (த-37)



உலக நல்லொழுக்க தினத்தை முன்னிட்டு வடமராட்சி நல்லொழுக்க நிறுவனத்தின் ஏற்பாட்டில் கொடி வார நிகழ்வுகள் இடம்பெற்றதைப் படங்களில் காணலாம். (ஐ)

## வீதிப் பாதுகாப்பு வாரத்தில் வாகனங்கள் பரிசோதனை

யாழ்ப்பாணம்,ஒக்.11

வடக்கு மாகாண வீதிப் பாதுகாப்பு வாரத்தை முன்னிட்டு ஏ-9 வீதியில் வாகனங்களைப் பரிசோதித்தல் மற்றும் ஆலோசனை வழங்கும் நடவடிக்கைகள்முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கடந்த 7ஆம் திகதி வடக்கு மாகாண வீதிப் பாதுகாப்பு வாரம் ஆளுநர் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதனை முன்னிட்டு பல்வேறு விழிப்புணர்வு நடவடிக்கைகள் வடக்குமாகாணத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஏ-9 வீதி, மாங்குளம் பகுதியில்வீதிப்பாதுகாப்புசபையினர் பரிசோதனை நடவடிக்கைகளைமுன்னெடுத்தனர். வாகனச் சாரதிகள் பயணத்தின்போது தூக்கமின்மை, உடல்நலம்மற்றும்வாகனங்களில் பொருத்தப்பட்டுள்ள மின்குமிழ்கள் தொடர்பில் பரிசோதிக்கப்பட்டதுடன், அவர்களுக்கான ஆலோசனைகள் வழங்கும் விழிப்புணர்வுச் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.



இரவு நேரப் பயணத்தின் போது வாகன விபத்துக்களைத் தவிர்க்கும் பொருட்டு ஒளிரூட்டிஸ்டிக்கர்கள் வாகனங்களில் பொருத்தும் நடவடிக்கையும்தற்போதுமுன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (க-7)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அபிவிருத்தியில் மன்னார் பின்தங்கியே இருக்கின்றது

## ஜேர்மன் தூதுவரிடம் ஆயர் தெரிவிப்பு

தலைமன்னார், ஒக். 11

மன்னார் மாவட்டம் அபிவிருத்தியில் தொடர்ந்து பின்னடைவையே கண்டு வருகின்றது. அபிவிருத்தி அடைவதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று இலங்கைக்கான ஜேர்மன் தூதுவரிடம் வலியுறுத்தப்பட்டுள்ளது.



மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை இதை வலியுறுத்தியுள்ளார்.

தூதுவர் அன்றீஸ் பேர்க் மற்றும் தூதரக வர்த்தக மற்றும்அரசியல்ஆலோசகர்தர்னிதலுவத்த ஆகியோர் மன்னார் மறைமாவட்ட ஆயரை அவருடைய இல்லத்தில் நேற்றுச் சந்தித்தனர்.

மன்னார் மாவட்டத்தின் நிலைமைஎவ்வாறுஇருக்கின்றது, கடந்த ஏப்ரல் 21ஆம்திகதிநடைபெற்ற குண்டுத் தாக்குதல்களுக்குப் பின்னர் மன்னார் மாவட்டத்தில் சமய, இன ஒற்றுமைகள் எவ்வாறு இருந்து வருகின்றன, மாவட்டத்தின் அபிவிருத்திகள் எவ்வாறு அமைந்துள்ளன என்பன தொடர்பில் தூதரக அதிகாரிகள் ஆயரிடம் கேட்டறிந்தனர் என்று ஆயர் தரப்பினர் தெரிவித்தனர்.

கத்தோலிக்க முஸ்லிம் மக்களுக்கிடையே சுமுக நிலைஉள்ளது. ஆனால் மன்னார் மாவட்ட அபிவிருத்தி பின்னடைவிலுள்ளது.

அபிவிருத்தியில் முன்னேற்றம் பெறவேண்டியுள்ளது என்று தூதுவரிடம்கூறியுள்ளனர்என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (த-60,56)

### தென்மராட்சி பிரதேசசெயலக பிரிவுகள் சில புதியகட்டடத்தில்

சாவகச்சேரி, ஒக் 11

தென்மராட்சிப் பிரதேச செயலகக்கேட்போர்கூடத்தில் இயங்கி வந்த பல பிரிவுகள் பிரதேச செயலகத்துக்கு அருகில் உள்ள (முன்னர்கால்நடைமருத்துவர் அலுவலகம் இயங்கிய)கட்டடத்துக்குமாற்றப்பட்டுள் ளன.

பிரதேசசெயலகத்தில்ஏற்பட்டஇடநெருக்கடிகாரணமாகசெயலகக்கேட்போர் கூடத்தில்15 இற்கும்மேற்பட்டபிரிவுகள்அமைக்கப்பட்டுசெயற்பட்டுவந்தன. அண்மையில் பிரதேச செயலகத்துக்குச்சொந்தமான கட்டடத்தில் இயங்கி வந்த கால்நடை மருத்துவர் அலுவலகம் தனன்களப்புச்சாலைக்குமாற்றப்பட்டது.

இதனையடுத்து குறித்த கட்டம்பிரதேசசெயலகத்தால் மீளப்பெறப்பட்டு நாட்டுக்காக ஒன்றிணைவோம் செயற்றிட்ட காலப் பகுதியில் திறந்து வைக்கப்பட்டது. இந்தக் கட்டடத்தில் கலாசாரம் விளையாட்டு சிறுவர் பாதுகாப்பு தொழில் அதிகார சபை, முதன்மை கிராம அலுவலர் அலகு உள்ளிட்ட 15 இற்குமேற்பட்டஅலகுகள் அடுத்தவாரம்தொடக்கம் இயங்குமெனத்தெரிவிக்கப்பட்டது. (ஐ-9)

### திறன் வகுப்பறைகள் திறப்பு விழா

யாழ்ப்பாணம்,ஒக்.11

ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலையின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, பாடசாலையில் அமைக்கப்பட்ட இரண்டு திறன் வகுப்பறைகள் இன்று திறக்கப்படவுள்ளன. பாடசாலையின் பழைய மாணவர்களாகிய வே.கனகசபாபதியின் குடும்பத்தினரால், வேலுப்பிள்ளை-கமலாம்பாள் ஞாபகார்த்தமாகவும், முத்துக்குமாரசாமி - பரமேஸ்வரிதம்பதியினரின் ஞாபகார்த்தமாகவும் அமைக்கப்பட்டுள்ளன. உரியவர்கள் வகுப்பறைகளைத்திறந்துவைத்து, வகுப்பறைக்குரிய உபகரணங்களையும் அதிபரிடம் கையளிப்பர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

## நீதிமன்ற உத்தரவு மீறப்பட்டமைக்கு மாநகர சபை கண்டனத் தீர்மானம்

யாழ்ப்பாணம், ஒக். 11

இறந்த பிக்குவின் சடலத்தை, சட்டத்தைஅவமதித்து முல்லைத்தீவு நீராவியடிப் பிள்ளையார் ஆலய வளாகத்தில் தகனம் செய்தமையை யாழ்ப்பாண மாநகர சபை கண்டித்துத் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

யாழ்ப்பாணமாநகரசபையின் மாதாந்த அமர்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதன்போதே தீர்மானம்நிறைவேற்றப்பட்டது.

நீராவியடிப்பிள்ளையார் ஆலயத்தின் அருகில் இருந்த பௌத்த பிக்கு செப். 21ஆம் திகதி உயிரிழந்தார். அவருடைய சடலத்தை பிள்ளையார் ஆலயம்அருகில்தகனம் செய்யமுல்லைத்தீவுநீதிமன்று இடைக்காலத் தடைஉத்தரவுபிறப்பித்திருந்தது.

அதன் பின்னர் நிரந்தரத் தடை விதிக்கப்பட்ட போதும் இவை அனைத்தையும்மீறிபௌத்ததுறவியின் சடலத்தை சைவ ஆலயம்அருகில்தகனம் செய்து இந்து மக்களின் மனதைத் துன்புறுத்திய செயல்.

இந்த விடயத்தை யாழ்ப்பாண மாநகர சபை வன்மையாகக் கண்டிப்பதோடு நீதிமன்ற உத்தரவைமீறிநீதித்துறையை அவமதித்தவர்கள் மீதும் சட்டம்உரியநடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கண்டனத் தீர்மானத்தை சகல கட்சிகளும் ஏகமனதாக ஏற்றுக்கொண்டன. அது தீர்மானமாக நிறைவேற்றப்பட்டது.

குறித்ததீர்மானம்நீதித்துறைக்கும் பொலிஸார் உள்ளிட்டோருக்கும்அனுப்பி வைக்கப்படும் என்று மாநகர முதல்வர் இ. ஆனல்ட் தெரிவித்தார். (த-105)






### கச்சாய் பொது நூலகத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம்

கொடிகாமம்,ஒக்.11

சாவகச்சேரிப் பிரதேச சபையின் கச்சாய் பொது நூலகத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் நேற்றுமுன்தினம் நூலக மண்டபத்தில் உபதவிசாளர் செ. மயூரன் தலைமையில் நடைபெற்றது

நிகழ்வில் சாவகச்சேரிப் பிரதேச சபையின் முதன்மை முகாமைத்துவ அலுவலகர் சி.பத்மநாதன், கச்சாய் பொது நூலகத்தின் நூலகர் திருமதி கோ.ராதிகா, வாசகர்கள், மாணவர்கள், ஆசிரியர்கள்உட்படபலர்கலந்து கொண்டனர். புதிய நிர்வாகத் தெரிவு இடம் பெற்றது. தலைவராக க.வாமதேவன்,செயலர் திருமதி வா. கிரிஜா,பொருளாளர்திருமதிதமிழ்ச்செல்விசிவனேசன், உபதலைவர் சா.ஜெகராசா, உபசெயலர்திருமதி புனிதநிதி சிவகுமார் ஆகியோருடன் உறுப்பினர்களாக அ. சறோஜாதேவி, க.தமிழரசி, ச.துசாயினி, த.சங்கீதா, செ.வித்தகி, சி.யனுசிகன், த.டிலக்சன், கு.சிறிநிசா, வி.ரேலினா,பொ.ரஞ்சனா,ஸ்ரீ.ஸ்ரீலதா,வே.கிருத்திகா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். நிகழ்வில் சாவகச்சேரி பிரதேச சபையின் முதன்மை முகாமைத்துவ அலுவலகர் சி.பத்மநாதன் உரையாற்றும்போது ' எல்லாவற்றையும் விட மேலானது இந்த.வாசிப்புத் தான் வாசிப்பதனால் மனிதன் பூரணமடைகிறான். நாங்கள் பூரணமடைய வேண்டுமானால் நிறைய விடயங்கள் வாசிக்க வேண்டும் பொறுமையுடன் கண் நோகாமல் படிக்கும் போது உடல் ரீதியாகப் பொறுமை ஏற்படும். பெற்றோர்கள் பிள்ளைகளை வாசிப்புக்காக நூலகம் அனுப்ப வேண்டும் எனத் தெரிவித்தார். (ஐ-159)

### காந்திஜி சனசமூக நிலைய பொன்விழா

யாழ்ப்பாணம், ஒக்.11

காந்திஜி சனசமூக நிலைய பொன்விழா நிகழ்வுகள்இன்றுவெள்ளிக்கிழமையும்,நாளை சனிக்கிழமையும் பிற்பகல் 1.30 மணிக்கு உரும்பிராய் கிழக்கில் அமைந்துள்ள நிலையத்தில் நடைபெறும்.

முதலாம்நாள்நிகழ்வில் பொன்விழாவும், முதியோர் தின நிகழ்வும் இடம்பெறும். இரண்டாம் நாள் நிகழ்வில் முன்பள்ளிவிளையாட்டு நிகழ்வும், பரிசளிப்பு விழாவும் இடம்பெறும்.

நிகழ்வில் முதன்மை விருந்தினர்களாக வடக்கு மாகாண ஆளுநரின்செயலர்சி.சத்தியசீலன், வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலர் இ.இளங்கோவன் ஆகியோர் கலந்து கொள்வார். (க)

## யாழ்.போதனா மருத்துவமனையில் சி.ரிஸ்கேன்சேவை ஆரம்பமாகிறது

### உத்தியோகபூர்வ நிகழ்வு நாளை

யாழ்ப்பாணம், ஒக். 11

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் நாளை சனிக்கிழமை நவீனசி.ரிஸ்கேன்சேவைஆரம்பிக்கவுள்ளது என்று மருத்துவமனைப் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

பொ.ரஞ்சன், எஸ்.கதிர்காமநாதன், பி.நந்தபாலன் மற்றும் சமூக ஆர்வலர்களின் நிதிப் பங்களிப்பு [illegible] மாக வழங்கப்பட்ட நவீன சி.ரி ஸ்கான் சேவைகள் நாளை சனிக்கிழமை முதல் ஆரம்பிக்கப்படவுள்ளன.

ஸ்கேன் கையளிக்கும் நிகழ்வு காலை 8.30 மணிக்கு மருத்துவமனையின் மத்திய செயற்பாடுகளுக்கான கட்டடத் தொகுதியில் நடைபெறும். நிகழ்வில் கொழும்பு சுகாதார அமைச்சர் மருத்துவர் ராஜித சேனாரட்ன கலந்து கொள்வார் என்று தெரிவிக்கப்பட்டது. (த-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடத்தல், காணாமல் ஆக்கப்படுதல் வடக்கில் இன்னும் தொடர்கின்றன

## சுட்டிக்காட்டி வவுனியாவில் கவனவீர்ப்பு

வவுனியா, ஒக். 11

வடக்கில் கடத்தல் மற்றும் காணாமல் ஆக்கப்படுதல் தொடர்கின்றன என்றுகூறி காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் நேற்றுமுன்தினம் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.



காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் தமது போராட்டத் தளத்துக்கு முன்பாகக் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டபோது...

வவுனியா, ஏ9 வீதியில் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு முன்பாக 63 நாள்களாக சுழற்சி முறையில் போராடிவரும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் தமது போராட்டத் தளத்துக்கு முன்பாகக் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அங்கு அவர்கள் தெரிவித்ததாவது:
சில நாள்களுக்கு முன்னர் சாப்பாடு வாங்குவதற்காகச் சென்ற காராத்தே பயிற்றுவிப்பாளரான தனுசன் கடந்த 7ஆம் திகதி கடத்தப்பட்டுள்ளார். அவருடைய மனைவியும் குழந்தையும் அவரைத் தேடி அலைந்துகொண்டிருக்கிறார்கள்.

எல்லா அரசும் மாறி மாறி கடத்தலில் ஈடுபடுகின்றது. தமிழ் மக்களுக்குத் தீர்வைத் தர அவர்கள் தயாராகவில்லை.

காணாமல் ஆக்கப்பட்ட எமது உறவுகளுக்குப் பதில் இல்லை. இதனால் யாருக்கு வாக்களித்தும் எந்த பயனும் இல்லை. அமெரிக்காவும், ஐரோப்பிய ஒன்றியமும் தலையிட்டு நீதியைப் பெற்றுத்தரவேண்டும் எனக் கோரினார்கள்.

இந்தப்போராட்டத்தில் காணாமல் போயுள்ள தனுசனின் மனைவி, குழந்தை உட்பட காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் கலந்து கொண்டனர்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் கொடிகளையும் ஏந்தியிருந்தனர். (த)




## இராமநாதபுரம் வட்டாரத்தில் பாலங்கள் அமைப்பு ஆரம்பம்

கிளிநொச்சி, ஒக். 11

கிளிநொச்சி, இராமநாதபுரம் புதுக்காடு அழகாபுரி வித்தியாலயம் செல்லும் வீதிக்குப் பெட்டிப்பாலமும் மாவடி அம்மன் புதுக்காட்டுப் பகுதிக்கு ஒரு பெட்டிப்பாலமுமாக இரண்டு பாலங்கள் அமைக்க அடிக்கல் நடுகை கடந்த வாரம் நடைபெற்றது.

கரைச்சிப் பிரதேச சபையின் நிதி ஒதுக்கீட்டில் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் அதை ஆரம்பித்து வைத்தார். வெற்றிப்பாதை சனசமூகநிலையம், மாவடிஅம்மன் சனசமூக நிலையம் என்பன வேலைகளைப் பொறுப்பேற்றுச் செய்கின்றன. (த-222)





## வீதிப் போக்குவரத்து தொடர்பாக மாணவர்களுக்கு விழிப்புணர்வு

வவுனியா, ஒக். 11

வடக்கு மாகாண ஆளுநரின் அறிவுறுத்தலுக்கு அமைய, வீதி போக்குவரத்துத் தொடர்பாக மாணவர்களுக்கு விழிப்புணர்வூட்டும் செயற்றிட்டம் வவுனியா அல் இக்பால் மகாவித்தியாலயத்தில் நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்டது.

வடக்கு மாகாண வீதிப் பாதுகாப்பு வாரம் ஒக்ரோபர் 7ஆம் திகதி முதல் 13ஆம் திகதி வரை வடமாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவனின் பணிப்புரைக்கு அமைவாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

வடக்கு மாகாண வீதிப் பாதுகாப்பு சபையின் ஏற்பாட்டில், பாடசாலை மாணவர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் போக்குவரத்துப் பொலிஸாரால் பாடசாலைகளில்செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அதிகரித்து வரும் வீதிப் விபத்துக்களைக் கட்டுப்படுத்தும் நோக்கில் மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக வீதி பாதுகாப்பு வாரத்தின் மூலம் நடைமுறைப்படுத்தக்கூடிய விடயங்கள் தொடர்பில் மாணவர்களுக்கு விளக்கமளிக்கப்பட்டதுடன், வீதிகளில் பயணிக்கும் போது கடைப்பிடிக்க வேண்டிய விதிமுறைகள் தொடர்பிலும் தெளிவுபடுத்தப்பட்டது. பொலிஸ் அதிகாரி களால் மேற்கொள்ளப்பட்ட நிகழ்வில் பாடசாலை அதிபர் ஏ.கே.உபைத், பிரதி அதிபர் எம்.ராசிக் ஆசிரியர்கள், மாணவர்கள் கலந்து கொண்டனர். (க-ரி4)

## புதிய இயக்குநர் சபை தெரிவு

வவுனியா, ஒக். 11

வவுனியா மாவட்ட சிக்கனக் கடனுதவுக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் வருடாந்தப் பொதுச் சபைக்கூட்டம் சமாச அலுவலக மண்டபத்தில் கடந்த வாரம் இடம்பெற்றது.

இதில் சமாசத்தின் புதிய இயக்குநர்சபை தெரிவு செய்யப்பட்டுள்ளது. சமாசத்தின் புதிய தலைவராக அ.ச. பாரதி ஆனந்தம் மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ளார். உப தலைவராக வி. சிறீதரனும் தெரிவு செய்யப்பட்டுள்ளார். அ. ச. பாரதிஆனந்தம், த. செல்வராசா, சு. புவனேந்திரராசா, சி. கமலகுமாரி, ச. கேதீஸ்வரி, வி. சிறீதரன், பி. மேகலா, சி. சிவசேகரம், ஞா. வேந்துஜன் ஆகியோர் இயக்குநர் சபை உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (க-222)

## திணைக்கள அறிவுறுத்தல்படி பதாதைகள் அகற்றப்படுகின்றன

### மன்னார் உதவித் தேர்தல் ஆணையாளர் தெரிவிப்பு

மன்னார், ஒக். 11

தேர்தல்திணைக்களத்தின் பணிப்பின் பேரிலேயே வேட்பாளர்களின் பதாதைகள் அகற்றப்படுகின்றன என்று மன்னார் மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் ஜெனிஸ்ரன் தெரிவித்தார். மன்னார் மாவட்டத்தில் உள்ள அனைத்துப் பகுதிகளிலும் காணப்படும் சஜித் பிரேமதாசவின் பதாதைகள் நேற்று முன்தினம் இரவு தொடக்கம் அகற்றப்பட்டுக்கொண்டிருக்கின்றன.

சஜித் பிரேமதாச சிலநாள்களுக்குமுன்புவரைதேசிய வீடமைப்பு அமைச்சராகப் பதவி வகித்தார். அதன்போது கிராமங்கள்தோறும் அமைக்கப்பட்ட வீட்டுத் திட்டத் திறப்பு நிகழ்வுக்கு வைக்கப்பட்ட பதாதைகளே தற்போது அகற்றப்பட்டுவருகின்றன.

இது தொடர்பாகக் கேட்டபோது மன்னார் மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் ஜெனிஸ்ரன் மேலும் தெரிவித்ததாவது:
ஒருசாராரின் பதாதைகள் மட்டுமன்றி அரசதலைவர் தேர்தலில் போட்டியிடும் அனைத்துத் தரப்பினருக்கும் இது தொடர்பாக அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளதால் தாமாக முன்வந்து கட்சி சார்ந்தவர்களின் பதாதைகளை அகற்றி வருகிறார்கள். எதிர்வரும் வெள்ளிக்கிழமைக்குள் அனைத்துப் பதாதைகளும் அகற்றப்படும் என்று தெரிவித்தார். தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் முதன்மை வேட்பாளராக சஜித் பிரேமதாச போட்டியிடுகிறார். மன்னாரில் சஜித் பிரேமதாச அதிகளவானமாதிரிக்கிராமங்களை அமைத்துள்ளார்.

அதனால் அந்தப் பகுதிகளிலும் முதன்மை வீதிகளிலும் அதிகளவான பதாதைகள் காணப்படுகின்றன. (த-213)

## மழையுடன் இடி, மின்னல் வரலாம்; மக்கள் அவதானமாக இருக்கவும்

வவுனியா, ஒக். 11

வவுனியாவில் கடந்த ஆறு நாள்களாக 128.6மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது. வவுனியாவில் மாலை வேளைகளில் மழை பெய்யக்கூடும், இடி, மின்னல் தாக்கம் அதிகரிக்க வாய்ப்புக்கள் காணப்படுகின்றன. எனவே பொதுமக்கள் அவதானமாக இருக்கவேண்டும் என்று வவுனியா வளிமண்டலவியல் அவதானிப்பாளர் தா.சதானந்தன் தெரிவித்துள்ளார்.

கடந்த நான்காம் திகதி காலை 8.30மணியிலிருந்து ஐந்தாம் திகதிகாலை 8.30மணிவரையும் 7.5மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது.

ஆறாம் திகதி காலை 8.30மணியிலிருந்து ஏழாம் திகதி காலை 8.30மணிவரையும் 45.4மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது. ஏழாம் திகதி காலை 8.30மணியிலிருந்து எட்டாம் திகதிகாலை 8.30மணிவரையும் 3.5 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது.

எட்டாம் திகதி காலை 8.30மணியிலிருந்து ஒன்பதாம் திகதி காலை 8.30மணிவரையும் 26.6மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது.

ஒன்பதாம் திகதி காலை 8.30 மணியிலிருந்து பத்தாம் திகதி காலை 8.30மணிவரையும் 45.6மில்லிமீற்றர் மழை பதிவாகியுள்ளது.

இதனடிப்படையில் கடந்த ஆறு நாள்களாக 128.6மில்லிமீற்றர் மழை வீழ்ச்சி வவுனியாவில் பதிவாகியுள்ளது என்றும் வவுனியா வளிமண்டலவியல் அவதானிப்பாளர் மேலும் தெரிவித்துள்ளார். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழைய இரும்புக் கடை வளாகத்தில் ஆயுதம் தேடியவர்களுக்கு ஏமாற்றம்

முல்லைத்தீவு,ஒக்.11

கோம்பாவில், புதுக்குடியிருப்பு பரந்தன் வீதியில் உள்ள பழைய இரும்புக்கடை அமைந்துள்ள வளாகத்தில் விடுதலைப்புலிகளால் புதைக்கப்பட்ட தாகத் தெரிவிக்கப்பட்ட ஆயுதங்களைத் தேடியவர்களுக்கு இறுதியில் ஏமாற்றம் கிடைத்தது.



பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமைவாக, முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றத்தின் உத்தரவுக்கு அமைவாக நேற்று முன்தினம் தேடுதல் மேற்கொள்ளப்பட்டது.

குறித்த பகுதியில் இதற்கு முன்னரும் நீதிமன்ற உத்தரவுக்கு அமைவாகத் தேடுதல் இடம்பெற்ற போதும், எதுவித பொருள்களும் மீட்கப்படவில்லை. எனினும் மீண்டும் அதே இடத்தில் நேற்று முன்தினம் காலை தொடக்கம் மாலை வரை தேடுதல் இடம்பெற்றது. கிராம அலுவலகர், நீதிமன்ற அலுவலர்கள், தொல்பொருள்திணைக்களத்தினர், பொலிஸார், படையினர் முன்னிலையில் இரும்புக் கடை வளாகத்தில் இரண்டு இடங்கள் அடையாளப் படுத்தப்பட்டு, தோண்டும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்ட போதும் அங்கு எது வித பொருள்களும் மீட்கப்பட வில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (சு-ரி3)




## வவுனியாவில் சிறப்பாக இடம்பெற்ற உளநல தின நிகழ்வுகள்

வவுனியா,ஒக்.11

பன்னாட்டு உளநல தினத்தை முன்னிட்டு வவுனியா பொது மருத்துவமனை உளநலப் பிரிவும், மாவட்டச் செயலகமும் இணைந்து உளநல தின நிகழ்வுகளை நடத்தின.

இந்த நிகழ்வுகள் வவுனியா நகரசபை கலாசார மண்டபத்தில் நேற்றுக் காலை மேலதிக மாவட்டச் செயலர் தி.திரேஸ்குமார் தலைமையில் நடைபெற்றன.

நிகழ்வில் பாடசாலை மாணவர்கள் மற்றும் அரச திணைக்கள அதிகாரிகள், அலுவலர்கள் அனைவருக்கும் உளநலத்தைப் பேணும் முகமாக பேராசிரியர் மனநலக்கலை நிபுணர் க.கமேலேந்திரன் சிறப்பு பயிற்சிகளை வழங்கினார்.

அத்துடன் தவறான உயிர் மாய்ப்புக்களைத் தடுக்கும் விழிப்புணர்வு கலந்துரையாடல், மதுபாவனை தொடர்பான விழிப்புணர்வு கருத்தாடல், என பல விழிப்புணர்வு தெழிவுபடுத்தல் நிகழ்வுகளும் இடம்பெற்றன. மனதோடு பேசுவோம் என்ற நூலும் வெளியிடப்பட்டன.

நிகழ்வில் வவுனியா மாவட்டச் செயலர் ஐ.எம் கனீபா, மேலதிக மாவட்டச் செயலர் தி.திரேஸ்குமார்இ யூ.எஸ். அட் நிறுவனத்தின் இலங்கைக்கான முக்கியஸ்தர் கார்த்திகேயன், வவுனியா மாவட்ட மருத்துவ நிபுணர்கள், வவுனியா உள மருத்துவர் பிராத், பிராந்திய சுகாதார மருத்துவ பணிப்பாளர் ப.பசுபதிராஜா, உள மூத்த மருத்துவ அதிகாரி எஸ் சுதாகரன், மாவட்டச் செயலக அலுவலர்கள், பாடசாலை மாணவர்கள், தாதியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஐ-222)

## முல்லைத்தீவு பேராறு பகுதியில் 153 ஏக்கரை கையகப்படுத்தும் முயற்சி தடுத்து நிறுத்தப்பட்டது

முல்லைத்தீவு, ஒக். 11



முல்லைத்தீவு குமுழமுனை கிழக்கின் பேராறு, படலைக்கல்லு பகுதியில் தமிழ் மக்கள் 65பேருக்குரிய 153ஏக்கர் நிலத்தை வனவளத் திணைக்களத்தினர் ஆக்கிரமித்து எல்லைக் கற்களை நடுவதற்கு எடுத்த முயற்சி நேற்றுமுன்தினம் தடுத்து நிறுத்தப்பட்டது.

வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் து.ரவிகரன் மாவட்ட வனவளத் திணைக்கள அதிகாரியுடன் பேசியுள்ளார்.

அதன்படி, எல்லைக் கற்கள் நடும் செயற்பாட்டை தற்போது நிறுத்துவதாகவும், எதிர்வரும் காணிப் பயன்பாட்டுக்குழுக்கூட்டத்தில் இது தொடர்பில் பேசி, பிரதேச செயலர் மற்றும் மாவட்டச் செயலர் ஆகியோர் இந்தக்காணிகள் மக்களுடையவை என்று அங்கீகரித்தால் தாம் அந்தக் காணிகளை விடுவிப்போம் எனவும் திணைக்கள அதிகாரி தெரிவித்தார்.

இது தொடர்பில், உரியவர்ளுக்கு ரவிகரன் மற்றும் காணி உரிமையாளர்கள் இணைந்து மனுக் கையளித்தனர்.

மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

153 ஏக்கர் பல தலைமுறைகளாகபயிற்செய்கை இடம்பெற்று வந்தது.

1983ஆம் ஆண்டு இராணுவ நடவடிக்கையின் போது ஒலிபெருக்கி மூலம் அறிவித்து எமது நிலங்களை விட்டு வெளியேற்றப்பட்டோம்.

ஒருசிலர் எஞ்சியிருந்த நிலையில் உலங்குவானூர்தி மூலம் அங்கு வந்த படையினர் அவர்களைக் கைதுசெய்து வவுனியா மற்றும் அநுராதபுரம் முகாம்களுக்கு அழைத்துச் சென்றிருந்தனர்.

மீள்குடி யேற்றம் நடைபெற்றதன் பின்னர் அங்கு நிலை கொண்டிருந்த இராணுவத்தினர் காணிகள் சுத்தம் செய்யவோ, விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடவோ அனுமதிக்கவில்லை.

ராணுவம் அந்த இடத்திலிருந்து வெளியேறிய நிலையில் வனவளத் திணைக்களத்தினர் அந்தக்காணிகளை துப்பரவு செய்வதை தடைசெய்திருந்தனர்.

பிணக்கை ஆராய்ந்து பிரதேச செயலக காணி அலுவலர்கள் பிரதேச செயலரின் பிரசன்னத்தில் எமது காணிக்குரிய எல்லைகளை வரையறைசெய்து எமது காணிகளை விடுவித்த பின்பு தங்களுக்குச் சொந்தமான வனத்துக்கு எல்லைக் கற்களை நடுமாறு வேண்டியிருந்தோம்.

இவ்வாறிருக்க நேற்று முன்தினம் மீண்டும் கல் நடும் நடவடிக்கையில் அவர்கள் ஈடுபட்டனர். அது தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது.

ஆகவே எல்லையிடும் நடவடிக்கையை நிறுத்தி பிரதேசசெயலர், வனவளத்திணைக்களம், கமநலசேவைத்திணைக்களம், பங்காளர்கள் இணைந்து உரிய பொது மக்களுக்குச் சொந்தமான காணியை விடுவிப்புச் செய்தபின் வனவளத் திணைக்களத்தினுடைய காணியை எல்லையிடப் பணிக்குமாறு மனுவில் கோரியுள்ளனர்.

குறித்த மனு முல்லைத்தீவு மாவட்டச் செயலர் ரூபவதி கேதீஸ்வரனுக்கு வழங்கப்பட்டது. பிரதிகள், வடக்கு மாகாண ஆளுநர் சுரேன் ராகவன், கொழும்பு தேர்தல் ஆணைக்குழுத் தலைவர் ஆகியோருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்

### பாடசாலையில் உள நல நிகழ்வுகள்

மன்னார்,ஒக்.11

பன்னாட்டு உளநல தினத்தை முன்னிட்டு மன்னார் பரிகாரி கண்டல் பாடசாலையில் நேற்றுக் காலை ஒன்றுகூடலின்போது மாணவர்களால் உள நலம் தொடர்பாக நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. பாடசாலை அதிபர் இருதைய ராஜா குரூஸ் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் உள நல ஆசிரியரால் உள நலம் தொடர்பாக அறிவுறுத்தல் வழங்கப்பட்டது. அத்துடன் உள நல தின போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டன. (ஐ-222)





கிளிநொச்சி இந்துக் கல்லூரியின் ஆசிரியர் தின நிகழ்வு அண்மையில் பாடசாலை முதன்மை மண்டபத்தில் முற்பகல் 11 மணியளவில் நடைபெற்றது. பாடசாலை அபிவிருத்திக்குழுவின் அனுசரணையில் அதன் செயலர் எஸ். [illegible] தலைமையில் நடைபெற்றது. அதிபர், ஆசிரியர்களால் பாடசாலை வளாகத்தில் 80 பயன்தரு மரங்கள் நடுகை செய்யப்பட்டன. (ஐ-159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிகழ்வுகள்

## நவராத்திரி விழா



யாழ்ப்பாணம்,ஒக்.11
யாழ்ப்பாணம் கட்டுவன் மேற்கு தங்கோட்ட விநாயகர் ஆலயத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நவராத்திரி விழா சிறப்பாக நடைபெற்றது.
நிகழ்வில்யாழ்ப்பாணமாவட்டநாடாளுமன்ற உறுப்பினர்ஈ.சரவணபவன்கலந்துகொண்டு வள்ளுவர் முன்பள்ளி மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை வழங்கி வைத்தார்.
இத்துடன் புலமைப் பரிசில் பரீட்சையில் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களும் இதன்போது மதிப்பளிக்கப்பட்டனர். (ஐ)

★★★★

## வாணி விழா

முல்லைத்தீவு,ஒக்.11
நெடுங்கேணி ஒலுமடு தமிழ் மகா வித்தியாலயத்தின்வாணிவிழாகடந்தசெவ்வாக்கிழமை பாடசாலை மண்டபத்தில் அதிபர் கு. விமலேந்திரன்தலைமையில்வெகுசிறப்பாக இடம்பெற்றது.
முன்பள்ளிக் கல்வியைத் தொடரவிருக்கும் சிறார்களுக்குபாடசாலைஅதிபரால்ஏடுதொடக்கப்பட்டது. நிகழ்வில் ஆசிரியர்கள்,மாணவர்கள்,பெற்றோர்கள்எனபலரும்கலந்துகொண்





## வாணி விழாவும் வித்தியாரம்பமும்



கொடிகாமம்,ஒக்.11
யாழ்ப்பாணம் கரம்பைக்குறிச்சி அ.த.க பாடசாலையின் வாணிவிழாவும்,வித்தியாரம்ப நிகழ்வும் கடந்த செவ்வாய்க்கிழமை வித்தி யாலய மண்டபத்தில் காலை9.30மணியளவில்அதிபர்க. இளங்கோவன் தலைமையில்நடைபெற்றன. முன்பள்ளிக்கல்வியைதொடரவுள்ள பிள்ளைகளுக்கு ஏடு தொடக்கல் என்னும் வித்தியாரம்ப நிகழ்வு இடம்பெற்றது. நிகழ்வில் கோலம் போடுதல், மாலை கட்டுதல், தோரணம் பின்னுதல், நவராத்திரி தொடர்பானஎழுத்து பரீட்சை ஆகிய போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசுகளும் வழங்கப்பட்டன. யாழ்ப்பாணம் தொல்பொருள்திணைக்கள அலுவலகர்சிவநெறிச்செல்வர் க.கயிலைவாசன் சக்தி வழிபாட்டின் முக்கியத்துவம் தொடர்பாக சொற்பொழிவாற்றினார். (ஐ-159)

★★★★




தெல்லிப்பழை பிரதேச செயலகத்தின் வாணி விழா நேற்றுமுன்தினம் பிரதேச செயலர். ச.சிவசிறி தலைமையில்சிறப்பாகநடைபெற்றது. நவராத்திரியை முன்னிட்டுநடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டியவர்களும் இதன்போது மதிப்பளிக்கப்பட்டனர். (ஐ-9)

★★★★

## கோலப் போட்டிகள்



யாழ்ப்பாணம் பிரதேச செயலக அலுவலர்களுக் இடையே கோலப்போட்டி ஒன்று நேற்று முன்தினம் பிரதேச செயலக மாநாட்டுமண்டபத்தில்முற்பகல் 9 மணிக்கு நடைபெற்றது.
ஊழியர் நலன்புரிச் சங்கத்தால் பிரதேச செயலக கிளைகள் ரீதியாக 9 குழுக்களாக அலுவலர்கள் பிரிக்கப்பட்டு நவராத்திரி என்ற கருப்பொருளில் கோலப் போட்டி இடம் பெற்றது. போட்டியின் நடுவர்களாக புனித யோன் பொஸ்கோ பாடசாலை ஆசிரியர்கள் கலந்து கொண்டு முதல் மூன்று இடங்களுக்குரிய போட்டியாளர்களைத் தெரிவு செய்தனர். (ஐ-222)

★★★★



யாழ்ப்பாணம் மீசாலை கமலாம்பிகை வித்தியாலயத்தில் நவராத்திரி விழாவை முன்னிட்டு மாணவர்களுக்கிடையிலானகோலம்போடுதல் போட்டி அண்மையில் நடைபெற்றது. போட்டியில்தெரிவுசெய்யப்பட்டவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டனஎனஅதிபர் திருமதி வ.கணேசலிங்கம் தெரிவித்தார். (ஐ-9)



## ஆசிரியர் தினமும் வாணி விழாவும்

அளவெட்டி.ஒக்.11
அளவெட்டி தெற்கு முற்போக்கு முன் பள்ளியின்ஆசிரியர்தினமும்,வாணிவிழாவும்கடந்த செவ்வாய்க்கிழமை முன்பள்ளி மண்டபத்தில் முற்பகல் 10 மணிக்கு நடைபெற்றன. மாணவர்களின்பெற்றோரும்முன்பள்ளிமுகாமைத்துவக்குழுவும் இணைந்து இந்த நிகழ்வுகளை நடத்தினர். ஆசிரியர்கள் மதிப்பளிக்கப்பட்டனர். ஆசிரியர்களுக்கிடையிலான விளையாட்டுக்களும் இடம்பெற்றன. (ஐ-36)




★★★★




பன்னாட்டுசிறுவர்தினத்தை முன்னிட்டுசிறுவர்சந்தை நிகழ்வுயாழ்ப்பாணம்மீசாலை கமலாம்பிகை வித்தியாலயத்தில் அதிபர் திருமதி வ.கணேசலிங்கம் தலைமையில அண்மையில் நடைபெற்றது. (ஐ-9)

★★★★




யாழ்ப்பாணம்மட்டுவில்கமலாசனிவித்தியாலயத்தின் சிறுவர் தின நிகழ்வு அண்மையில் பாடசாலை மண்டபத்தில் அதிபர் ஜ.தேவராஜன் தலைமையில் நடைபெற்றது.நிகழ்வில்மாணவர்தலைவர்களுக்கான சின்னம்சூட்டும்நிகழ்வும் இடம்பெற்றது. விருந்தினராக கலந்து கொண்ட ஓய்வு பெற்றஆசிரியர் திருமதி வி. விக்னேஸ்வரன், தென்மராட்சி கல்வி வலய [illegible] சேவைக்காலஆசிரியஆலோசகர்வே.கமலேஸ்வரன் மற்றும் பாடசாலை ஆசிரியர்கள் மாணவர்கள் கலந்துகொண்டனர். (ஐ-159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த் தரப்பினரின் பயனுள்ள கோரிக்கைகளை முதன்மைக் கட்சிகள் ஏற்றால் விலகிவிடுவேன்

## அரசதலைவர் வேட்பாளர் சிவாஜிலிங்கம் 'டீல்'



யாழ்ப்பாணம், ஒக். 11

தமிழ்த் தரப்புகள், பொது அமைப்புகள் தமிழ் மக்களுக்கு ஏதுவான தீர்வைத் தரக்கூடியதாக கோரிக்கை முன்வைத்து அதை முதன்மைக் கட்சிகள் ஏற்றுக்கொள்வார்களேயானால் அரசதலைவர் தேர்தலில் போட்டியிடுவதிலிருந்து நான் விலகிக் கொள்கிறேன். என்று வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினரும் அரசதலைவர் வேட்பாளருமான எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் நல்லூரடியிலுள்ள யாழ்பாடி விடுதியில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இதுவரை தேர்தலில் போட்டியிடுபவர்கள் தமிழ் மக்களுக்கான தீர்வைத்தருவோம் தருவோம் என்று சொல்லி மக்களை ஏமாற்றி விட்டார்கள். நாய்களுக்கு பிஸ்கட் போடுவது போன்று சில விடயங்களைமக்களுக்குக்கொடுத்து அவர்களை ஏமாற்றி வருகிறார்கள். பணத்தை ஏற்கனவே வாங்கியவர்கள் தான் நான் பணத்தை வாங்கி விட்டேன், அதனால் தேர்தலில் நிற்கின்றேன் என்று சொல்கிறார்கள். சிறையிலுள்ள அரசியல் கைதிகள் விடுதலை, காணி விடுவிப்பு, காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம், பயங்கரவாதத் தடைச் சட்டம் போன்ற விடயங்களுக்கு இன்னமும் தீர்வு வழங்கப்படவில்லை. ஆனால் கோத்தபாய சொல்கிறார் சிறையிலுள்ள பாதுகாப்புப் படையினரை விடுவிப்பேன் என்று. அவரால் இது முடியும் என்றால் தற்போது ஆட்சியில் உள்ளவர்களுக்கு தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாதுள்ளமை ஏன்? ஆகவே எமது மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும்.

பொது வேட்பாளரை நிறுத்த வேண்டும், தேர்தலைப் புறக்கிக்க வேண்டும் என்றெல்லாம் பல கதைகள் ஓடிக்கொண்டு இருக்கின்றன. ஆனால் எந்த முடிவும் இல்லை. தமிழ்த் தரப்பு சார்பில் எந்தக் கோரிக்கையை முன்வைப்பது, என்ன எதிர்பார்ப்பு போன்ற விடயங்களைத் திரட்டி ஒரு முடிவு எடுப்பதற்கு தமிழ்த் தரப்புகளை அழைத்து ஒன்றாக முடிவு எடுப்பதற்கு பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் முயற்சி எடுத்து வருகிறது. அது வரவேற்கத்தக்க ஒரு விடயம். தமிழ்த் தரப்புகள், பொது அமைப்புகள், தமிழ் மக்களுக்கு ஏதுவான தீர்வைத் தரக்கூடியதாகக் கோரிக்கை ஒன்றை முன் வைத்து அதை முதன்மைக் கட்சிகள் ஏற்றுகொள்வார்களேயேயானால் நான் தேர்தலில் போட்டியிடுவதிலிருந்து விலகிக் கொள்கிறேன். அதை நான் பகிரங்கமாக அறிவிப்பேன்.

அரசதலைவர் தேர்தலில் போட்டியிடுவதற்கும் கட்டுப்பணம் செலுத்தியதிலிருந்து தமிழ், சிங்கள மொழிகளில் இருந்தும் பல மிரட்டல்கள் தொலைபேசி வாயிலாக வருகின்றன. அதற்கு எல்லாம் பயந்து நான் தேர்தலிலிருந்து ஒதுங்கிப் போகமாட்டேன். நான் யாரிடமும் பணம் வாங்கவில்லை. பசில், கோத்தபாய போன்றவர்களைச் சந்திக்கவுமில்லை. திருமதி அனந்தி சசிதரனே கட்டுப் பணம் செலுத்தினார். தமிழ் மக்களுக்குத்தீர்வைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கில்தான் எனது பயணம் அமையும். நான் அரசியலில் இருக்கும்போது ஊழல் செய்யவில்லை. அவ்வாறு செய்திருந்தால் அதனை நிரூபியுங்கள், நான் அரசியலிலிருந்து ஒதுங்குகின்றேன். என்றார்.

**கே:** நீங்கள் பணம் வாங்கி விட்டீர்கள், வாக்குகளைச் சிதறடிக்கவே தேர்தலில் போட்டியிடுகிறீர்கள் என்று கருத்துச் சொல்லப்படுகிறது?

**ப:** இவ்வாறு சொல்பவர்கள்தான் முன்னரே பணத்தைப் பெற்று இவ்வாறு சொல்கிறார்கள். நான் பணம் பெற்றிருந்தால் நிரூபிக்கட்டும். நான் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு வேண்டும் என்றே தேர்தலில் போட்டியிடுகிறேன். சி.வி.கே. சிவஞானம் ஒரு கருத்துக் கூறியுள்ளார் என்று ஊடகங்கள் வாயி லாக அறிந்தேன். அவர் நேரடி விவாதத்துக்கு வரட்டும், நான் பகிரங்கமாகச் சவால் விடுகிறேன். நான் கதைக்க ஆரம்பித்தால் அவர் தற்கொலை செய்துகொள்வார்.

**கே:** உங்களைக் கட்சியிலிருந்து விலக்குதல் மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப் போவதாகச் சொல்லப்படுகின்றது?

**ப:** நான் சுயேச்சையாகத் தான் இந்தத் தேர்தலில் போட்டியிட முடிவு எடுத்தேன். கட்சியில் நான் தவிசாளராக உள்ளேன். அந்தப் பதவியிலிருந்து நான் செய்யும் வேலைகள் மற்றும் பதவியிலிருந்து விலகுவ தாக தபால் மூலம் கட்சியின் செய லருக்கு நான் ஏற்கனவே அறிவித்துவிட்டேன். கட்சியின் அடிப்படை உறுப்பினராக உள்ளேன். அதிலிருந்து நீக்குவதற்கு சில விதி முறைகள் உள்ளன. ஆகவே நான் உறுப்பினராகக் கட்சியில் உள்ளேன்.

**கே:** அரச தலைவர் தேர்தலில் கூட்டமைப்பின் ஆதரவு தொடர்பாக?

பதில்: இது வரை சம்பந்தன் ஐயா ஒன்றும் சொல்ல வில்லை. தேர்தலுக்கு முதல் 15 நாள்களுக்கு முன்பாக கட்சிக் கூட்டத்தை கூட்டி சஜித்துக்கு ஆதரவு என்று சொல்வார்கள். ஐக்கிய தேசியக் கட்சியின் தமிழ்ப் பிரிவுதான் கூட்டமைப்பு என்று சொல்லும் நிலையில் உள்ளார்கள். போட் தான் (பெயர்ப்பலகை) வைக்கவில்லை. - என்றார்.

(த-7)

# அனுபவித்த பிசாசு; அனுபவிக்காத பேய் கோத்தா, சஜித் போட்டி இப்படியுள்ளது

## வர்ணிக்கின்றார் சிவாஜிக்கு ஆதரவான அனந்தி

யாழ்ப்பாணம், ஒக். 11

தமிழர்களைப் பொறுத்த வரையில் அனுபவித்த பிசாசுக்கும், அனுபவிக்காத பேய்க்கும்" இடையே நடைபெறும் போட்டியாகவே இந்தத் தேர்தலைக் கருதுகிறார்கள் என்று வடக்கு மாகாண சபையின் முன்னாள் அமைச்சர் திருமதி அனந்தி சசிதரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் நல்லூரடியிலுள்ள யாழ்பாடி விடுதியில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழர்களைப் பொறுத்தவரை அனுபவித்த பிசாசுக்கும், அனுபவிக்காத பேய்க்கும் இடையே நடைபெறும் போட்டியாகவே கோத்தபாயவுக்கும் சஜித்துக்கும் இடையே நடைபெற இருக்கும் போட்டி இருக்கப்போகிறது. சிங்களப் பேரினவாத வாக்குகளை உடைக்கும் மூன்றாவது வேட்பாளராக ஜே.வி.பியின் அநுரகுமார திசாநாயக்க விளங்கப்போகிறார்.

கோத்தபாய ராஜபக்ச, சஜித் பிரேமதாச மற்றும் அநுர குமார திசாநாயக்க போன்றவர்கள் சிங்களப் பேரினவாதத்தை ஒருபோதும் கைவிடப்போவதில்லை.

இவர்களுடன் தமிழர் தரப்பு பேரம் பேசவேண்டும் என்று சிலர் வாதிடுகிறார்கள்.

பேரம் பேசும்போது அவர்கள் தரும் வாக்குறுதிகளை நிறைவேற்றுவார்கள் என்பதற்கு எந்தவித பன்னாட்டு உத்தரவாதமுமின்றிப் பேரம் பேசுவதில் ஒரு பயனுமில்லை.

சிங்களப் பேரினவாதத் தலைவர்களுடன் பேரம் பேசுதல் என்பது தற்போதைய நிலையில் செல்லாக்காசு போன்றது. எழுதிய ஒப்பந்தங்களையே கிழித்துப் போடும் சிங்களப் பேரினவாதத் தலைவர்களுடன் பேரம் பேசுவதில் பயனேதுமில்லை. மாறாக, இவர்களை இயக்கும் பன்னாட்டுச் சக்திகளுடன் தான் நாங்கள் பேரம் பேசவேண்டும்.

தென்னிலங்கையைப் பொறுத்தவரை இனவாத அரசியலையார் அதிகம்பேசுகிறார்களோ அவர்களைத் தெரிந்தெடுக்கவேண்டும் என்ற [illegible] சிங்கள மக்கள் மத்தியில் நெடுங் காலமாகவே இருந்து வருகிறது. அது மட்டுமன்றி ஏப்ரல் மாதம் தீவை உலுக்கிய ஈஸ்டர் குண்டுத் தாக்குதல்களுக்குப் பிறகு, தேசிய பாதுகாப்பு மற்றும் பயங்கரவாதத் தடைச் சட்டம் என்ற பழைய விடயங்களுக்கெல்லாம் புதிய முலாம் பூசப்பட்டிருக்கிறது.

சிவாஜிலிங்கத்துக்கு முதலாவது வாக்கையும், ஈழத் தமிழர்களின் அரசியல் உரிமையை அங்கீகரிப்பதாகச் சொல்லும் பேரினவாத மனநிலை இல்லாத ஒரு வேட்பாளருக்கு விருப்பு வாக்கையும் செலுத்தும்போது தேர்தல் புறக்கணிப்புக்கு ஒப்பான கருத்துநிலையையே ஒருதமிழ்வாக்காளர்வெளிப்படுத்துவார். அனைத்து ஈழத்தமிழர்களும் நடைமுறையில் ஒரு கருத்து நிலைக்குப் பலம் சேர்க்க முன்வரவேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கிறோம். உண்மையான பேரம் பேசல் யாரோடு என்பதில் சிவாஜிலிங்கம் தெளிவாக இருக்கும் வரை அவருக்குப் பக்கபலமாக நான் இயங்குவேன். ஒற்றுமை, ஒன்றிணைந்த கொள்கை என்பன மக்கள் முடிவெடுப்பதற்கான ஒரு வாய்ப்பாகவும் அமையும்.

- என்றார்.

(த-7)

## சங்கிலி கொள்ளை; 4 பேர் கைது

கொழும்பு, ஒக்.11

வாத்துவை பகுதியில் தங்கச் சங்கிலியைக் கொள்ளையிட்டமை தொடர்பில் நான்கு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்தது.

வாத்துவை பகுதியில் நேற்றுமுன்தினம் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்தது.

பமுணுகம, அளுபோமுள்ள மற்றும் பண்டாரகம ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 34 - 39 வயதுக்கு இடைப்பட்ட நால்வரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களிடம் இருந்து 3 மோட்டார் சைக்கிள்களும், கொள்ளையிடப்பட்ட தங்கச் சங்கிலிகளும் மீட்கப்பட்டுள்ளன. இந்தச் சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை வாத்துவை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

## மின்னல் தாக்கி ஒருவர் உயிரிழப்பு

காவத்தை - ஓபநாயக்க பகுதியில் மின்னல் தாக்கி நபரொருவர் உயிரிழந்துள்ளார். ஓபநாயக்க பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பாடியாவத்த அக்கரெல்ல பகுதியில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை நபரொருவர் மின்னல் தாக்குதலுக்குள்ளான நிலையில் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற தகவலுக்கமைய பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

வயல்வெளியில் இருந்துள்ள நபர் மின்னல் தாக்குதலுக்கு உள்ளாகி ஆபத்தான நிலையில் காவத்தை மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

ஓபநாயக்க அக்கரெல்ல பகுதியைச் சேர்ந்த 64 வயதுடைய துணு குமாரகே எதிகே ஹெரில் குணரத்ன என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்தர்ப்பவாதத்தை தவிர்க்க முடியாது

## ராஜித தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.11

ஜனநாயகத்தையும், சுதந்திரத்தையும் நோக்கிய போராட்டங்களில் சந்தர்ப்பவாதம் என்பது தவிர்க்க முடியாத ஒன்றாகும். பெரும்பாலான போராட்டங்களின் இறுதிக் கட்டத்தில் சந்தர்ப்பவாதத்தை முன்னிறுத்திக் காட்டிக் கொடுப்புக்கள் இடம்பெறுகின்றன.



இவ்வாறு அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

சிவில் சமூக அமைப்புக்கள் மற்றும் தொழிற்சங்கங்களின் ஒன்றியம் அரச தலைவர் வேட்பாளராகக் களமிறங்கியிருக்கும் சஜித் பிரேமதாஸவிற்கு தமது ஆதரவை வழங்குவதற்கு முன்வதுள்ளன. அவர் தலைமையிலான அரசால் நிறைவேற்றப்பட வேண்டிய யோசனைகளைக் கையளிக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் மாலை புதிய நகர மண்டபத்தில் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

2015 ஆம் ஆண்டு அரச தலைவர் தேர்தலில் பொது வேட்பாளராக நிறுத்தப்பட்ட மைத்திரிபால சிறிசேனவையும், எம்மையும் முன்நோக்கி வெற்றிப் பாதையில் அழைத்துச் சென்றவர்கள் சிவில் சமூகத்தினரும், தொழிற்சங்கத்தினருமே. அந்த சிவில் சமூக அமைப்புக்களை வழிநடத்திய வணக்கத்துக்குரிய மாதுலுவாவே சோபித தேரரும் இன்று இல்லை. மைத்திரிபால சிறிசேனவும் இன்றில்லை.

சோபித தேரர் அவராக விரும்பி எம்மிடமிருந்து விலகிப்போகவில்லை. ஆனால் மைத்திரிபால சிறிசேன அவராகவே விலகிச் சென்றுவிட்டார்- என்றார். (எ)

# சு.க. பெரமுன இணைவு மக்களுடைய விருப்பமே

## பசில் ராஜபக்ச கூறுகின்றார்

கொழும்பு, ஒக்.11

சிறிலங்கா சுதந்திரக் கட்சியும், சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியும் ஒன்றிணைந்து பயணிக்க வேண்டும் என்று மக்கள் வலியுறுத்தியமையாலேயே தற்போது இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளோம் என்று சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் ஸ்தாபகரான பசில் ராஜபக்ச தெரிவித்தார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும், சிறிலங்கா பொதுமக்கள் முன்னணிக்கும் இடையே நேற்றுப் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டது. அதன்பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது

சிறிலங்கா சுதந்திரக் கட்சியும், சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியும் தேர்தலில் ஒன்றாகக் களமிறங்குவதற்கு காரணமாக இருந்த எமது கட்சியின் தலைவர் மகிந்தவுக்கும், அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கும்முதலில்நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

நேற்றுக் காலை என்னிடம் அரசியல், கல்வி ஆகியவற்றில் புலமைப்பட்ட ஒருவர் கேட்டார், இதுவரைக்காலமும் எந்ததொரு கட்சியுடன் இணைந்து போட்டியிட மாட்டேன் என்று கூறிய நீங்கள் இன்று ஏன் ஒன்றிணைகின்றீர்கள் என்றார். அதற்கு நான் கூறினேன். இவைகளை எல்லாவற்றையும் விட நாட்டு மக்களே மிகவும் அத்தியாவசியமானவர்கள். அவர்களுக்குச் செய்ய வேண்டிய சேவையைக் காட்டிலும் வேறு ஒன்றும் இல்லை என்றேன்

இருகட்சிகளிலும்நாட்டின் மீதும் மக்களின் மீதும் ஆதரவு நிறைந்தவர்கள் இருக்கின்றார்கள். மேலும் பொதுஜன பெரமுன போன்ற கட்சியை இலங்கையில் மட்டுமல்லவேறுஎந்தநாட்டிலும் இத்தகைய சிறந்ததொரு கட்சியைக் காணமுடியாது. பெரும்பாலான மக்கள், இருகட்சிகளும் ஒன்றிணைந்து பயணிக்க வேண்டும்எனக்கூறினர். அதனடிப்படையில்தான் தற்போது நாங்கள் ஒன்றிணைந்துள்ளோம்.

நாட்டின் அரச தலைவராகக் கோத்தபாயவை அமர்த்துவதற்கு அதற்கான செயற்பாடுகளை இருகட்சிஉறுப்பினர்களும் ஒன்றிணைந்து முன்னெடுக்க வேண்டும் - என்றார். (எ)

# சிங்கப்பூர் பறந்தார் கோத்தா

கொழும்பு, ஒக்.11 மருத்துவ சிகிச்சைக்காகச் சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் அரச தலைவர் வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ச நேற்றுச் சிங்கப்பூர் பயணமானார். சிங்கப்பூர் விமான சேவைக்குச் சொந்தமான எஸ்கியூ 468 ரக விமானத்தில் அவர் சிங்கப்பூர் பயணமானார் என்று தெரிவிக்கப்பட்டது.

எதிர்வரும் 12ஆம் திகதிவரை சிங்கப்பூர் செல்லலாம் என்று கோத்தபாய ராஜபக்சவுக்குச் சிறப்பு மேல் நீதிமன்று கடந்த 3ஆம் திகதி அனுமதி வழங்கியது. நீதிமன்றின் பொறுப்பில் இருந்த கோத்தபாய ராஜபக்சவின் கடவுச்சீட்டைத் தற்காலி கமாக ஒப்படைக்குமாறும் உத்தரவிடப்பட்டது. கோத்தபாய ராஜபக்ச நாடு திரும்பியதும் கடவுச் சீட்டை மீளவும் நீதிமன்றத்திடம் ஒப்படைக்க வேண்டும். (எ)

# தேர்தல் சட்டமீறல்கள்; 156 முறைப்பாடுகள்

அரச தலைவர் தேர்தலுக்கான பரப்புரைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் கடந்த 7ஆம் திகதி வரை 156 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்று தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

153 தேர்தல் சட்ட மீறல்களும், 3 வன்முறைச் சம்பவங்களும் பதிவாகியுள்ளன. தேசிய தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையங்களிலும், மாவட்டங்களில் அமைக்கப்பட்டுள்ள தேர்தல் நிலையங்களிலும் முறைப்பாடுகள் வழங்கப்பட்டுள்ளன. (எ)

# தமிழ் பேசும் சமூகங்களின் முன்பாக அரசதலைவர் தேர்தல் ஒரு 'பொறி'

## முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 11

தமிழ் மொழி பேசும் சமூகங்களின் முன்பாகஒருபொறியாகவேஅரசதலைவர்தேர்தல்நிறுத்தப்பட்டுள்ளது. இந்தத் தேர்தலில் போட்டியிடும் முதன்மை வேட்பாளர்கள் எவரும் தமிழ், முஸ்லிம், மலையக மக்களுடையஉரிமைகளுக்கானஉத்தரவாதம், பிரச்சினைகளுக்கான தீர்வு, பாதுகாப்பு, சமூக முன்னேற்றம் போன்றவற்றில் துல்லியமான நிலைப்பாடுகள் எதனையும் இதுவரையில் வெளிப்படுத்தவில்லை. இதுவரையான வரலாற்றில் நிகழ்ந்திருக்காத ஓர் அபாயகரமான நிலைமையே இது.

இவ்வாறு சமத்துவம், சமூக நீதிக்கான மக்கள் அமைப்பின் தலைவர் மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார். இது பற்றி அவர் அனுப்பியுள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கடந்தகாலத்தில்நிகழ்ந்தஅத்தனை தேர்தல்களின்போதும்தமிழ்பேசும் தேசிய இனங்களின்பிரச்சினைகள் குறித்தும்அதற்கானதீர்வைப்பற்றியும் இந்தக் கட்சிகள் பேசி வந்திருக்கின்றன. அவை பேசியவாறும் உடன்பட்டவாறும் தீர்வுகளை முன்வைக்காது விட்டாலும் அவற்றைப் பற்றிப் பேசியே தீர வேண்டும் என்ற அவசியநிலைதவிர்க்கமுடியாததாக இருந்தது. இன்று அந்தநிலை இல்லாமலாக்கப்பட்டு, அதைப்பற்றிப் பேசாமலேயே தமிழ், முஸ்லிம், மலையக மக்களின் வாக்குகளை எப்படியும் பெற்றுவிடலாம் என்று இந்தத் தரப்புகள் நம்புகின்றன. இதற்குதமிழ்பேசும்அரசியற்தலைமைகளின்[illegible]அரசியல் அணுகுமுறைகளும் காரணம்.

இந்தச் சிக்கலான நிலையில் எந்த வேட்பாளரைநாம்ஆதரிப்பதுஎன்ற நியாயமானகேள்விமக்களிடத்திலே எழுந்துள்ளது.

இலங்கைத்தீவில் தமிழ், முஸ்லிம், மலையகச் சமூகங்கள் தொடர்ச்சியாகச் சந்தித்துவரும் பிரச்சினைகளும் நெருக்கடிகளும் உலகறிந்தவை. இந்தத் தரப்பினராலும் கூட கடந்தகாலத்தில் இவைஉத்தியோகபூர்வமாகவும் அரசியல் ரீதியாகவும் ஏற்றுக்கொள்ளப்பட்டவை. இதன்படி இவற்றுக்குத்தீர்வுகாணும்நடவடிக்கைகளில் இவை பங்கேற்றும் உள்ளன.

பிரச்சினைகளுக்கும் நெருக்கடிகளுக்கும் தீர்வு காணப்படாமல், தீர்வை நோக்கிய நிலையிலேயே இருக்கும்போதுஅவற்றைப்பேசாது கடந்துசெல்லமுற்படுவதானதுமிக மிகத்தவறு.

இதுநீதிமறுப்புக்குநிகரான, ஆதிக்க மனோபாவத்தின்வெளிப்பாடாகவே கருதவும் இடமளிக்கிறது. இந்த நிலை தமிழ்பேசும் மக்களுடைய எதிர்காலம் குறித்த கேள்விகளை எழுப்புகின்றது.

தமிழ் மொழிச் சமூகத்தினர் எதிர்கொள்ளும் பிரச்சினைகளையும் நெருக்கடிகளையும் வகைப்படுத்தி வேட்பாளர்களின்முன்னேகூட்டாக முன்வைப்பதன் மூலம் எமது மக்களின் நியாயங்களுக்கு அவர்கள் உத்தரவாதமளிக்கும் நிலையை உருவாக்குவோம்.

இதுவே எதிர்காலத்தில் எமது மக்களுடையபாதுகாப்பையும்இருப்பையும் பேணி, இந்த நாட்டில் தமிழ் பேசும் மக்களுடைய வாழ்வுக்கான உத்தரவாதத்தை அளிக்கக் கூடியதாக இருக்கும் என்று தெரிவித்துள்ளார்.

இவைமட்டுமன்றி, எமது மக்களின் கோரிக்கைகள் என்று சிலவற்றை அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைத்தீவானதுபல்லினச்சமூகங்களை உள்ளடக்கிய வாழிடப்பரப்புஎன்றஅடிப்படையில்தமிழ்மொழிச் சமூகத்தினரின் உரிமைகளை உத்தரவாதப்படுத்துதல், அவற்றின் பாதுகாப்பு, நிலம், பண்பாடு, பொருளாதார அபிவிருத்திக்கான சுயாதீனம், மரபுரிமைஉள்ளிட்டஅடையாளங்களைப்பேணும்சட்டவரைபையும் நடைமுறையையும்ஏற்படுத்துதல்.

குறுகிய கால அடிப்படையில் அரசியற்கைதிகளை விடுதலை செய்வதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளல்.

போர்க் குற்ற விசாரணைக்கூடாகக் காணாமலாக்கப்பட்டோரின்விவகாரத்துக்கு வரையறுக்கப்பட்ட கால எல்லைக்குள் தீர்வு காணுதல்.

மக்களின்இயல்புவாழ்வில்இராணுவத் தலையீடுகளையும் நெருக்கடிகளையும் இல்லாமற்செய்தல்.

படைத்தரப்பின்பிடியிலுள்ளகாணிகளை விடுவித்தல்.

இன, சமூக முரண்பாடுகளையும் நெருக்கடிகளையும் உருவாக்கும் வகையிலான மத ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளைத் தடுத்தல்.

கடல், நிலம்சார்ந்ததொழில்மற்றும் பொருளாதார ரீதியிலான எல்லை மீறல்கள், ஆக்கிரமிப்புகளை நிறுத்துதல்.

போர்ப்பாதிப்பிலிருந்து இன்னமும் மீண்டெழ முடியாத நிலையிலிருக்கும் வடக்குக் கிழக்குப் பகுதிக்கான வேலைவாய்ப்புஉள்ளிட்டதொழிற்றுறைமேம்பாட்டைவிருத்திசெய்தல்.

முதலீடுகளை அதிகரிப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளல் என்பனவும் குறிப்பிடப்பட்டுள்ளன. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சஜித்துக்கு ஆதரவு தெரிவித்து மகாசங்க சம்மேளனம் ஏற்பாடு

கொழும்பு, ஒக்.11

அரச தலைவர் வேட்பாளர் சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவையும், ஆசியையும் வழங்கும் நோக்கில் நாட்டின் அனைத்துப் பௌத்த தேரர்களையும் பிரதிநிதித்துவப்படுத்தி மகாநாயக்க தேரர்களை ஒன்றிணைத்து மகரகமவில் இன்று மகா சங்க சம்மேளனம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று ஐக்கிய தேசிய பிக்கு முன்னணி தெரிவித்துள்ளது.

கொழும்பில் உள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் அந்த முன்னணியின் தலைவர் தீனியா ஹெல பாலித தேரர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

நாட்டிலுள்ள அனைத்து பௌத்த தேரர்களையும் பிரதிநிதித்து வப்படுத்தி 3 பௌத்த சங்கங்களினதும் மகாநாயக்க தேரர்கள் ஒன்றிணைந்து இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு மகரகம இளைஞர் சேவை மத்திய நிலையத்தில் பௌத்தசங்கசம்மேளனமொன்றை ஏற்பாடு செய்திருக்கின்றோம். ஐக்கிய தேசிய முன்னணியின் அரச தலைவர்வேட்பாளர்சஜித்பிரேமதாசவுக்கு ஆசி வழங்குவதும், அவருடைய வெற்றிக்கான ஆதரவை வெளிப்படுத்துவதுமே இந்த சம்மேளனத்தை ஏற்பாடு செய்வதற்கான நோக்கமாகும்.

தற்போதைய அரசு ஊடாகப் பௌத்த மதத்துக்குப் பெருமளவான சேவையாற்றப்பட்டுள்ளது. சஜித் பிரேமதாச பௌத்த விகாரைகளுக்கும், ஆராமைகளுக்கும், சைத்திய நிர்மாணங்களுக்கும் பல்வேறுவகையிலும் உதவிகளை வழங்கியிருக்கிறார். சஜித் பிரேமதாச திறமையான, துடிப்பான ஒரு தலைவராவார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் டீ.எஸ். சேனாநாயக்க, பிரேமதாச, ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட தலைவர்களாலும் பௌத்த மதத்துக்கு பல்வேறு சேவைகள் ஆற்றப்பட்டு வந்திருக்கின்றமையைநினைவுபடுத்த வேண்டும்.

ஐக்கிய தேசியக் கட்சி ஒரு போதும் நாட்டைப் பிளவுபடுத்தாது என்பதுடன், பௌத்த மதத்துக்குக் காணப்படும் முதன்மையான இடத்தை இல்லாமல்செய்யாது. அதைஅனைவரும் நன்கு விளங்கிக் கொள்ள வேண்டும் - என்றார். (எ)

## பங்காளிக் கட்சிகளுடன் பேசி தேர்தல் அறிக்கை தயாரிப்பு

### திஸ்ஸ அத்தநாயக்க தெரிவிப்பு



கொழும்பு, ஒக்.11

ஐக்கியதேசியமுன்னணியின்அரசதலைவர்வேட்பாளரின் தேர்தல் அறிக்கையைத் தயாரிப்பது தொடர்பாகப் பங்காளிக் கட்சிகளுடன்பேச்சு நடத்தப்படவுள்ளது என்றும், அது தொடர்பான பேச்சு அடுத்தவாரம்ஆரம்பமாகும் என்றும் ஐக்கியதேசியக் கட்சியின் முன்னாள் பொதுச்செயலாளர்திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

வடக்கு,கிழக்குமக்களின் காணிப் பிரச்சினைக்கு முடிவு காணுதல், தோட்டத் தொழிலாளர்களின் நலன் சார்ந்த விடயங்கள், வேலையில்லாப் பிரச்சினையைத் தீர்க்கும் வழிமுறைகள், இளைஞர்களின் பிரச்சினைக்கு முன்னுரிமை வழங்கல்உள்ளடங்கலாகப் பல விடயங்கள் இந்தத் தேர்தல் அறிக்கையில் சேர்க்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அதேவேளை,சிறிலங்கா பொதுமக்கள்முன்னணியும் தனது பங்காளிக் கட்சிகளுடன் தேர்தல் அறிக்கை தொடர்பாகப் பேச்சு நடத்தப்படுகின்றது என்று அறிவித்துள்ளது. (எ)

## மழையால் மண் சரிவு

கொழும்பு, ஒக்.11

பொகவந்தலாவ பகுதியில் பெய்து வரும் அடை மழை காரணமாக பொகவந்தலாவ கொட்டியாகலை மற்றும் தெரேசியா ஆகிய தோட்டங்களில்ஏற்பட்ட வெள்ளம் மற்றும் மண் சரிவு காரணமாக 49 குடும்பங்களை சேர்ந்த 238 பேர் இடம்பெயர்ந்துள்ளனர்.

பொகவந்தலாவ கொட்டியாகலை தோட்டத்தில் ஏற்பட்ட வெள்ளத்தால் 38 குடும்பங்களைச் சேர்ந்த 184 பேர் வெளியேறப்பட்டுள்ளனர்.

பொகவந்தலாவ கொட்டியாகலை தோட்டத்தில் நேற்று முன்தினம் மாலைவெள்ளம்ஏற்பட்டுள்ளது.

வெள்ளத்தால் 38 வீடுகள் பாதிக்கப்பட்டுள்ளன. அந்தக்குடியிருப்பில் வசித்து வந்த 184 பேர் வெளியேற்றப்பட்டுள்ளனர். இவர்கள் தோட்ட சிறுவர் நிலையத்தில் தற்காலிகமாக தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை,பொகவந்தலாவதெரேசியாதோட்டத்தில்மண்மேடுசரிந்து விழுந்ததில் 15 கோழிகள்உயிரிழந்துள்ளன. வீடும் பகுதியளவு சேதமாகியுள்ளது. நேற்று பெய்த கடும் மழை காரணமாக இந்த இடர் ஏற்பட்டுள்ளது. (எ)

## தற்போது எடுத்திருக்கும் முடிவு சுதந்திரக் கட்சியை அழிக்கும்!

### குமார வெல்கம எச்சரிக்கை



கொழும்பு, ஒக்.11

சிறிலங்காபொதுமக்கள்முன்னணியின் அரச தலைவர் வேட்பாளரை ஆதரிப்பதற்குச் சிறிலங்கா சுதந்திரக் கட்சி எடுத்துள்ள முடிவு சுதந்திரக் கட்சியை அழித்துவிடும் என்று அந்தக் கட்சியின் மூத்த நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம எச்சரித்துள்ளார்.

சிறிலங்காபொதுமக்கள்முன்னணியின் அரச தலைவர் வேட்பாளர் கோத்தபாய ராஜபக்சவை ஆதரிப்பது என்று சிறிலங்காசுதந்திரக்கட்சிஅறிவித்துள்ளது. அது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சிறிலங்காசுதந்திரக்கட்சியின்தலைவர்கள் கட்சியைக் கைவிட்டாலும் நான் பொதுமக்கள் முன்னணியில் இணைய மாட்டேன். ஐக்கிய தேசியக் கட்சியுடனும் இணைந்துகொள்ளமாட்டேன். சுதந்திரமாகஇருக்கவே எதிர்பார்க்கிறேன். தனியாக இந்த நிலைப்பாட்டை எடுக்கும்போது தனியாகவே பயணத்தை ஆரம்பிக்க வேண்டும்.

எனதுநிலைப்பாட்டில்இருந்துபின்வாங்குவதற்கு நான் இரண்டு தலைப்பாம்பு அல்ல. சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் இந்தமுடிவுசரியானது அல்ல. இதுசுதந்திரக் கட்சியின் இருப்புக்கு தீங்கு விளைவிப்பதாக இருக்கும்.

தேர்தலில் பொதுமக்கள் முன்னணி வெற்றி பெற்றால், சுதந்திரக் கட்சியினர் அந்தக்கட்சியில் இணைவார்கள். அதற்குப் பின்னர் சுதந்திரக் கட்சி இருக்காது. - என்றார். (எ)

## கோத்தாவை ஆதரித்ததால் சுதந்திரக் கட்சி தப்பித்தது

### மகிந்த சமரசிங்க எம்.பி. கூறுகிறார்



கொழும்பு, ஒக்.11

சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் அரச தலைவர் வேட்பாளர் கோத்தபாய ராஜபக்சவை ஆதரிப்பது என்று எடுத்த தீர்மானத்தின் மூலம் சிறிலங்கா சுதந்திரக் கட்சி பாதுகாக்கப்பட்டுள்ளது என்று நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்த சமரசிங்க கூறியுள்ளார்.

கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

அனைத்து மக்களுக்கும் ஏற்புடைய வகையில் நாட்டை கட்டியெழுப்ப வேண்டிய தேவைப்பாடு தற்போது உள்ளது. நாட்டின் இறைமையை பாதுகாத்து மக்களின் வாழ்க்கை மேன்மையடைய செய்ய கோட்டாபயவினால் மாத்திரமே முடியும். ஆகையாலேயே அவருக்கு ஆதரவை வழங்கியுள்ளோம்.

கோத்தபாயவுக்கு சுதந்திரக்கட்சி ஆதரவு தெரிவித்ததன் ஊடாக அதன் கொள்கைகளும் பாதுகாக்கப்பட்டுள்ளன. எதிர்வரும் அரச தலைவர் தேர்தலில் நாமே நிச்சயம் வெற்றி பெறுவோம். - என்றார். (எ)

## போலி வாக்குறுதிகளை முன்வைக்க மாட்டோம்

### வாசுதேவ கூறுகின்றார்

கொழும்பு, ஒக்.11

தமிழ் முஸ்லிம் மக்களின் ஆதரவே வெற்றி தீர்மானிக்கும். தேர்தல் வெற்றிக்காக ஒருபோதும் போலியான வாக்குறுதிகளை முன்வைக்கமாட்டோம் என்று நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சிறிலங்காபொதுஜனபெரமுனவுடன்சுதந்திர கட்சி உத்தியோகபூர்வமாக இணைந்துள்ளமை ஐக்கிய தேசிய கட்சிக்குப் பெரும் சவாலாக அமையும். நவம்பர் 16ஆம் திகதிக்கு முன்னர் அரசில் அங்கம்வகிக்கும் சிறுகட்சிகள் எதிரணியுடன் இணைந்துக் கொள்வார்கள். ஐக்கிய தேசிய கட்சியுடன் இணைந்து சுதந்திர கட்சி முன்னெடுத்த தவறான அரசியல் தீர்மானங்கள் தற்போது திருத்திக் கொள்ளப்பட்டுள்ளன. சுதந்திர கட்சியின் ஆதரவுடனே 2015ஆம் ஆண்டு ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. மக்களாணையைப் பெற முடியாது என்ற காரணத்தாலேயே ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க சுதந்திர கட்சியின் பொதுச்செயலாளர்பதவியிலிருந்துமைத்திரிபால சிறிசேனவை பொதுவேட்பாளராக களமிறக்கி அரச தலைவர் தேர்தலில் வெற்றிக் கொண்டு அவர் தலைமையிலான அரசை அமைத்துக் கொண்டார். ஐக்கிய தேசிய கட்சியின் பொருளாதார கொள்கைக்கு முரணாகவே சிறிலங்கா சுதந்திர கட்சி உருவாக்கப்பட்டது. அவ்வாறான நிலையில் இரு தரப்பினரும் ஒருபோதும் இணைந்து செயற்பட முடியாது என்பது கடந்த வருடத்தில் இறுதிப் பகுதியில் தெளிவுப்படுத்தப்பட்டது. தேசிய அரசிலிருந்து அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன வெளியேறியமை சிறந்த அரசியல் தீர்மானமாகும்.

நவம்பர் 16ஆம் திகதிக்கு முன்னர் அரசில் அங்கம்வகிக்கும்பலஅரசியல்கட்சிகள்சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியுடன் இணைந்துக் கொள்வார்கள். தமிழ் முஸ்லிம் மக்களின் ஆதரவேவெற்றியைத்தீர்மானிக்கும். தேர்தல்வெற்றிக்காக ஒருபோதும் போலியான வாக்குறுதிகளை முன்வைக்க மாட்டோம்-என்றார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6.5 மில்லியனுக்கு மேற்பட்ட வாக்குகள் கோத்தாவுக்கு

## இப்படிக் கூறுகிறார் தயாசிறி

கொழும்பு, ஒக்.11

சிறிலங்கா சுதந்திரக்கட்சி சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி ஆகிய கட்சிகள், கூட்டணியாக களமிறங்கியுள்ளமையால் கோத்தபாய ராஜபக்ச, 6.5 மில்லியனுக்கு மேற்பட்ட வாக்குகளை பெறுவது உறுதி என்று சுதந்திரக்கட்சியின் பொதுச்செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.



சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் சிறிலங்கா பொதுமக்கள் முன்ன ணிக்கும் இடையில் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திட்டப் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிப்பதாவது:

சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி, சிறிலங்கா சுதந்திரக்கட்சி யுடன்கை கோர்த்துள்ளமை இலங்கை வரலாற்றில் முக்கிய மான நாளாகும்.

இந்த நாட்டில் பல மாற்றங்களை ஏற்படுத்திய ஒரு கட்சியென்றால் சிறிலங்கா சுதந்திரக்கட்சி என்பதை அனைவரும் அறிவார்கள். சாதாரண மக்களும் சிறந்த வாழ்க்கையை வாழ்வதற்கு இந்த கட்சி முக்கிய பங்காற்றியுள்ளது. சிறிலங்கா சுதந்திரக் கட்சியை பண்டாரநாயக்க குமாரதுங்க, சிறிமாவோ பண்டாரநாயக்க , சந்திரிகா பண்டாரநாயக்க ஆகியோர் முன்னோக்கி கொண்டுச் செல்வதற்கு அர்ப்பணிப்புடன் சேவையாற்றியிருந்தனர்.

அத்தகைய சிறந்த கட்சி, பல்வேறு இன்னல்களுக்கு தற்போதைய காலத்தில் முகம்கொடுத்தி ருந்தபோது அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, கட்சியின் மத்திய குழு உறுப்பினர்கள், தேர்தல் அமைப்பாளர்கள், கட்சியைப் பிரதி நிதித்துவப்படுத்தும் பிரதேச சபை உறுப்பினர்கள் மற்றும் கட்சியின் ஆதரவாளர்கள் ஆகியோரும் கட்சியை வலுப்படுத்த முயன்றனர்.

இவர்கள் எமது கட்சிக்கு ஆரம்பம் முதல் ஆதரவை வழங்கி வருகின்றவர்கள் இன்னும் எங்களுடன்தான் இருக்கின்றார்கள். சிறிலங்கா சுதந்திரக்கட்சி தனியாக செயற்பட்டு பலமான கட்சியாக மூன்று மாதங்களில் மாற்றமடைந்தது. இந்த கட்சி நாட்டின் மீதும் மக்கள் மீதும் உண்மையான அக்கறை கொண்டவர்களை இணைத்துக்கொண்டமையாலேயே முன்னோக்கி சென்றுள்ளது.

இந்தக் கட்சியின் அரச தலைவர் வேட்பாளரான கோத்தபாய ராஜபக்சக்களின் சகோதரர்களாக இருந்தாலும் கூட நாட்டின் புத்திஜீவிகளுக்கு மத்தியில் உருவான நாட்டுப்பற்றுக் கொண்ட தலைவராவார் ஆகையாலேயே நாமும் பெரும்பாலோரின் விருப்பத்திற்கமைவாகவும் கட்சியை பாதுகாக்கவும் இந்த தீர்மானத்தை எடுத்துள்ளோம்.

அரச தலைவரின் ஆசிர்வாதத்துடன் கட்சியையும், நாட்டையும் பாதுகாத்துக் கொண்டு கோத்தபாய ராஜபக்சவை வெற்றி பெறச் செய்யும் பயணத்தை தொடரவுள்ளோம். -என்றார்.

(எ)

# குறுகிய காலத்தில் நாட்டை முன்னேற்றும் திட்டமுண்டு

## மகேஸ் சேனநாயக்க தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.11



குறுகிய காலத்தில் நாட்டை முன்னேற்றக் கூடிய திட்டங்களை வகுத்துள்ளேன் என்று தேசிய மக்கள் இயக்கத்தின் அரச தலைவர் வேட்பாளரும், முன்னாள் இராணுவத் தளபதியுமான ஜெனரல் மகேஸ் சேனநாயக்க தெரிவித்துள்ளார்.

கண்டியில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கட்சி அரசியல் இல்லாமல் நாட்டின் அரசியல் கலாசாரத்தை மாற்றக்கூடிய ஒரு குழு என்னுடன் இணைந்துள்ளது. அதன் ஊடாக குறுகிய காலத்தில் நாட்டை முன்னேற்றப் பாதையை நோக்கி எம்மால் கொண்டுச்செல்ல முடியும்.

கட்சி அரசியல் காரணமாக நாடு நீண்டகாலமாக ஏழை நாடாக இருந்து வருகிறது. இவைகளை மாற்றியமைக்கும் செயற்பாடுகளை நிச்சயம் முன்னெடுப்போம். நாட்டின் தேசிய பாதுகாப்பு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு எக்காலத்திலும் பாதிப்பு ஏற்படாதவாறு உறுதி செய்யப்படும். கல்வியிலும் புதிய புரட்சி ஏற்படுத்தப்படும்- என்றார். (எ)

# சுதந்திரமான ஆட்சிக்கு சஜித்தே வர வேண்டும்

## முஜுபுர் ரஹுமான் தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.11

மக்கள் சுதந்திரமான ஒரு ஆட்சியை அனுபவிக்க வேண்டுமென்றால் சஜித் பிரேமதாசவை அரச தலைவராக்கினால் மட்டுமே சாத்தியம். ஐக்கிய தேசியக் கட்சி 2015 ஆம் ஆண்டு ஆரம்பித்த பயணத்தை எந்தக் காரணத்துக்காகவும் நிறுத்தாது.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் முஜுபுர் ரஹுமான் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசிய கட்சியின் அரச தலைவர் வேட்பாளர் சஜித் பிரேமதாசவை வரவேற்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் நாடாளுமன்ற உறுப்பினர் முஜுபுர் ரஹ்மான் தலைமையில் அழுத்கடை பிரதேசத்தில் நடைபெற்றது. அதில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த சில தினங்களாக ஐ.தே க கட்சிக்குள் நிலவிய கருத்து வேறுபாடுகள் காரணமாக கட்சி நான்காக பிளவுபடும் என்று சிலர் நினைத்திருந்தனர் ஆனால் இன்று அத்தனை தடைகளையும் உடைத்தெறிந்து சஜித் கருரணில் என்ற மாபெரும் கூட்டணியை உருவாக்கி உள்ளோம். இதுதான் எங்களின் சக்தி ஐ.தே.கவின் பலம் என்று அனைவருக்கும் நிரூபித்துள்ளோம்.

2015ஆம் ஆண்டு மிகுந்த சிரமத்தின் மத்தியில் மைத்திரிபால சிறிசேனவை அரச தலைவர் ஆக்கினோம். தற்போதும் அரச தலைவர் தேர்தல் தொடர்பான முடிவுகளை நாங்கள் எடுத்துள்ளோம்.

சஜித் பிரேமதாசவை அரச தலைவர் தேர்தலில் வெற்றிபெற செய்து நாட்டில் மக்கள் சுதந்திரமாக வாழக்கூடிய நாட்டை உருவாக்குவோம்-என்றார். (எ)

# ஆண்டு நினைவும் நூல் வெளியீடும்

யாழ்ப்பாணம்,ஒக்.11

ஈழத்தின் பிரபல நாடகக் கலைஞரும், திருமறைக் கலாமன்றத்தின் மூத்த அங்கத்தவருமான மறைந்த கலாபூஷனம் ஜி.பி.பேர்மினஸின் முதலாம் ஆண்டு நினைவு நிகழ்வும், 'அரங்கவாரிதி' என்னும் நூல் வெளியீடும் இடம்பெறவுள்ளன.

நாளை சனிக்கிழமை திருமறைக் கலாமன்ற கலைத்தூது கலையகத்தில் மாலை 4.30 மணிக்கு நடைபெறவுள்ளன.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக நாடகக் கலைஞரும் சட்டத்தரணியுமான சோ.தேவராஜா கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

வெளியீட்டுரையை திருமறைக் கலாமன்றத்தின் முதன்மை ஆலோசகர் பி.எஸ்.அல்பிரட்டும், நயப்புரையை அருட்பணி.செ.அன்புராசாவும் நிகழ்த்தவுள்ள னர்.

மறைந்த ஜி.பி.பேர்மினஸ் குறித்த நினைவுரைகளை யோ.யோண்சன், ராஜ்குமார், இ.அ.அமலரட்ணம், இன்பகுமார் குருஸ் ஆகியோர் ஆற்றவுள்ளனர். (ஐ)

# பொன்னம்பலத்தால் முடியுமெனின் சிவாஜிலிங்கம் கேட்பது தவறில்லை

## முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் தவராசா தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 11

தமிழ் மக்களின் கோரிக்கைகளை உலகுக்கு எடுத்துக்கூற குமார் பொன்னம்பலம் அரசதலைவர் தேர்தலில் களமிறங்க முடியுமானால், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் அரசதலைவர் தேர்தலில் போட்டியிடுவதில் தவறில்லை என்று வடக்கு மாகாண சபையின் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா தெரிவித்தார்.

நடைபெறவுள்ள அரசதலைவர் தேர்தலில் அரசதலைவர் வேட்பாளராக சிவாஜிலிங்கம் களமிறங்கியுள்ளமை தொடர்பாக ஊடகங்களுக்குக் கருத்துப் பகிரும்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ் மக்களின் கோரிக்கைகளைப் பன்னாடுகளுக்கு எடுத்துக் கூற வேண்டும் என்ற நோக்கத்துடன் அவர் அரச தலைவர் தேர்தலில் போட்டியிடுவாராயின் வரவேற்கின்றேன். தமிழர்களின் பிரச்சினைகளை பன்னாடுகளுக்கு மிக ஆழமாக எடுத்துக் கூற வேண்டிய தேவை இருக்கின்றது. கடந்த காலங்களில் தற்போதைய தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமாரின் தந்தையார் பொன்னம்பலம் அரசதலைவர் தேர்தலில் போட்டியிட்டார். அவர் அரசதலைவர் தேர்தலில் போட்டியிட்டால் நிச்சயம் வெல்லுவேன் என்ற நோக்கில் போட்டியிடவில்லை. தமிழர்களின் பிரச்சினைகள், கோரிக்கைகளை உலகுக்கு எடுத்துக் காடடவே அவர் அந்தக் காலத்தில் அரசதலைவர் தேர்தலில் போட்டியிட்டார்.

தமிழர்களின் கோரிக்கைகளை பன்னாட்டு மயப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தில் சிவாஜிலிங்கம் போட்டியிடுவாராயின் நாம் அதனை ஏற்றுக் கொள்ளலாம். அதற்காக அவரை ஆதரியுங்கள், அவருக்கு வாக்களியுங்கள் என்று கூறவில்லை. - என்றார்.

(த-ரி1)

# ரூபா 1.2 பில்லியன் மேலதிகமாக கோருகிறது தேர்தல் ஆணைக்குழு

கொழும்பு, ஒக்.11

எதிர்வரும் அரச தலைவர் தேர்தலுக்காக தேர்தல்கள் ஆணைக்குழு திறைசேரி யில் இருந்து 1.2 பில்லியன் ரூபாவை மேலதிகமாகக் கோரியுள்ளது என்று தெரியவருகின்றது.

தேர்தலில் 35 வேட்பாளர்கள் போட்டியிடத் தகுதி பெற்றுள்ள நிலையில் தேர்தலுக்கு 4.5 பில்லியன் ரூபாவுக்கு மேல் செலவாகும் என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய கடந்தவாரம் தெரிவித்திருந்தார்.

தற்போது அதற்கு மேலதிகமாக 1.2 பில்லியன் ரூபாவை அந்தத் திணைக்களம் கோருகின்றது என்று அரச திறைசேரியின் மூத்த அதிகாரி ஒருவர் நேற்றுத் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, அரச தலைவர் தேர்தலை முன்னிட்டு ஒவ்வொரு வாக்குச் சாவடிக்கும் மூன்று பொலிஸ் அதிகாரிகள் நிறுத்தப்படுவார்கள் என தேர்தல்களை மேற்பார்வையிடும் மேல் மாகாணத்திற்கு பொறுப்பான மூத்த பிரதி பொலிஸ் மா அதிபர் ஜகத் அபேசிறி குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கில் வேலையற்றவர்கள் தேசிய ஊழியர்படையணியில்

## விழிப்புணர்வுக் கருத்தமர்வு இந்தமாதம்

யாழ்ப்பாணம், ஒக். 11

வடக்கு மாகாண ஆளுநரின் அறிவுறுத்தலுக்கமைவாக வடக்கு மாகாணத்திலுள்ள வேலையற்ற இளையோரை தேசிய ஊழியர் படையணியில் இணைத்துக்கொள்வதற்கும், தொழிற்றகுதி மற்றும் தொழில்விருத்திச் செயற்றிட்டத்தின் கீழ் தேசிய தொழிற்றகுதி என்.வி.கியூ சான்றிதழ்களை வழங்குவதற்கான குறுங்காலத் தொழிற்பயிற்சி தொடர்பிலான விழிப்புணர்வுக் கருத்தரங்கு இந்தமாதம் நடைபெறவுள்ளது.

ஆளுநர்செயலகம், மாவட்டச்செயலகம் மற்றும் 'கைரெக் லங்கா இண்டர்நஷனல்' ஆகியன இணைந்துவடக்குமாகாணத்தைச் சேர்ந்த 5 மாவட்டச்செயலகங்களிலும் நடத்தவுள்ள இந்தக் கருத்தரங்கில் மின் இணைப்பாளர், கனரகவாகன இயக்குநர், கட்டுமானப் பணியாளர், வாகனத் திருத்துநர், ஏ.சி திருத்துநர், தளமேற்பார்வையாளர், ஒற்றோமொபைல், போன்ற பயிற்சிகளில் ஆர்வமுள்ளவர்கள் கலந்துகொள்ளலாம்.

இது தொடர்பான பதிவுகளைப் பிரதேசசெயலகங்களில்பதிவுசெய்தவர்கள் மற்றும் பதிவுகளை மேற்கொள்ளத் தவறியவர்களும் அந்தந்த மாவட்டச் செயலகங்களில் இடம்பெறுகின்றசெயலமர்வுகளில் கலந்துகொண்டுவேலைவாய்ப்புக்களைப்பெற்றுக்கொள்ள முடியும். யாழ்ப்பாணத்தில்14ஆம்திகதிமுற்பகல்9 மணி தொடக்கம் மதியம் 12.30மணிவரை, கிளிநொச்சியில் அன்றுபிற்பகல்2மணிதொடக்கம் மாலை 4 மணி வரை, முல்லைத்தீவில் 15 ஆம் திகதி முற்பகல்9 மணி முதல் 12.30 மணி வரை, வவுனியாவில் 16 ஆம் திகதி முற்பகல்9 மணி முதல் 12.30 மணி வரை, மன்னாரில் 17 ஆம் திகதி முற்பகல்9மணிதொடக்கம்12.30 மணிவரை அந்தந்த மாவட்டச் செயலகங்களில் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (து-7)



# நிரந்தரத் தபாலகத்துக்கு சங்கானையில் அடிக்கல்

## அமைச்சின் செயலர் சிவஞானசோதி நட்டார்

சங்கானை, ஒக்.11

சங்கானையில்தபாலகத்துக்கு நிரந்தரக் கட்டடம் அமைப்ப[illegible]கு அடிக்கல் நடும் நிக[illegible]வு அண்மையில் நடை[illegible]ற்றது.

நிகழ்வுக்[illegible]தன்மை விருந்தினராக மீள்கு டியமர்வு அமைச்சின் செயலர் வீ.சிவஞானசோதி மற்றும் யாழ்ப்பாண மாவட்டமேலதிக செயலர் முரளிதரன், வடக்கு மாகாண அஞ்சல்மாஅதிபர் திருமதி மதுமதி வசந்தகுமார், வலி.மேற்கு பிரதேச செயலர் திருமதி பொ.பிரேமினி, வலி.மேற்கு பிரதேச சபைத் தவிசாளர் த.நடனேந்திரன், திட்டப் பணிப்பாளர்கள், கிராமஅலுவலர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

மீள்குடியமர்வு அமைச்சின் செயலர் உரையாற்றும்போது, அமைச்சின் நிதி ஒதுக்கீட்டிலிருந்து ரூபா 8 மில்லியன் நிதி ஒரு பகுதியாக இந்தத் தபாலகக்கட்டடத்துக்காக வழங்கப்பட்டுள்ளது. எதிர் வரும் நவம்பர் மாதம் முடிவதற்குள் இந்தக் கட்டடவேலைகளைப்பூர்த்தி செய்து கொள்ள வேண்டும் எனத் தெரிவித்தார். பூர்த்தி செய்யப்பட்டால் இந்த வருட வரவு- செலவுத் திட்டத்தின் மேலதிக நிதியைப்பெற்றுக்கொள்ளலாம் எனவும் தெரிவித்தார்.

இந்த நிகழ்வுக்குத் தலைமை வகித்து உரையாற்றிய சங்கானை பட்டினஅபிவிருத்திச்சபைத் தலைவர் கு.குணசிறி தனதுரையில், எமதுநீண்டகாலக் கனவு இன்று நனவாகியுள்ளது. இந்தத் தபாலகம்கட்டுவதற்கான காணியை எமக்கு இலவசமாகத் தந்துதவிய அமரர்ஓய்வுபெற்றஆசிரியை பரிமளம் சோமசுந்தரத்துக்கு நாம் நன்றி கூறக் கடமைப்பட்டவர்களாவோம். பொதுமக்களின் பெரும் ஒத்துழைப்பும் இந்தத் தபாலகத்தின் முன்பு கடமையாற்றி இடமாற்றம் பெற்றுச் சென்ற தபாலதிபர் எஸ்.யோகராசாவின்முயற்சியில்லாவிடில் இப்படி ஒரு காணியைப் பெற்றுக் கொள்ள முடியாமல் போயிருக்கும். என்றுதெரிவித்தார். (து-29)

# எல்பிட்டியத் தேர்தலில் பெரமுனவே வெல்லும்

## ரமேஷ் பத்திரன நம்பிக்கை

கொழும்பு, ஒக்.11



எல்பிடிய பிரதேச சபை தேர்தலில் சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி அமோக வெற்றிப் பெற்று அதிகமான ஆசனங்களை கைப்பற்றும். அரச தலைவர் தேர்தலில் வெற்றிப் பெறுவதற்கு முன்னர் தமது பலத்தை ஐக்கிய தேசிய கட்சி இத்தேர்தலில் உறுதிப்படுத்த வேண்டும்.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் ரமேஷ் பத்திரன தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் தலைமை அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது

சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியுடன் சுதந்திர கட்சி ஒப்பந்த அடிப்படையில் இணைந்துள்ளமை எமது வெற்றியை பலப்படுத்தியுள்ளது.

சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியுடன் சுமார் 52 இலட்சம் வாக்குகள் உள்ளது என்று இடம் பெற்று முடிந்த உள்ளூராட்சி மன்ற தேர்தலின் பெறுபேற்றின் ஊடாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அந்தத் தேர்தலில் சிறிலங்கா சுதந்திர கட்சிக்கு 15 இலட்சம் வாக்குகள் இருந்தன. ஆகவே தற்போது இந்த இரண்டு தரப்பின் இணைப்பின் ஊடாக சுமார் 67 இலட்சம் வாக்குகள் எதிரணிக்கு உள்ளது என்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

சுமார் 67இலட்சம் வாக்குகளை அடிப்படையாகக் கொண்டே சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி தேர்தலை எதிர்க்கொள்ளவுள்ளது. தேர்தலில் வெற்றிப் பெறுவதற்கான அனைத்து திட்டங்களும் வகுக்கப்பட்டுள்ளன. சுதந்திர கட்சியின் கொள்கையையும் ஆதாரமாக கொண்டு அரச தலைவர் தேர்தலில் அமோக பெற்றிப் பெற முடியும் - என்றார். (எ)



பன்னாட்டுஅஞ்சல்தினத்தை முன்னிட்டுநடத்தப்பட்டதேசியமட்டக்கட்டுரைப்போட்டியில்தரம்1213 பிரிவில் யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை மாணவி பவப்பிரியா ஆறுமுகதாசன் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார். இந்தக் கட்டுரைப் போட்டி அஞ்சல் திணைக்களத்தால் நடத்தப்பட்டுள்ளது. (க)

# சத்துணவுகள் வழங்கல்

யாழ்ப்பாணம், ஒக்.11

நல்லூர்பிரதேசசபைக்கு உட்பட்ட முன்பள்ளி மாணவர்களுக்கு இந்த மாதத்துக்கான சத்துணவுகள்பிரதேசசபையால் அண்மையில் வழங்கி வைக்கப்பட்டன.

நவராத்திரி பூசையை முன்னிட்டு இந்த சத்துணவுகள் சகல முன்பள்ளிகளுக்கும் இம்முறை முன்கூட்டியே வழங்கி வைக்கப்பட்டதாக சபையின்தவிசாளர்தெரிவித்தார். இம்முறை கௌப்பி, அவல் ஆகிய உணவுப் பொருள்கள் வழங்கிவைக்கப்பட்டன. சபைக்கு உட்பட்ட 24 வரையிலான முன்பள்ளிநிலையங்களுக்கு இந்த சத்துணவுகள் மாதம்தோறும் சபை [illegible]

# அஞ்சல் தின நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஒக்.11

பன்னாட்டு அஞ்சல் தினத்தை முன்னிட்டு பல்வேறு நிகழ்வுகள் நேற்றுமுன்தினம் பரந்தன் முதன்மை அஞ்சல் அலுவலகத்தில் இடம் பெற்றது.

நிகழ்வில் தேசியக் கொடியை அஞ்சல் அதிபர் ரி.ஜெயராம் எற்றி வைத்தார். அஞ்சல் கொடியை உதவி அஞ்சல் அதிபர் செல்வி இ.சிந்துஜா எற்றி வைத்தார்.

அதனைதொடர்ந்துஇலவச கண் பரிசோதனையும் இடம்பெற்றது. (ஐ)

# கடலில் அடித்துச் செல்லப்பட்ட இளைஞன் சடலமாக மீட்பு

மட்டக்களப்பு, ஒக். 11

மட்டக்களப்பு மாவட்டம் களுவாஞ்சிகுடிப் பொலிஸ்பிரிவுக்குட்பட்டகளுதாவளைக்கடலில் நீராடிக்கொண்டிருந்த இளைஞர்ஒருவர்கடந்த செவ்வாய்க்கிழமை காணாமல் போயிருந்த நிலையில்நேற்றுஅவர்சடலமாகமீட்கப்பட்டார். கடந்தமூன்றுதினங்கள[illegible]கதேடுதல்மேற்கொள்ளப்பட்ட போதிலும் இளைஞர் மீட்கப்பட்டவில்லை. இந்தநிலையில்நேற்றுமாலைஅவர் [illegible]மீட்கப்பட்டுள்ளார். (ம)

# விபத்தில் ஒருவர் உயிரிழப்பு

நெடுங்கேணிபட்டிக்குடியிருப்பில்நேற்றுமுன்தினம் இடம்பெற்ற விபத்தில் கந்தையா உதயகுமார் என்ற குடும்பத் தலைவர்உயிரிழந்தார்.

குறித்த நபர் கடந்த 8ஆம் திகதி காலை இலுப்பைகுளம் பகுதியில் உந்துருளியில் சென்றுகொண்டிருந்த போது கட்டுபாட்டை இழந்தஉந்துருளிவிபத்துக்குள்ளானது. இதில் படுகாயமடைந்த அவர் வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சைபெற்றுவந்தார்.

இந்த நிலையில் சிகிச்சை பயனின்றி நேற்றுமுன்தினம்அவர் உயிரிழந்தார். (ம-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசை விமர்சித்த மாணவர் அடித்தே கொல்லப்பட்டார்!

## பங்களாதேஷில் உச்சமடைகின்றன போராட்டங்கள்





டாக்கா,ஒக்.11
பங்களாதேஷ் அரசை விமர்சித்துச் சமூக வலைதளத்தில் கருத்து வெளியிட்ட அந்த நாட்டைச் சேர்ந்த மாணவர் ஒருவர் அடித்துக் கொல்லப்பட்டார்.

கடந்த ஞாயிற்றுக் கிழமையன்று அவர் மீது பல மணி நேரங்களாகக் கடுமையான தாக்குதல் நடத்தப்பட்டது. அதன் பின்னர் அவர் சாவடைந்தார். இதனால் அங்கு அரசுக்கு எதிரான போராட்டங்கள் அதிகரித்துள்ளன.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது.

கடந்த ஞாயிற்றுக்கிழமையன்று தனது விடுதி அறையிலிருந்து சில நபர்களால் வெளியே அழைத்துச் செல்லப்பட்ட அப்ரார் வ்பாஹட் என்கிற குறித்த மாணவர் மீது கிட்டத்தட்ட 4 மணி நேரம் தாக்குதல் நடத்தப்பட்டது.

அதன் பின்னர் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்ட அவர் சாவடைந்தார். இதனால் அங்கு போராட்டங்கள் அதிகரித்துள்ளன.

பங்களாதேஷின் தலைநகரான டாக்காவில் உள்ள பங்களாதேஷ் பொறியியல் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்று வரும் குறித்த மாணவர் கொல்லப்பட்டமை தொடர்பாகப் பங்களாதேஷின் ஆளும்கட்சியான அவாமி லீக் கட்சியின் இளைஞர் அணியைச் சேர்ந்த பலர் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகின்றனர்.

பங்களாதேஷில் மாணவர்கள் மீது நடக்கும் தாக்குதல்கள் மற்றும் கடத்தல்கள் தொடர்பாக இந்த இளைஞர் அணியினர் மீது பரவலாக குற்றம்சாட்டப்படுகிறது.

---

தாய்லாந்தில் மீண்டும் பரிதாபம்

# அருவிக்குள் விழுந்து 5யானைகள் சாவு

பாங்கொங்,ஒக்.11
தாய்லாந்தில் நீர்வீழ்ச் சிக்குள் விழுந்து மேலும் 5 யானைகள் சாவடைந்தன. கடந்த சனிக்கிழமை 3 வயதான குட்டியானை ஒன்று குறித்த அருவிக்குள் தவறி விழுந்ததில் அதைக் காப்பாற்றுவதற்காக அடுத்தடுத்து அருவிக்குள் குதித்த 5 யானைகள் சாவடைந்தன.



இந்தச் சம்பவம் அங்கு பெரும் சோகத்தை ஏற்படுத்தியது. இந்த நிலையில், குறித்த அருவிக்குள் மீண்டும் 5 யானைகள் விழுநது சாவடைந்துள்ளன. தற்போது சாவடைந்துள்ள இந்த 5 யானைகளும், எப்போது? எப்படி? நீர்வீழ்ச்சிக்குள் விழுந்தன என்பது தெரியவில்லை.

காவோ யாய் தேசியப் பூங்காவில் மிகக் குறுகிய காலத்தில் 11 யானைகள் உயிரிழந்தமை இதுவே முதன் முறை என கூறப்படுகிறது.

---



வீதிகளை முறையாகச் சீரமைக்காத காரணத்தால் மெக்சிக்கோவின் லாஸ் மார்கரிடாஸ் மாநிலத்தின் மேயரான எஸ்கன்டோ என்பவரை அந்த ஊர் மக்கள் வாகனத்தில் கட்டி வீதியில் இழுத்துச் சென்றனர். கயிறால் கட்டப்பட்ட நிலையில் மேயர் வீதியில் கிடக்கிறார்.

---



# இன்றைய நாள்

**மேடம்:** மனதில் ஆன்மிக சிந்தனை அதிகரிக்கும். அக்கம் பக்கத்தவருடன் கூடுதல் அன்பு வளரும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி இலக்கு பூர்த்தியாகும். உபரி பண வருமானம் கிடைக்கும். குடும்பத்தில் சுப நிகழ்வு உண்டாகும்.

**இடபம்:** பிறரை வசீகரிக்கின்ற அளவில் உங்கள் செயல் திறன் வளரும். தொழில், வியாபார நடைமுறை திருப்திகரமாகும். உற்பத்தி, விற்பனை செழித்து வளரும்.

**மிதுனம்:** அத்தியாவசிய பணி ஒன்றை மறந்து விடுவீர்கள். தொழில், வியாபாரம் சராசரி அளவில் இருக்கும். அளவான பணவரவு கிடைக்கும். புதிய இனங்களில் பண செலவு வரலாம்.

**கடகம்:** மனதில் விரக்தி எண்ணம் ஏற்படலாம். தொழில், வியாபாரத்தில் கூடுதல் பணி சுமை உருவாகும். பணவரவை முக்கியமான செலவுக்கு பயன்படுத்துவீர்கள்.

**சிம்மம்:** உங்கள் இஷ்ட தெய்வ அருளினால் புதிய முயற்சி எளிதில் நிறைவேறும். தொழில், வியாபாரம் செழித்து சமூகத்தில் அந்தஸ்து கூடும். பண பரிவர்த்தனை திருப்திகரமாகும்.

**கன்னி:** பிறருக்கு உதவுவதில் ஆர்வமுடன் செயல்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி பணி சிறப்பாக நிறைவேறும். பணவரவும் நன்மையும் அதிகரிக்கும். வெகுநாள் எதிர்பார்த்த சுப செய்தி வந்து சேரும்.

**துலாம்:** எவருக்கும் வாக்குறுதி தர வேண்டாம். தொழில், வியாபாரத்தில் மாறுபட்ட சூழ்நிலை உருவாகி தொந்தரவு தரலாம். மனைவி யின் ஆறுதல் வார்த்தை நம்பிக்கை தரும்.

**விருச்சிகம்:** மனதில் குழப்பமான சிந்தனை உருவாகும். முக்கியமான பணியை தனி கவனத்துடன் நிறைவேற்றுவது நல்லது. தொழில், வியாபார நடைமுறை சீராக இருக்கும்.

**தனுசு:** உங்களுக்கு எதிரியால் உருவான தொல்லை விலகும். செயல்களை ஆர்வமுடன் நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியில் நல்ல முன்னேற்றம் உண்டு.

**மகரம்:** உங்களின் குடும்ப விஷயம் பிறரிடம் பேச வேண்டாம். தொழில், வியாபாரத்தில் நிலுவை பணி அறிந்து நிறைவேற்றுவது நல்லது. எதிர்பார்த்த அளவில் பணவரவு இருக்கும்.

**கும்பம்:** உங்கள் அன்புக்குரியவரின் தேவைக்கு உதவுவீர்கள். தொழில், வியாபாரத்தில் கூடுதல் மூலதனத்துடன் அபிவிருத்தி பணிபுரிவீர்கள்.

**மீனம்:** குடும்ப பொறுப்பை உணர்ந்து செயல்படுவது அவசியம். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட இலக்கு படிப்படியாக நிறைவேறும். அத்தியாவசிய தேவைக்கு பணம் கிடைக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிரியா மீது துருக்கி போர்!



அங்காரா,ஒக்.11
சிரியாவின் வடக்குப் பகுதியில் தாக்குதலை ஆரம்பித்துள்ளதாக அறிவித்துள்ளார் துருக்கி அதிபர் ரிசெப் தாயிப் எர்டோகன். குறித்த பகுதியைத் தமது கட்டுப்பாட்டில் வைத்துள்ள அமெரிக்க ஆதரவு பெற்ற குர்திஷ் ஆயுததாரிகளோடு துருக்கி போரை ஆரம்பித்தது.
இது குறித்து மேலும் தெரியவருவதாவது:
குர்திஷ் ஆயுததாரிகள் மீது இராணுவ நடவடிக்கையில் ஈடுபடுவதற்காக துருக்கிப் படைகள் சிரியாவுக்கு நுழைந்து ள்ளன. இதைத் துருக்கி இராணுவ அதிகாரிகளும் உறுதிப்படுத்தினர். அத்தோடு துருக்கியின் எல்லைப்புறத்தில் ஈரான் படைகள் இராணுவப் பயிற்சி மேற்கொண்டுள்ளன. இதன் காரணமாக ஈரான், சிரியா, துருக்கி எல்லைகளில் பதற்றம் நிலவுகிறது. துருக்கி இந்தத் தாக்குதலைத் தொடங்குவதற்கு முன்பாக சிரியாவில் இருந்த அமெரிக்கத் துருப்புகளை திரும்பப் பெற்றார் அமெரிக்க அதிபர் ட்ரம்ப். அத்தோடு துருக்கி பின்விளைவுகளை சந்திக்கும் என்றும் அவர் எச்சரித்தார்.

## நியூசிலாந்தில் நிலநடுக்கம்



வெலிங்டன்,ஒக்.11
நியூசிலாந்தின் வட பகுதித் தீவுகளில் நேற்று இரவு நிலநடுக்கம் உணரப்பட்டது.
இந்த நில நடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 5.5 ஆகப் பதிவாகியது. இதன் ஆழம் 10 கிலோமீற்றர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த நிலநடுக்கம் காரணமாக ஏற்பட்ட பாதிப்புகள் குறித்த தகவல்கள் வெளியாகவில்லை. சுனாமி எச்சரிக்கையும் விடுக்கப்படவில்லை.

## சிரியாவில் தாக்குதல் நடத்த நாங்கள் அனுமதிக்கவில்லை

### அமெரிக்கா தெரிவிப்பு




வோஷிங்டன்,ஒக்.11
சிரியாவின் வடபகுதியில் குர்திஷ் ஆயுததாரிகளுக்கு எதிராகத் தாங்கள் தாக்குதல் நடத்த தொடங்கி விட்டதாகத் துருக்கி அதிபர் அறிவித்துள்ள நிலையில், இந்தத் தாக்குதல் தொடர்பாகத் தாங்கள் எந்த அனுமதியும் வழங்கவில்லை என்று அமெரிக்க அயலுறவுச் செயலர் மைக் பாம்பியோ தெரிவித்தார்.
சிரியாவில் இருந்த அமெரிக்கத் துருப்புகளை அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் திரும்பப் பெற்றமை சரியானதே என்று தெரிவித்த மைக் பாம்பியோ, துருக்கி, சிரியாவில் தாக்குதல் நடத்துவதற்கு அமெரிக்க ஒப்புதல் அளித்ததாக வெளிவந்த செய்திகள் உண்மையற்றவை என்றும் குறிப்பிட்டார்.
சிரியாவிலிருந்து அமெரிக்கப் படைகளைத் திரும்பப் பெற்ற ட்ரம்பின் முடிவு அமெரிக்காவிலும், சர்வதேச அரங்கிலும் எதிர்ப்புக் குரல்களை உருவாக்கியிருந்தமையும், சிரியாவில் துருக்கி தாக்கதல் நடத்தினால் அதில் நாம் தலையிட மாட்டோம் என்று அமெரிக்கா தெரிவித்ததாகப் பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## உணவில் தலைமயிர் இருந்ததால் மனைவிக்கு மொட்டையடிப்பு!

### பங்களாதேஷில் சம்பவம் கணவர் கைது!

டாக்கா,ஒக்.11
உணவில் தலைமயிர் இருந்ததால் தனது மனைவிக்கு வலுக்கட்டாயமாக மொட்டை அடித்தார் கணவர். இந்தச் சம்பவம் பங்காளதேஷின் வட பகுதியில் உள்ள ஜாய்புர்ஹட் மாவட்டத்தில் நடந்தது. குறித்த கணவரை அந்த நாட்டுப் பொலிஸார் கைது செய்தனர். மனைவி மீது 'கடுமையான காயத்தை ஏற்படுத்தினார் என்ற பிரிவில் கணவருக்கு எதிராக வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், இந்தப் பிரிவின் கீழ் அவருக்கு அதிகபட்சமாக 14 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்க வாய்ப்பு உள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். பங்களாதேஷில் பெண்களுக்கு எதிரான வன்முறை மற்றும் பாலியல் குற்றங்களைத் தடுப்பதற்காகக் கடுமையான சட்டங்கள் இருந்தாலும், பெண்கள் மீதான அடக்குமுறை அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.




## 2019 நோபல்

ஸ்டொக்ஹோம்,ஒக்.11
மருத்துவம், இயற்பியல், பொருளாதாரம், அமைதி, இலக்கியம் ஆகிய துறைகளில் சாதனை படைத்தவர்களுக்கு ஆண்டுதோறும் நோபல் பரிசுகள் வழங்கி மதிப்புறுத்தப்படுவது வழக்கம். இந்த வருடத்துக்கான இயற்பியல், மருத்துவத் துறைகளுக்கான நோபல் பரிசு அறிவிக்கப்பட்டிருந்த நிலையில், 3 விஞ்ஞானிகளுக்கு வேதியியலுக்கான நோபல் பரிசு அறிவிக்கப்பட்டது. லிதியம்அயன் மின்கலத்தை மேம்படுத்தியதற்காக அமெரிக்கா, பிரிட்டன், ஜப்பான் ஆகிய நாடுகளைச் சேர்ந்த 3 விஞ்ஞானிகளுக்கு இந்தப் பரிசு அறிவிக்கப்பட்டது. அமெரிக்காவைச் சேர்ந்த ஜோன் கூட்எனவ்ப், பிரிட்டனைச் சேர்ந்தஸ்டான்லி விட்டிங்ஹாம், ஜப்பானைச் சேர்ந்த அகிரா யோஷினோ ஆகியோருக்கே வேதியியலுக்கான இந்த நோபல் பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது.

## இந்தியா – பாகிஸ்தான் எல்லையில் துப்பாக்கிச் சூடு பாகிஸ்தான் சிப்பாய் சாவு!

### இந்திய ஊடகங்களில் செய்தி

புதுடெல்லி,ஒக்.11
இந்தியா - பாகிஸ்தான் எல்லைப் பகுதியான காஷ்மீரில் இந்தியா - பாகிஸ்தான் சிப்பாய்களுக்கு இடையே துப்பாக்கிச் சூட்டுச் சண்டை நடந்ததாகவும், அந்தச் சண்டையில் பாகிஸ்தான் சிப்பாய் ஒருவர் சாவடைந்ததாகவும் இந்திய ஊடகங்களில் செய்திகள் வெளியாகின.
இந்தியப் படையினர் மேற்கொண்ட குறித்த தாக்குதலில் பாகிஸ்தான் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டதாகவும் இரண்டு பெண்கள் காயமடைந்ததாகவும் இது எல்லையில் அத்துமீறி இந்திய இராணுவம் நடத்திய தாக்குதல் என்று பாகிஸ்தான் இராணுவம் தெரிவித்ததாகவும் அந்தச் செய்தியில் மேலும் குறிப்பி டப்பட்டுள்ளது.



## சீன அதிபரின் வருகையால் சுத்தமாகியது சென்னை!

### உயர் நீதிமன்றம் கருத்து

புதுடெல்லி,ஒக்.11
சீன அதிபர் இந்தியாவின் சென்னைக்கு வருகை தந்த காரணத்தால் சென்னை சுத்தமாகியுள்ளதாகச் சென்னை உயர் நீதிமன்றம் தெரிவித்தது. விளம்பரப் பதாகை விழுந்து சாவடைந்த சுபஸ்ரீயின் வழக்கின் போதே நீதிமன்றம் இவ்வாறு தெரிவித்தது.
சீன அதிபரின் வருகையால் சென்னை சுத்தமாகி உள்ளது. மற்ற உலகத் தலைவர்கள் இங்கு வந்தால் தமிழகமே சுத்தமாகிவிடும் என்று நீதிபதி வைத்தியநாதன் நீதிமன்றில் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாட்டின்...

வத் தளபதியாக நான் செயற்பட்டபோது போரை இன்னுமொரு தளபதிக்கு வைத்துவிட்டு செல்லமாட்டேன் என்று கூறினேன். அப்படியே நான் செய்தேன். அதுபோலவே நான் இந்த நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவேன். சட்டத்தைக் கையில் எடுக்காமல் நாங்கள் பாதுகாப்பை உறுதிப்படுத்துவோம்.' இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் இராணுவத் தளபதியுமான பீல்ட் மார்ஷல் பொன்சேகா தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான தேசிய ஜனநாயக முன்னணியின் அரச தலைவர் வேட்பாளர் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவு தெரிவித்து முதலாவது பரப்புரைக் கூட்டம் கொழும்பு, காலிமுகத்திடலில் நேற்று நடைபெற்றது. இதில் சஜித் பிரேமதாஸ உரையாற்றும்போது, 'நான் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றதும் தேசிய பாதுகாப்பைப் பலப்படுத்தும் உறுதிப்படுத்தும் பொறுப்பு முன்னாள் இராணுவத் தளபதியான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவுக்கு வழங்கப்படும்' என்று தெரிவித்தார். அதன்பின்னர் சரத் பொன்சேகா உரையாற்றும் போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

'படைத்தரப்பினருக்குப் பிரச்சினைகள் உள்ளன. அவற்றை நாம் தீர்க்க வேண்டும். ஓய்வுபெற்ற படையினர் பொலிஸாரின் குறைகள் தீர்க்கப்பட வேண்டும். படையினர் குறித்து இன்று அக்கறையாகப் பேசும் ராஜபக்சவினர் அன்று படையினருக்கு என்ன செய்தனர்? அவர்களால் படையினர் பாதிக்கப்பட்டனர். இங்கே பக்கத்தில் இருக்கும் இராணுவத் தலைமையகம் தரைமட்டமாக்கப்பட்டது. அந்தக் காணி சீனர்களுக்கு வழங்கப்பட்டது. அன்று தனிப்பட்ட காரணத்தினால் அமெரிக்கா சென்ற கோத்தபாய இன்று இராணுவ நலன் பற்றி பேசுகின்றார். சுனாமி நிவாரண நிதியைத் திருடிய ராஜபக்ச கூட்டம் எப்படி மக்களுக்கு நிவாரணம் வழங்கப் போகின்றது? மக்களின் பாதுகாப்பை நாங்கள் உறுதிப்படுத்துவோம்'- என்றார். (ம-22)

## குடும்ப...

சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவு தெரிவித்து முதலாவது முக்கிய பரப்புரைக் கூட்டம் கொழும்பு, காலிமுகத்திடலில் நேற்று நடைபெற்றது. இதில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

'உலகத்துடன் போட்டியிட்டு முதல் தர நாடாக இலங்கையை நாங்கள் கட்டியெழுப்பவேண்டும். நவீனயுகத்துக்கேற்றபடி எங்கள் நாட்டை மாற்றி நிம்மதிப் பெருமூச்சு விடும் நாடாக மாற்றி அனைத்து துறைகளிலும் மேம்படுத்த வேண்டும்.

நான் தவறு செய்தால், அவற்றைச் சரி செய்ய என்னால் முடிந்த அனைத்தையும் செய்வேன். அத்தோடு பொதுமக்கள் முன்வந்து அவர்களிடம் மன்னிப்புக் கோரவும் நான் ஒருபோதும் தயங்கமாட்டேன்.

தனது சொந்தக் குடும்பத்துக்கும் தங்கள் உறவினர்களுக்கும் முதலிடம் கொடுக்கும் ஒரு தலைவர் இந்த நாட்டுக்குத் தேவையில்லை. இந்த நாட்டின் எதிர்காலத்தை மாளிகையின் உள்ளே இருக்கும் ஒரு குடும்பம் தீர்மானிக்கக் கூடாது. இந்த நாட்டின் எதிர்காலத்தை இந்த நாட்டின் கடின உழைப்பாளிகளே தீர்மானிக்க வேண்டும்.

நாம் அமைக்கும் புதிய ஆட்சியில் திருட்டு, ஊழல், மோசடிகளுக்கு இடமளிக்கமாட்டோம்.

இந்த நாடு இதுவரை கண்டிராத தூய்மையான அரசாக நமது அரசு மாறும். இதற்கு எதிராக வேலை செய்ய விரும்பும் ஒருவர் இருந்தால், அவர்கள் மூட்டை கட்டிக்கொண்டு இப்போதே வீட்டுக்குச் செல்ல வேண்டும்.

எமது அரசின் கீழ் நாங்கள் சில தியாகங்களை அர்ப்பணிப்புக்களைச் செய்ய வேண்டும். அப்படிச் செய்து மக்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்த வேண்டும். நாட்டின் இறையாண்மை பாதுகாப்பை நாங்கள் உறுதிப்படுத்துவோம். நாங்கள் நாட்டின் உரிமையாளர்கள் அல்லர். நாங்கள் நாட்டின் தற்காலிக பாதுகாவலர்கள். இளைய சமுதாயத்தின் எதிர்காலத்தை நாங்கள் சிறந்ததாக மாற்றியமைப்போம்.

பெண்களின் எதிர்காலத்தை நல்லபடியாக மாற்றி அவர்களைப் பாதுகாக்க நாங்கள் கொள்கை வகுப்போம். விவசாயக் கொள்கை, தொழிலாளர் கொள்கை வகுப்போம்.

சமுர்த்தி நிவாரணம் சிறப்பான முறையில் வழங்கப்படும். அதற்கான கொள்கைகள் வகுக்கப்பட்டுள்ளன. அறநெறிப் பாடசாலைகள் ஆரம்பித்து ஒழுக்கமான சமுதாயத்தை உருவாக்குவோம். அச்சமற்ற சூழ்நிலையை நாங்கள் ஏற்படுத்துவோம்' - என்றார். (ம-22)

## வாக்குச்...

35 வேட்பாளர்களின் பெயர்களுடன் இந்த வாக்குச் சீட்டு அச்சிடப்பட ஆரம்பித்துள்ளதாகவும் சுமார் ஒரு கோடியே 60 லட்சம் வாக்குச் சீட்டுக்கள் அச்சிடப்பட வேண்டியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பெரும் பாதுகாப்புக்கு மத்தியில் இந்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## இராணுவத்தினர்...

படை உறுப்பினர்களும் காணப்படுகின்றனர். இராணுவத்தின் வரலாற்றில் ஆண்டு நிறைவை முன்னிட்டு இவ்வளவு பேருக்கு பதவி உயர்வுகள் வழங்கப்பட்டுள்ளமை இதுவே முதற்தடவை எனவும் கூறப்படுகின்றது. (ம)

## எரியூட்டப்பட்ட...

டுள்ளது. அவர் கடத்திச் செல்லப்பட்டு அடித்துக் கொல்லப்பட்ட பின்னர் எரியூட்டப்பட்டிருக்கலாம் என்று சந்தேகம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த இளைஞர் நேற்றுமுன்தினம் காணாமல் போயிருந்தார். பொலிஸார் தேடுதலைத் தீவிரப்படுத்தியிருந்தன். இந்த நிலையில் குறித்த நபர் வவுனியா கள்ளிக்குளம் பகுதியிலுள்ள பற்றைக் காட்டுக்குள்ளிருந்து சடலமாக மீட்கப்பட்டார்.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் வவுனியா சின்னப்புதுக்குளம் பகுதியைச் சேர்ந்த 27 வயதுடைய சுகந்தன் எனத் தெரியவருகின்றது. மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (ம-110,222)

## கொலைகாரன்...

ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான தேசிய ஜனநாயக முன்னணியின் அரச தலைவர் வேட்பாளர் சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவு தெரிவிக்கும் முதலாவது பரப்புரைக் கூட்டம் கொழும்பு, காலிமுகத்திடலில் நேற்று நடைபெற்றது. இலட்சக்கணக்கான மக்கள் பங்கேற்ற இந்தக் கூட்டத்தில் உரையாற்றும்போதே ரணில் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

'சஜித் பிரேமதாஸவை நாங்கள் அரச தலைவர் வேட்பாளராக அறிவித்த பின்னர் எமது எதிரணியினர் காலஞ்சென்ற எமது அரச தலைவர் ரணசிங்க பிரேமதாஸவுக்கு எதிராகத் தாக்குதல் தொடுக்க ஆரம்பித்துள்ளனர்.

அன்று அவருடன் ஒன்றாக வேலை செய்த அமைச்சர் என்ற வகையில் நான் இது குறித்து தெளிவுபடுத்த வேண்டும். ரணசிங்க பிரேமதாஸவினால்தான் அரச தலைவர் ஜே.ஆர்.ஜெயவர்த்தன தேர்தலில் பெரும்பான்மைப் பலத்தில் வெற்றி பெற்றார்.

ரணசிங்க பிரேமதாஸவே குடும்பவாதம், ஏற்றத்தாழ்வுகளை இல்லாதொழித்து நாட்டை நல்ல நிலைமைக்குக் கொண்டு வர நடவடிக்கை எடுத்தார். நான் ரணசிங்க பிரேமதாஸவின் அரசில் கைத்தொழில் அமைச்சராகப் பணியாற்றினேன்.

அவர் தெளிவான நோக்கத்துடனேயே நாடு முழுவதும் 200 ஆடைத் தொழிற்சாலைகளை திறக்கக் காரணமாக இருந்தார். அவர் செய்த வேலைகளையே சஜித் பிரேமதாஸ அரச தலைவராகத் தெரிவுசெய்யப்பட்ட பின்னர் நாங்கள் முன்னெடுக்கவுள்ளோம்.

அம்பாந்தோட்டையில் பத்தாயிரம் ஏக்கரில் தொழிற்பேட்டை தேவையில்லையா என்று மகிந்த மற்றும் கோத்தபாய ஆகியோரிடம் கேட்கின்றேன். காலிமுகத்திடல் மைதானத்தை மேலும் 40 மீற்றர்கள் கடல் பக்கம் விரிவுபடுத்த எண்ணியுள்ளோம். இதேபோன்று பெரிய மாற்றங்களை ஏற்படுத்த எண்ணியுள்ளோம்.

சஜித் பிரேமதாஸ அரசியலுக்கு வந்த போது, ஏன் மத்திய கொழும்பை தெரிவு செய்யவில்லை என்று கேட்டேன். அப்போது தனக்கு அம்பாந்தோட்டை தருமாறு கேட்டார். வறிய மக்களோடு இருக்க வேண்டும் என அவர் என்னிடம் கூறினார்.

அன்றில் இருந்து வறிய மக்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்து, குடும்பவாதத்தில் இருந்து மக்களை மீட்டெடுத்து, மக்கள் மத்தியில் இருந்து சஜித் பிரேமதாஸ தலைவராக உருவாகியுள்ளார்' -என்றார். (ம-22)

## பாதுகாப்பைப்....

முன்னாள் இராணுவத் தளபதியான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவுக்கு வழங்கப்படும் - இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான தேசிய ஜனநாயக முன்னணியின் அரச தலைவர் வேட்பாளர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

தனக்கு ஆதரவு தெரிவித்து கொழும்பு, காலிமுகத்திடலில் நேற்று நடைபெற்ற முதலாவது முக்கிய பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

'தேசிய பாதுகாப்பு குறித்து சொல்ல வேண்டும். அதனை உறுதிப்படுத்த போரை வெற்றி கொண்டவர்களுக்கே அந்தப் பொறுப்பை நாங்கள் வழங்க வேண்டும். தன்னைத் தியாகம் செய்து நேரடியாகப் போரை வென்ற பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவுக்கு இந்த நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் பொறுப்பு வழங்கப்பட வேண்டும். அவர் கார்ட்போர்ட் வீரர் அல்லர். அவர் நாட்டுக்கு ஆற்றிய பணியைப் பெருமைப்படுத்தி நாங்கள் தேசிய பாதுகாப்பைப் பலப்படுத்தும் - உறுதிப்படுத்தும் பொறுப்பை அவரிடம் வழங்குவோம்.

எமது ஆட்சியில் எந்த அரசியல்வாதிகளுக்கும் ஜம்பர் அணிவிக்க மாட்டோம். அதை நீதிமன்றம் செய்யும். ஆனால், பயங்கரவாதத்தை நாங்கள் இல்லாமல் ஆக்குவோம். போதைப்பொருள் ஒழிப்பை நாங்கள் மேற்கொள்வோம். போதைப்பொருள் வர்த்தகர்களுக்கு உரிய தண்டனை வழங்குவோம்' - என்றார். (ம-22)

## சிறுவனின்...

நேற்று உயிரிழந்தார். அவருக்கு வயது 7. பெற்றோர், உறவினர்கள் மருத்துவமனையை முற்றுகையிட்டமையால் அங்கு நேற்று சிறு பதற்றமான சூழ்நிலை நிலவியது.

சம்பவம் தொடர்பில் உயிரிழந்த சிறுவனின் தாயார் தெரிவித்ததாவது:

என் மகனின் காலில் சிறிய பரு ஒன்று காணப்பட்டது. அது எவ்வாறு வந்தது என மகனிடம் கேட்டேன். அதற்கு நண்டு குத்தியது என்று சொன்னான். பின் நான் அவனுக்கு சாப்பாடு கொடுத்தேன். அதன் பின்னர் என் பிள்ளை மிகவும் இயலாமல் காணப்பட்டதுடன், அவனது மலம் கறுப்பாக போனதை அவதனிக்க கூடியதாக இருந்தது. ஒரு கட்டத்தில் என் பிள்ளையின் உடல் எங்கும் நீல நிறமாக மாறியதால் நான் பதற்றமடைந்து காலை 3.30 மணியளவில் மருத்துவமனையில் சேர்த்தேன் என்றார்.

இது தொடர்பில் வவுனியா மருத்துவமனை வட்டாரத்துடன் தொடர்புகொண்டு கேட்டபோது: குறித்த சிறுவன் அனுமதிக்கப்படும்போது உடல் முழுவதும் நீல நிறமாகக் காணப்பட்டது. மிகுந்த ஆபத்தான நிலையிலே அதிகாலை 3.30 மணிக்கு மருத்துவமனையில் சேர்த்தனர். அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் சிறுவன் சேர்க்கப்பட்டார். நான்கு மணி நேரத்தின் பின்னர் இறந்துள்ளார். இது தெடர்பான மேலதிக தகவல்களை குறித்த சிறுவனின் உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னரே தெரிவிக்க முடியும் -என்றனர். (ம-110)

## சுற்றாடலை...

தெரிவித்தார்.

கொழும்பு - கோட்டை அரச தலைவர் மாளிகையில் நேற்று இடம்பெற்ற சுற்றாடல் முன்னோடிகளுக்கு பதக்கம் அணிவிக்கின்ற நிகழ்வில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

காடுகளை பாதுகாத்தல், மரம் நடுதல் மற்றும் சுற்றாடல் மீது கரிசனை கொள்ளுதல், மரம், செடிகொடிகள், உயிரினங்கள் உட்பட பூமித் தாயை நேசிப்பது, அதனை வளப்படுத்துவது என்பன மனிதர்கள் என்ற வகையில் எம்மீதுள்ள அடிப்படை பொறுப்பும் கடமையுமாகும். சுற்றாடலை நேசிக்கும் தலைவர் என்ற வகையில் சுற்றாடலை பாதுகாப்பதற்காக நான் கடந்த 5 வருட காலப்பகுதியில் முக்கியமான பல பணிகளை மேற்கொண்டுள்ளேன். அதிகாரத்துக்கு வருகின்ற தலைவர்கள் சுற்றாடலைப் பாதுகாப்பதற்கு கடும் முனைப்புடன் செயற்பட வேண்டும். அவர்களின் வாக்குறுதிகள் தேர்தல் மேடைகளுடன் மட்டுப்படுத்தப்படக்கூடாது - என்றார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகாதேவா இல்ல மாணவர்கள் 62 பதங்கங்களை வென்றனர்



யாழ்ப்பாணம்.ஒக்.11
இலங்கை தேசிய கராத்தே தோ சம்மேளனத்தால் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடத்தப்பட்ட வட மாகாண கராத்தே போட்டியில் மகாதேவா சுவாமிகள் இல்லத்தைச் சேர்ந்த காரத்தே அணியினர் 30 தங்கம்,17 வெள்ளிப் பதக்கங்கள் உட்பட 62 பதக்கங்களைக் கைப்பற்றினர். (23)

## போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம்.ஒக்.11
மன்னார் கால்பந்தாட்டலீக்கினால் அங்கத்துவக் கழகங்களுக்கு இடையில் நடத்தப்படும் எடிசன் சுற்றுக் கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் இடம்பெற்று வருகின்றது.

இதில் நேற்று முன்தினம் புதன்கிழமை பிற்பகல் 3மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் சென்.லூட்சியா விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து தேவன்பிட்டி சென்.சேவியர் விளையாட்டுக்கழக அணி மோதியது. ஆட்ட நேரமுடிவில் இரு அணிகளும் தலா ஒவ்வொரு கோலைப் பதிவு செய்ய ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதற்காக சமநிலை தகர்ப்பு உதை வழங்கப்பட்டது. இதில் சென்.லூட்சியா விளையாட்டுக்கழக அணி 4:3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

மற்றுமொரு ஆட்டத்தில் சென்.லூட்சியாபாடசாலை அணியை எதிர்த்து பெரிய பண்டிவிரிச்சான் வள்ளுவர் விளையாட்டுக்கழக அணி மோதியது. இதில் சென்.லூட்சியாபாடசாலை அணி 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (23)

---

யாழ்ப்பாணம் ஒக்.11
உரும்பிராய் திருக்குமரன் விளையாட்டுக்கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றது.

சுப்பர் 8 சுற்றின் ஆட்டங்கள் உரும்பிராய்திருக் குமரன் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றது. நேற்று வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு இடம் பெற்ற ஆட்டத்தில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நாவற்குழி அன்னை விளையாட்டுக் கழக அணி மோதியது. இதில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழக அணி 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. மற்றுமொரு ஆட்டத்தில் பாசையூர் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழக அணி மோதியது. இதில் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழக அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (23)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்.ஒக்.11
வடமராட்சி கால்பந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் மனோகரா விளையாட்டுக்கழகம் நடத்தும் அணிக்கு 11 வீரர்கள் பங்கு பற்றும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் இன்று வெள்ளிக்கிழமை மனோகரா விளையாட்டுக் கழக மைதானத்தில் ஆரம்பமாகின்றது.

இதில் பிற்பகல் 3மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பொலிகை பாரதி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து அண்ணா சிலையடி விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (23)

## சாவகச்சேரி இந்து கராத்தே அணி 27 பதக்கங்களை கைப்பற்றியது

யாழ்ப்பாணம்.ஒக.11
இலங்கை தேசிய கராத்தே தோ சம்மேளனத்தால் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடத்தப்பட்ட வட மாகாண கராத்தே போட்டியில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி காரத்தே அணியினர் 16 தங்கம்.11 வெள்ளிப் பதக்கங்கள் உட்பட 27 பதக்கங்களைப் பெற்றுள்ளனர்.(23)



## செஞ்சோலை சிறுவர் இல்லம் 25 பதக்கங்களை வென்றது

இலங்கை தேசிய கராத்தே தோ சம்மேளனத்தால் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடத்தப் பட்ட வட மாகாண கராத்தே போட்டியில் செஞ்சோலை சிறுவர் இல்லத்தைச் சேர்ந்த காரத்தே அணியினர் 25 பதக்கங்களைக் கைப்பற்றினர்.(23)



### யாழ். இந்து மாணவன்

## நவின் நித்தேஷுக்கு தங்கம், வெள்ளி



யாழ்ப்பாணம்.ஒக்.11
இலங்கை தேசிய கராத்தே தோ சம்மேளனத்தால் நடத்தப்பட்ட வடமாகாண கராத்தே சுற்றுப் போட்டியில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மாணவன் நவின் நித்தேஷ் தங்கம்.வெள்ளிப்பதக்கங்களைக் கைப்பற்றினார்.

கடந்த வாரம் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெற்ற வட மாகாண கராத்தே போட்டியில் 12 வயதுப் பிரிவு ஆண்களுக்கான குமித்தே போட்டியில் நவின் நித்தேஷ் தங்கப் பதக்கத்தையும், காட்டா போட்டியில் வெள்ளிப் பதக்கத்தையும் கைப்பற்றினார். (23)

## நடுவர் பரீட்சை

யாழ்ப்பாணம்.ஒக்.11
இலங்கை வலைப்பந்தாட்ட நடுவர் தரப்படுத்தலுக்கான பரீட்சை நடைபெறவுள்ளது.

இந்தப் பரீட்சைக்கு தோற்றவிருக்கும் பரீட்சார்த்திகளுக்கான கலந்துரையாடல் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் இடம்பெறும். இதன் பெறுபேறுகளை எதிர்வரும் 20ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு யாழ். மாவட்ட வலைப்பந்தாட்டச் சங்கத்தின் செயலர் த.அபிதா அறிவித்துள்ளார். (422)

# கொற்றாவத்தை றேஞ்சஸ் அடுத்த சுற்றுக்குத் தகுதி

கொடுக்குளாய் சக்திவேல் விளையாட்டு கழகம் நடத்தும் வடக்கு மாகாண அணிகளுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடரில் கொற்றாவத்தை றேஞ்சஸ் அணி வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது.

குறித்த கழக மைதானத்தில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் கொற்றாவத்தை றேஞ்சஸ் அணியை எதிர்த்து வத்திராயன் உதய சூரியன் அணி மோதியது.

முதல் பாதியாட்டத்தில் கொற்றாவத்தை றேஞ்சஸ் அணி வீரர் ஆர்த்திகனின் ஆட்டத்தை கட்டுப்படுத்த முடியாமல் உதயசூரியன் அணியினர் திணறினர். 6ஆவது மற்றும் 13ஆவது நிமிடங்களில் ஆர்த்திகன் இரு கோல்களை போட முதல் பாதி ஆட்டத்தில் கொற்றாவத்தை றேஞ்சஸ் அணி 2:0 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தனர்.

இரண்டாவது பாதியாட்டத்திலும் கொற்றாவத்தை றேஞ்சஸ் அணி ஆதிக்கம் மேலோங்கி காணப்பட்டது. கொற்றாவத்தை றேஞ்சஸ் அணி வீரர்கள் போட்டி ஆரம்பித்த 8ஆவது நிமிடத்தில் சுஜாஸ் ஓர் கோலையும், 11ஆவது நிமிடத்தில் வர்மன் ஓர் கோலையும் போட்டனர். ஆட்ட நேர முடிவில் கொற்றாவத்தை றேஞ்சஸ் அணி 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறினர். ஆட்ட நாயகனாக கொற்றாவத்தை றேஞ்சஸ் அணி வீரர் ஆர்த்திகன் தெரிவு செய்யப்பட்டார். (422)



## வலைப்பந்தாட்ட பயிற்சி முகாமும், பரீட்சையும்



யாழ்ப்பாணம்.ஒக்.11
இலங்கை வலைப்பந்தாட்டச் சங்கம் நடத்தும் வலைப்பந்தாட்ட பயிற்றுவிப்பாளர்களுக்கான பயிற்சி முகாமும், பரீட்சையும் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்கான விண்ணப்ப முடிவுத் திகதியாக எதிர்வரும் 14ஆம் திகதி அறிவிக்கப்பட்டுள்ளது. ஆரம்ப கட்டம், முதலாம் கட்டம், இடைமத்திய, உயர்பாட நெறி என நான்கு பகுதிகளாக நடைபெறவுள்ளது.

பங்குபற்ற விரும்புவோர் யாழ்.மாவட்ட வலைப்பந்தாட்டச் சங்கத் தலைவர் பா. உதயசுதர்சினி, செயலர் அபிதா ஆகியோருடன் தொடர்பு கொண்டு விண்ணப்ப படிவங்களை பெற்றுக் கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (422)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## கரப்பந்தாட்ட பரீட்சை முடிவுகள்

யாழ்ப்பாணம்,ஒக்.11
வடக்கு மாகாண கரப்பந்தாட்ட மத்தியஸ்தர் சங்கம், கிளிநொச்சி மாவட்ட கரப்பந்தாட்டச சங்கமும் இணைந்து நடத்திய கரப்பந்தாட்ட மத்தியஸ்தர்களுக்கான பரீட்சை முடிவுகள் வெளியாகியுள்ளன.

**யாழ்ப்பாணம்**
எஸ்.சாகித்தியன், பி.சசிதரன்,எஸ். நிசாந்தன்.ஆர்.நிருஜன்.எம்.வாகீசன், எ.சிந்துஜன்.எஸ்.விமோசன்,எஸ்.கபிலக்சன்.எஸ்.புவிந்தன்.எஸ்.ஜசோகுலன்.எம்.டினுசன்,எஸ்.ஜெவிந்தன்.எஸ்.சனோசன்,ஜே.ஹரிதாஸ்,எஸ்.மோகனராஜா.எஸ்.கோகிலதாஸ்,எஸ்.தயாளபாலன்,வி.விஜிதரன்,ரி.சிறிசங்கர்.ஆர்.ராகுலன்,எஸ்.யசீலன், எஸ்.ஜேயப்பிரதாபன்,யு.றொகான்ராஜ்.பி.நிஜாந்.வி.கோகுலதாஸ்.

**கிளிநொச்சி**
ஜே.தாரனி.ஐ.யகீகரன்,எஸ்.பிரசாந்த்.ஆர்.ஜனகன்,கே.மோகன்ராஜ்,என்.யாழினி,கே.மலரவன், கே.செல்வக்குமார்.

**முல்லைத்தீவு**
ஜே.தனுசியா, ரி.ராகவன், எஸ்.சுஜிபவன்.எஸ்.நிஜோபவன்,வி.கபிராஜன்,வை.சுதாகர்,எஸ்.மிராஜ்,எ.சுரேஸ்,வவுனியா மாவட்டம் கே.கார்திக்ராஜா,எஸ்.வசந்தரூபன்,எம். றொபேட் ஜோன்சன்.

**மன்னார்**
ரி.நிஜாமுலின.

**பொலநறுவை**
எஸ். கேமநாதன். (23)



## கிண்ணத்தைக் கைப்பற்றியது சரஸ்வதி வித். ஆசிரியர் அணி

வவுனியா,ஒக்.11
ஆசிரியர் தினத்தை முன்னிட்டு வவுனியா வடக்கு கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் சங்கம் நடத்தும் வவுனியா வடக்கு கல்வி வலயத்துக்கு உட்பட்ட ஆசிரியர்களுக்கான வலைப்பந்தாட்டப் போட்டியில் சுந்தரபுரம் சரஸ்வதி வித்தியாலய ஆசிரியர் அணி கிண்ணத்தைக் கைப்பற்றியது.
இதன் இறுதியாட்டம் நேற்று வியாழக்கிழமை வவுனியா புதுக்குளம் மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது. இதில் சுந்தரபுரம் சரஸ்வதி வித்தியாலய அணியை எதிர்த்து கல்மடு மகா வித்தியாலய ஆசிரியர் அணி மோதியது.
ஆட்டம் ஆரம்பம் முதல் ஆதிக்கம் செலுத்திய வவுனியா சுந்தரபுரம் சரஸ்வதி வித்தியாலய அணி 18:4 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று கிண்ணத்தைக் கைப்பற்றியது.
வவுனியா வடக்கு கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் சங்கத்தின் தலைவர் அ.அமலேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வவுனியா மாவட்டச் செயலக உதவி மாவட்டச் செயலர் நா.கமலதாசன், சிறப்பு விருந்தினராக வவுனியா மாவட்ட பூப்பந்தாட்ட பயிற்றுநர் த.கமலன், மதிப்புறு விருந்தினராக எஸ். ஜெ.ஆர். கட்டுமான நிறுவன பணிப்பாளர் சி.சந்திரசேகர் ஆகியோர் கலந்து கொண்டனர். (422)

## ஹட்லியைஸ் – ஜொலிஸ்ரார் இறுதியில் பலப்பரீட்சை

யாழ்ப்பாணம்,ஒக்.11
இலங்கை கிரிக்கெட் சபையால் நடத்தப்படும் பிரிவு மூன்றுக்கான 50 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட கடினப்பந்து துடுப்பாட்டத் தொடரின் இறுதியாட்டம் நாளை சனிக்கிழமை யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது. இறுதியாட்டத்தில் ஹட்லியைஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.
இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக என். வித்தியாதரன் கலந்து கொள்ளவுள்ளார். (23)

## யாழ். போதனா வைத்தியசாலை அணி கிண்ணம் வென்றது

யாழ்ப்பாணம்,ஒக்.11
உலக அஞ்சல் தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் அஞ்சல் விளையாட்டுக்கழக அணி திணைக்களங்களுக்கு இடையில் நடத்திய கரப்பந்தாட்டத் தொடரில் யாழ்ப்பாண போதனா வைத்தியசாலை அணி கிண்ணம் வென்றது.
கடந்த வாரம் யாழ்ப்பாண தபாலக மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் யாழ்ப்பாண தபாலக அணியை எதிர்த்து யாழ்ப்பாண போதனா வைத்தியசாலை அணி மோதியது. 5 செற்களைக் கொண்டதாக இறுதியாட்டம் இடம்பெற்றது. இதில் யாழ்ப்பாண போதனா வைத்தியசாலை அணி 3:2 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று மகுடம் சூடியது. (23)



## குத்துச்சண்டை பயிற்சியும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும்



வவுனியா,ஒக்.11
அகில இலங்கை ரீதியில் பிரெஞ்சு சவாட் குத்துச்சண்டை பயிற்றுவிப்பாளர்களுக்கான பயிற்சியும், குத்துச்சண்டை பயிற்றுவிப்பதற்கான அரச அங்கிகாரத்துடனான சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் நேற்றுமுன்தினம் கொழும்பு தேசிய விளையாட்டு விஞ்ஞானத்துறை நிறுவனத்தில் நடைபெற்றது.
இலங்கை பிரெஞ்சு சவாட் தேசிய சம்மேளத்தின் தலைவர் பிரசாத் விக்கிரமசிங்க தலைமையில் நிகழ்வுகள் நடைபெற்றது.
இந்த நிகழ்வுக்கு விருந்தினர்களாக பண்ணாட்டு விளையாட்டு விஞ்ஞானத்துறை நிறுவனத்தின் பணிப்பாளர் சஜித் ஜெயலால், விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்தின் பணிப்பாளர் ஆர்.வி.விக்கிரமசிங்க ஆகியோர் கலந்து கொண்டனர்.
இதில் அகில இலங்கை ரீதியாக 45 பிரெஞ்சு சவாட் குத்துச்சண்டை பயிற்றுவிப்பாளர்கள் கலந்து கொண்டு கடந்த ஒருவார காலம் விசேட பயிற்சிகளைப் பெற்றனர்.
கிக் பொக்சிங் இலங்கை தேசிய சங்கத்தினதும், இலங்கை தொலைத் தொடர்பாடல் வேலை வாய்ப்பு மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் ஊடாகபிரெஞ்சுசவாட் குத்துச்சண்டை பயிற்றுவிப்பாளர்களுக்கான 'டிப்ளோமா' சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.
வடக்கு மாகாணத்தின் சார்பாக வவுனியா ஏழாம் அறிவு தற்காப்பு கலை சங்கத்தின் ஆறு பயிற்றுவிப்பாளர்கள் 'பிரெஞ்சு சவாட் குத்துச்சண்டை பயிற்றுவிப்பாளர்களுக்கான சான்றிதழ்களைப் பெற்றுக் கொண்டனர். (110)

## கோக்லி அணித் தலைவராக 50ஆவது டெஸ்ட்போட்டியில்



அணித் தலைவராக 50 ஆவது டெஸ்ட் போட்டியில் விராட் கோக்லி நேற்றை போட்டியில் களமிறங்கியதன் மூலம், முன்னாள் அணித் தலைவர் டோனியின் சாதனையுடன் இணைந்துள்ளார்.
இந்தியாவுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள தென் னாபிரிக்க அணி 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. முதல் போட்டியில் இந்திய அணி வெற்றி பெற்றது.
இந்த நிலையில் இரு அணிகளுக்குமிடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டி நேற்று ஆரம்பமாகியது.
இந்தப் போட்டி கோக்லி அணித் தலைவராகக் களமிறங்கும் 50ஆவது டெஸ்ட் போட்டி ஆகும். இதன்மூலம், 50 டெஸ்ட் போட்டிகளை வழிநடத்திய இந்திய அணித் தலைவர் வரிசையில் அவர் இரண்டாவதாக இணைந்துள்ளார். 60 டெஸ்ட் போட்டிகளில் அணித் தலைவராக பணியாற்றிய டோனி முதலிடத்தில் உள்ளார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இந்தியா நேற்று வலுவான நிலை





தென்னாபிரிக்காவுக்கு எதிரான 2ஆவது டெஸ்ட் போட்டியின் முதல் நாள் ஆட்ட முடிவில் மயங்க் அகர்வாலின் சதத்தால் இந்திய அணி 3 இலக்கு இழப்புக்கு 273 ஓட்டங்களைப் பெற்று வலுவான நிலையில் காணப்படுகின்றது.

தென்னாபிரிக்கா அணி இந்தியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு 3 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி வருகின்றது. முதல் டெஸ்ட் போட்டியில் இந்திய அணி வெற்றி பெற்றது.

இரு அணிகளுக்குமான இரண்டாவது போட்டி நேற்று புனேயில் ஆரம்பமாகியது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. ஆரம்பத்துடுப்பாட்டவீரர்களாக ரோகித் சர்மாவும், மயங்க் அகர்வாலும் களமிறங்கினர். முதல் டெஸ்டில் இரு இன்னிங்ஸிலும் சதமடித்த ரோகித் 14 ஓட்டங்களில் ஆட்டமிழந்து பவலியன் திரும்பினார். அடுத்து இறங்கிய புஜாரா, அகர்வாலுக்கு ஒத்துழைப்பு அளித்தார். இருவரும் சேர்ந்து நிதானமாக ஆடினர். இருவருக்குமான இணைப்பாட்டமாக 138ஓட்டங்கள் பகிரப்பட்டன.



அரைச் சதமடித்த புஜாரா 58 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். இரண்டாவது டெஸ்டிலும் மயங்க் அகர்வால் பொறுப்புடன் ஆடி அசத்தினார். அவர் தனது இரண்டாவது சதத்தைப் பதிவு செய்து 108 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேறினார்.

அடுத்து களமிறங்கிய கோக்லியும், ரகானேவும் பொறுமையாக ஆடி மேலும் இலக்குகள் இழக்கப்படாது பொறுமையுடன் ஆடினர். கோக்லி தனது அரைச் சதத்தைத் பூர்த்தி செய்தார்.

முதல் நாள் முடிவில் இந்திய அணி 3 இலக்குகளை இழந்து 273 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தை இடைநிறுத்தியது. கோக்லி 63 ஓட்டங்களுடனும், ரகானே 18 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர்.பந்து வீச்சில் ரபாடா 3 இலக்குகளைக் கைப்பற்றினார்.

## புஜாராவை திட்டினாரா ரபாடா ?



தென்னாபிரிக்க வேகப்பந்து வீச்சாளர் ரபாடா, இந்திய வீரர் புஜாராவின் கவனத்தைத் திருப்பும் முயற்சியாக ஸ்லெட்ஜிங் செய்ததாகவும் ஆனால் தான் அதனைக் கண்டுகொள்ளவில்லை என்றும் கூறினார் புஜாரா.

புஜாரா ஓட்டமெதனையும் பெறாது இருந்த போது பிடியெடுப்பு ஒன்று நழுவ விடப்பட்டதன் வெறுப்பை புஜாரா ஆட்டமிழந்தவுடன் சில வார்த்தைகளை தனக்குள்ளே முனுமுனுத்துக் கொண்டார் ரபாடா.

சரி, ரபாடா கூறியது என்ன? என்று புஜாராவிடம் கேட்ட போது அவர் தெரிவிக்கையில்

அவர் கூறியது என் நினைவில் இல்லை, ஆனால் ரபாடா துடுப்பாட்ட வீரர்களை நோக்கி சில வார்த்தைகளைப் பிரயோகிக்கக் கூடிய வீரர்தான்.

ஒரு துடுப்பாட்ட வீரராக ரபாடா என் கவனத்தை திருப்ப முயல்வார் என்பது எனக்கு தெரியும், அவர் மட்டுமல்ல எந்த ஒரு பந்து வீச்சாளரும் செய்யக்கூடியதுதான், அவர் ஏதாவது கூறுவார் ஆனால் நான் கண்டுகொள்ளவில்லை.

நாம் நம் வேலையில் கவனமாக இருந்தால் அவர்கள் என்ன கூறுகிறார் என்பது நம் காதுகளில் விழாது. ஆகவே நம் கவனத்தில் நாம் இருந்தால் அவர்கள் கூறுவதை பெரும்பாலும் நாம் கண்டு கொள்ள மாட்டோம் - என்றார்.

அமெரிக்க லொத்தர் இலவச விசா
பதிவுகள் ஆரம்பமாகிவிட்டன
2021ல் நீங்களும் அமெரிக்காவில்..
18 வயதிற்கு மேற்பட்ட யாரும் தனியாக விண்ணப்பிக்கலாம்
0768226241

V2 Travels
யாழ்ப்பாணம் 0768226243 | கிளிநொச்சி 0768226240
நெல்லியடி 0776699892 | சாவகச்சேரி 0768226242
திருகோணமலை 0768226237 | மானிப்பாய் 0768226238
சுன்னாகம் 0764550670 | கொடிகாமம் 0764550675
புதுக்குடியிருப்பு 0764550673 | மருதங்கேணி 0764550671
பருத்தித்துறை 0768226230 | வல்வெட்டித்துறை 0776697960


போட்டிப்பரீட்சை வகுப்புக்கள்
SLAS
சனி, ஞாயிறு
9.00 - 3.30
கணக்காளர் சேவை
சனி, ஞாயிறு
9.00 - 4.00
தொடர்புகளுக்கு
076 688 3394
யாழ்ப்பாணக்கல்லூரி பட்டப்படிப்புக்கள் பிரிவு
(யாழ்.ஆஸ்பத்திரி வீதியில பஸ்நிலையத்திலிருந்து 100m தூரத்தில்)

SLAS
Open/Limited
உமாசங்கர் & வளவாளர்கள்
கருத்தரங்கு தொடர் 23
விசேட விரிவுரை
பொது அறிவும், நுண்ணறிவும்
12.10.2019 சனி
9.00 am - 5.00 Pm
"முற்றிலும் எதிர்பார்க்கை விடயங்களுடன்"
GK. இலவச நூல் பெற்றுக்கொள்ளலாம்.
NEC
076 166 1986, 077 741 7143

SLAS
Open/Limited
உமாசங்கர்&வளவாளர்கள்
கருத்தரங்கு தொடர் 24
உமாசங்கர்
13/10/2019 ஞாயிறு
9am- 5.00 pm
"முற்றிலும் எதிர்பார்க்கை விடயங்களுடன்"
GK. இலவச நூல் பெற்றுக்கொள்ளலாம்.
நாவலர் கல்வி நிலையம்
076 166 1986, 077 741 7143

வாடகைக்கு
பணிபுரியும் பெண் ஒருவரிற்கு ஏற்ற தனிஅறை வெள்ளவத்தை தொடர்மாடியில் வாடகைக்கு உண்டு.
070 386 9599

## மரண அறிவித்தல்



தோற்றம் 14 . 07 . 1951

மறைவு 09 . 10 . 2019

### சுப்பிரமணியம் தெய்வேந்திரராசா

(முன்னாள் சீநோர் நிறுவன ஊழியர்)

அளவெட்டி மத்தி அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் சண்டிலிப்பாய் மத்தி சண்டிலிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் தெய்வேந்திரராசா நேற்று முன்தினம் (09.10.2019) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - தங்கமணி தம்பதியரின் அன்பு மகனும், சொர்ணவடிவேல் (மாசிலாமணி) - காலஞ்சென்ற அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், மங்கையற்கரசியின் பாசமிகு கணவரும், காலஞ்சென்றவர்களான கமலாம்பாள், சற்குணராசா மற்றும் கௌசலாதேவி, குகராசா ஆகியோரின் பாசமிகு சகோதரரும், லம்போதரனின் பாசமிகு தந்தையும், விக்கினேஸ்வரி (திலகம்), காலஞ்சென்ற மீனலோயினி மற்றும் மதிவதனா, புவனேஸ்வரன், செல்வராசா, பூலோகராணி, புவனேஸ்வரி ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், ஜெயராஜா, யோகரத்தினம் (குஞ்சன்), செந்தில்நாதன் ஆகியோரின் உடன்பிறவா சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.10.2019) வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சண்டிலிப்பாய் மத்தி,
சண்டிலிப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்.

021 224 0112

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிரைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 11.10.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org